தர்மசக்கரம்



சித்தார்த்தி ௵ ஆடி ௴ சக்கரம் 28 ஆரம் 7

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை-639 115 திருச்சி ஜில்லா.

handra arts

ஸ்ரீ தாயுமான சுவாமி கோயில் திருப்பணி

ஸ்ரீ தாயுமான சுவாமிகள் கோயில் திருப்பணிக்குத் தொகை சுமார் ஆறு இலட்சம் ரூபாய் ஆகும் என மதிப்பிடப்பட்டிருந்தது. ஜூன் மாதத்தில் வந்துள்ள நன்கொடைகளின் தொகை இப்பொழுது இவ்விதழில் வெளியிடப்படுகிறது. கட்டட வேலை தொடர்ந்து நடைபெறுகிறது.

1979 ஜூன் மாத நன்கொடை விவரம்

தேதி	விலாசம்		ரூபாய்
	மே மாதம் முடிய நன்கொடை வசூல்		3 43 234
2-6-79	ஸ்ரீ K. முத்துசாமி கவுண்டர்	வாழைத்தோட்டம், ஈரோடு	101
3-6-79	,, குமரனடிமை	ஹோசூர்	101
4-6-79	,, பெ. க. பெரியண்ணக் கவுண்டர் குடும்பத்தார்	செங்குட்டபாளையம், கோவை	5 005
	,, ஆ. முருகேசன் கம்பெனி	ஈப்போ, மலேசியா	102
	,, நா. துரைராசு செட்டியார்	,, ,,	102
	,, M.R.T. ராமசந்திரன் கம்பெனி	,, ,,	102
	,, கா. வில்வநாதன்	,, ,,	102
	,, ஆ. சுப்பிரமணியன் செட்டியார் என்ற கிருஷ்ணன் செட்டியார்	பரமகுடி, இராமநாதபுரம்	102
	,, S. கோவிந்தன்	வெளிப்பட்டணம் ,,	102
	,, T.K. வெள்ளச்சாமி	தேனாடுஊர், நீலகிரி	101
	,, N.V. லக்ஷ்மி அம்மாள், சன்மார்க்க மாதர்சங்கம்	கோவை	101
	,, C.K. ரங்கசாமி	சுண்டப்பாளையம், கோவை	100
	ஓர் அன்பர்		100
6-6-79	ஸ்ரீ V. மாணிக்கம்	சௌத் இந்தியா கார்ப்பரேஷன் கொச்சி	251
13-6-79	,, V. வடிவேலு	சிங்கல்லூர், வண்டிப்பெரியாறு, கேரளா	201
15-6-79	ஸ்ரீமதி P. அன்னபூரணி	பொள்ளாச்சி	101
19-6-79	அமரர் ஸ்ரீ T.S. காமாட்சி கவுடர்	கம்பம்	1 001
	ஸ்ரீ S.K. கணேச முதலியார் & ஸ்ரீ K. பாலகிருஷ்ண உடையார்	காவேரிநகர், மாயூரம்	202
	,, N.R. அச்சன்	சுங்கைபட்டாணி, மலேசியா	100
20-6-79	ஸ்ரீமதி பொன்னம்மாள் காசியம்மாள் வெல்பேர் டிரஸ்ட்	தூத்துக்குடி	1 000
	ஸ்ரீ K.S.P. நடராஜன் டிரஸ்ட்	,,	1 000
22-6-79	ஸ்ரீ J. ஹனுமந்த ராவ்	வில்லிவாக்கம், சென்னை	101
23-6-79	,, M. ஞானசேகரன்	சுந்தரபாண்டியம், இராமநாதபுரம்	501
28-6-79	,, A.R.P.N. அழகப்பநாடார் & பிரதர்ஸ்	ஜார்ஜ்ரோடு, தூத்துக்குடி	250
30-6-79	,, P. கிருஷ்ணமூர்த்தி	வையாபுரிநாடார் தெரு, விருதுநகர்	100
	,, கூ. மாரிமுத்து	ஷண்முகநாடார் தெரு, ,,	100
	,, R. சங்கரசுப்பிரமணியன்	அருப்புக்கோட்டை	100
	M/s. சதர்ன் டிரேடிங் கம்பெனி	ஹைரோடு, திருநெல்வேலி	100
	ஸ்ரீ P.P.K. ரத்தினம்	சிவகாசி	100
	ரூ 100க்கு கீழ்வந்த நன்கொடை மொத்தம்		1 671
		ஆகக் கூடுதல்	ரூ. 3 56 334

தர்ம சக்கரம்

மாத சஞ்சிகை

சக்கரம் 28	சித்தார்த்தி ஹூ ஆடி மீ	ஆரம் 7

பொருளடக்கம் பக்கம்

சந்தா விவரம்

டிபாஸிட் சந்தா: ரூ. 100 அனுப்பி இங்கு டிபாஸிட் செய்துவிட்டால் டிபாஸிட் இங்கு இருக்கும் வரையில் மாதந்தோறும் தர்ம சக்கரப் பத்திரிகை தங்களுக்கு வந்து கொண்டிருக்கும். ஆண்டுதோறும் சந்தாச் செலுத்திப் புதுப்பிக்கவேண்டியதில்லை. பத்திரிகை வேண்டாம் என்று கருதும்பொழுது டிபாஸிட் செய்த ரூபாய் நூறையும் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். தாங்கள் டிபாஸிட் செய்யும் தொகையை பேங்கில் இருப்பாக வைத்து அதினின்று கிடைக்கும் வட்டி சந்தாவுக்காக எடுத்துக்கொள்ளப் படுகிறது. இந்தத் திட்டம் உள்நாட்டுக்கு மட்டும் உரியது.

ஆண்டு சந்தா: ரூ. 10 செலுத்தியது முதல் அல்லது அடுத்த மாதம் முதல் பன்னிரண்டு மாதங்களுக்கு ஒவ்வொரு தமிழ் மாதமும் முதல் தேதியில் கிடைக்குபடிம் பத்திரிகை அனுப்பப்படுகிறது.

சகாய சந்தா: தர்ம சக்கரம் அடக்க விலைக்கு வெளியிடப்படுகிறது. ஆண்டு சந்தா ரூபாய் பத்துச் செலுத்த இயலாதவர்கள் ரூபாய் ஐந்து மட்டும் அனுப்பலாம். பாக்கி ரூபாய் ஐந்தைப் பாண்டிச்சேரி S. விஸ்வநாதன் 'தர்ம சக்கர உதவி நிதி' யினின்று ஈடு செய்து கொள்கிறோம். தெய்வீக விஷயமாதலால் ரூபாய் பத்துச் செலுத்த இயலுகிற வர்கள் இந்தச் சலுகையைப் பயன்படுத்த வேண்டாம்.

இலவச சந்தா: தமிழ் நாட்டிலும் பாண்டிச்சேரியிலும் அரசாங்கத்தால் 1496 பொது நூலகங்கள் அமைக்கப்பெற்றுள்ளன. அன்பர்களின் உதவியால்அவை அனைத்துக்கும் தர்ம சக்கரம் இனமாகத் தொடர்ந்து அனுப்பப்பெற்று வருகிறது. நூலக நிர்வாகியிடம் கேட்டுப் பெற்றுப் படித்துப் பயனடையக் கோருகிறோம்.

உள்நாடு தனி இதழ் ரூ. 1-00. வெளிநாடு வருட சந்தா ரூ. 20-00

அந்தர்யோக விவரங்கள்

திருநெல்வேலி ஜில்லா—கோவில்பட்டியில் 22—7—79 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ரயில்வே ஸ்டேஷனுக்கருகிலுள்ள லாயல்மில் ஆரம்பப்பாடசாலை

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி ஆத்மானந்தர்

ராமநாதபுரம் ஜில்லா—விருதுநகரில் 29—7—79 ஞாயிற்றுக்கிழமை

இடம்: பெரியகாளி அம்மன் கோவில்

நேரம்: காலை 9-30 மணிமுதல் மாலை 4-30 மணி வரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

திருநெல்வேலி ஜில்லா—பாளையங்கோட்டையில் 29—7—79 ஞாயிற்றுக்கிழமை

இடம்: பெருமாள் கீழரதவீதி M. மணகாவலம்பிள்ளை கல்யாண மண்டபம்

நேரம்: காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணி வரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி அசலானந்தர்

ராமநாதபுரம் ஜில்லா—அருப்புக்கோட்டையில் 5—8—79 ஞாயிற்றுக்கிழமை

இடம்: தூத்துக்குடி இந்து நாடார் நடுநிலைப்பள்ளி

நேரம்: காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணி வரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி அசலானந்தர்

திருச்சி ஜில்லா—கரூரில் 12—8—79 ஞாயிற்றுக்கிழமை

இடம்: பசுபதிபாளையம், விவேகானந்த கல்வி நிலையம்

நேரம்: மாலை 5-00 மணிமுதல் 7-30 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்

மதுரை ஜில்லா—திருமங்கலத்தில் 12—8—79 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ ராமகிருஷ்ண-விவேகானந்த தபோவனம்

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-15 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி அசலானந்தர்

ராமநாதபுரம் ஜில்லா—சிவகாசியில் 18—8—79 சனிக்கிழமை

இடம்: வெள்ளையாபுரம் ரோட்டிலுள்ள ஸ்ரீ சாரதா ஆச்ரமம்

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

உணவு வசதி: நேரில் ரூ. 1-00 செலுத்தி சீட்டுப்பெற்றுக்கொள்ளலாம்.

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

ராமநாதபுரம் ஜில்லா—ராஜபாளையத்தில் 19—8—79 ஞாயிற்றுக்கிழமை

இடம்: K.S.R. கல்யாண மண்டபம்

நேரம்: காலை 10-00 மணிமுதல் 5-00 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

உணவு வசதி: மதிய உணவிற்கு ரூ. 1-50 செலுத்தி சீட்டுப்பெற்றுக்கொள்ளலாம்.

அந்தர்யோக நடைமுறையில் நாமஜபம், தியானம், உபந்யாசம், மௌனம், ஸத்ஸம்பாஷணை முதலியவை அடங்கும். உபந்யாசங்கள் யோகம், பக்தி ஞானம் முதலியவைகளைப்பற்றி நடைபெறும். ஸத்ஷம்பாஷணையில் அன்பர்கள் தங்கள் சந்தேகங்களை நீக்கிக்கொள்ளலாம். விருப்பமுள்ள அன்பர்களும் தாய்மார்களும் அந்தர் யோகங்களில் கலந்துகொள்ளலாம். ஆனால் கைக்குழந்தைகளுடன் வரும் தாய்மார்களும் பன்னிரண்டு வயதிற்குக் கீழ்ப்பட்ட சிறுவர்களும் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.

प्रज्ञानं ब्रह्म

தர்ம சக்கரம்

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

சக்கரம் 28 || ஸித்தார்த்தி ௵ ஆடி ௴ || ஆரம் 7

பிரார்த்தனை

त्वमक्षरं परमं वेदितव्यं त्वमस्य विश्वस्य परं निधानम् ।
त्वमव्ययः शाश्वतधर्मगोप्ता सनातनस्त्वं पुरुषो मतो मे ॥

— भगवत्गीता

த்வமக்ஷரம் பரமம் வேதிதவ்யம்
த்வமஸ்ய விச்வஸ்ய பரம் நிதானம் ।
த்வமவ்யய: சாச்வத தர்மகோப்தா
ஸனாதனஸ்த்வம் புருஷோ மதோ மே ॥

— பகவத்கீதை

தாம் அழியாத பரம்பொருள். அறியத் தகுந்தவர். இவ்வுலகுக்கு ஒப்பற்ற உறைவிடம். நீர் மாறாதவர்; ஸனாதன தர்ம ரக்ஷகர்; என்றென்றும் உள்ள பரமாத்மா தாம் என என்னால் அறியப்படுகிறீர்.

வானந்தம் மண்ணினந்தம்
வைத்து வைத்துப் பார்க்களனக்
கானந்தந் தந்த
அரசே பராபரமே.

— தாயுமானவர்

அருள் விருந்து

அகத்தின் பண்பு முகத்தில் பொலிகிறது.

திருந்திய உள்ளம் பின்பு தரிசு ஆவதில்லை.

மேலான இலட்சியத்துக்காக அமைந்துள்ளது மானுட வாழ்க்கை.

ஆக்கம், அழிவு ஆகிய இரண்டிற்கும் அடிமைப்படுவது ஏழை நெஞ்சம்.

சுகஜீவனத்துக்கு ஆசைப்படுபவன் அரும்பெரும் காரியத்துக்கு உதவ மாட்டான்.

வாழ்வு என்னும் சந்தர்ப்பத்தைக் கை நழுவிப் போக மனிதன் விட்டு விடலாகாது.

சொத்தை அபகரிப்பவன் திருடன். சொத்தை ஒதுக்கித் தள்ளு என்று புகட்டுபவன் குரு.

வாழ்வைத் துருப்பிடிக்க விடாதே. பிரகாசத்துடன் அது ஒளிர்ந்து கொண்டிருக்கட்டும்.

கடவுளிடத்திலிருந்து வந்த ஆணை எனினும் யுக்திக்கு ஒவ்வாத கோட்பாட்டை ஏற்றுக்கொள்ளாதே.

மனம், மொழி, மெய் ஆகிய முக்கரணங்கள் ஒத்திருப்பது சத்தியம். சத்தியமே ஏனைய சீலங்களுக்கு வித்து.

மன உறுதியே வஜ்ராயுதம் எனப்படுகிறது. அதைப் படைத்திருப்பவன் எதையும் சாதிக்க வல்லவனாகிறான்.

கப்பலில் ஓர் ஓட்டை உண்டானால் அது மூழ்கிப்போம். வாழ்வில் ஒரு சிறு குற்றம் இருந்தால் அது சிறுமையுறும்.

வெளிச்சமும் அதன் கிரணமும் நிறமும் இணைபிரியாதிருப்பது போன்று உடல், உள்ளம், எண்ணம் ஆகியவைகள் இணைபிரியாதவைகளாம்.

வாய் பொத்தியிருப்பதும், சந்தடி உள்ள இடத்தில் கதவை மூடியிருப்பதும், நெருக்கடியைச் சமாளிப்பதும் பண்பாட்டின் அறிகுறிகளாம்.

ஒரு கூடை புஷ்பத்தினின்று வேண்டியவாறு மாலைகள் தொடுக்கலாம். அங்ஙனம் வாழ்வினின்று மனிதன் வேண்டியவாறு நலன்களைப் பெறுவானாக.

அரசாங்கம் அமைத்துள்ள நியமனத்தை மீறிப்போய் மனிதன் கெட்டுப் போக மாட்டான். ஆனால் ஒழுக்கத்தினின்று வழுவி மனிதன் முன்னேற்றமடையமாட்டான்.

பரமஹம்சர் புகட்டிய

பெருநெறி விளக்கம்

பக்தர்களோடு பரமஹம்சர் மேலும் உரையாடிக்கொண்டிருக்கிறார். அவர் இயம்பியதாவது: "பக்தனொருவனுக்கும் ஞானி ஒருவனுக்குமிடையில் சிறிது வேற்றுமையுண்டு. 'நான்' என்னும் உணர்வைப் பக்தனொருவன் வேண்டுமென்றே வைத்திருக்கிறான். ஞானியோ அதை அறவே அகற்றுகிறான். நிர்வாணியாயிருந்த அப்பெருமகனார் ஆத்மபோதத்திலேயே ஜீவாத்மன் ஒருவன் எப்படித் திளைத்திருக்க வேண்டும் என்பதைப் புகட்டி அருளினார். அவர் இயம்பியதாவது: 'மனதைப் புத்தியின் கண் வயப்படுத்துக; பிறகு அந்தப் புத்தியை ஆத்மசொருபத்தில் ஒடுக்குக. அங்ஙனம் செய்தால் நீ யாண்டும் ஆத்மசொருபத்திலேயே திளைத்திருப்பாய்.'

"ஆயினும் 'நான்' என்பது அழிந்துபட்டுப் போகாதிருக்கிறது. அதை அகற்றுவது சாத்தியமன்று. கரைகாணாத நீர்ப்பரப்பு ஒன்றைப் பாவனை பண்ணிக்கொள்; மேலிருப்பது நீர். கீழேயிருப்பது நீர். வலப்பக்கம், இடப்பக்கம் இருப்பது நீர். யாண்டுமிருப்பது நீர். அந்த நீரினுள் நீர் நிறைந்த ஜாடியொன்று வைக்கப்பட்டிருக்கிறது. ஜாடிக்குள்ளேயிருப்பது நீர். அதைச் சுற்றிலுமிருப்பது நீர். ஆயினும் அந்த ஜாடியும் நீருக்குள் நிலைபெற்றிருக்கிறது. அத்தகைய ஜாடியோடு 'நான்' என்பதை ஒப்பிடலாம்.

"பரஞானத்தை அடையப் பெற்றான பிறகும் ஞானியொருவன் தன் மேனியைப் பாதுகாத்து வைக்கிறான். ஆனால் அந்த ஞானாக்னியானது அவனிடத்திருந்த காமம்,கோபம்முதலியகீழான உணர்வுகளைத் தகனம் பண்ணித் தள்ளுகிறது. பல நாட்களுக்கு முன்பு இடிமுழக்கம் நிகழ்ந்தபொழுது காளி கோயிலின் மீது இடியொன்று வீழ்ந்தது. கதவுகளுக்குப் பங்கம் ஒன்றும் நிகழவில்லை என்பதை நாங்கள் கண்டோம். உருக்கு ஆணிகளின் நுனிகள் மட்டும் உடைக்கப்பட்டிருந்தன. அக்கதவுகளுக்கு நிகரானது ஞானியின் உடல். காமம், குரோதம், உலோபம் முதலிய கீழான உணர்வுகளை உருக்காணிகளோடு ஒப்பிடலாம்.

"ஞானி ஒருவன் கடவுளைப் பற்றியே பேச விரும்புகிறான். உலக விஷயங்களைப்பற்றிய பேச்சை அவனிடத்தில் கிளப்பினால் அது அவனைத் துன்புறுத்தியதற்கு நிகராகிறது. மற்று உலகத்தவன் ஒருவனுடைய போக்கோ வேறுவிதமானது. அக்ஞானம் என்னும் தலைப்பாகையை அவன் எப்பொழுதும் அணிந்துகொண்டிருக்கிறான். அத்தகையவன் ஏதேனும் ஒரு பேச்சைக் கிளப்பினால் அது உலகத்தைப் பற்றியதாகவேயிருக்கும்.

"மனதின்கண் உள்ள 'ஏழு ஞான பூமி, களைப் பற்றி வேதங்கள் விளக்குகின்றன. ஞானி ஒருவனுடைய மனது ஐந்தாவது ஞான பூமிக்கு மேல் நோக்கிச் செல்லுமாகில் அதற்கேற்ற மனநிலை அவனுக்கு வருகிறது. அவன் பேசுவது என்றால் கடவுளைப் பற்றிய பேச்சு. பிறர் பேச்சைக் கேட்பதென்றால் அதுவும் கடவுளைப்பற்றியதே. அவன் அந்த நிலையிலிருக்கிறபொழுது அவனுடைய நாவிலிருந்து வருகிற வார்த்தைகள் யாவும் ஞான மொழிகளாகவே மிளிரும்.

"சச்சிதானந்தப் பிரம்மத்தைப் பற்றி வேதங்கள் விளக்குகின்றன. பிரம்மத்தை ஒன்று என்றோ இரண்டு என்றோ இயம்ப முடியாது. ஒன்றுக்கும் இரண்டுக்கும் இடைநிலையில் அது இருக்கிறது. அதை 'சத்' என்றோ, அஸத் என்றோ விளக்க முடியாது. சத், அஸத் ஆகிய இரண்டு கோட்பாடுகளையும் உடைத்ததாக அது இருக்கிறது. இந்த இரண்டு கோட்பாடுகளில் அடங்காததாகவும் அது இருக்கிறது.

பக்தன் ஒருவனிடத்து இராக பக்தி அல்லது பிரேமை பக்தி அல்லது பராபக்தி உருவெடுக்கிறது. அத்தகைய பராபக்தியில் அவன் பரம்பொருளை அனுபூதியில் அறிய வருகிறான். உலகத்தவன் ஒருவனுக்குச் சாஸ்திரங்களில் விளக்கியுள்ள சாதாரணபக்தி எளிதில் வாய்க்கவும் மறைந்துபட்டுப் போகவும் செய்கிறது. ஆலயத்துக்குச் சென்று ஐதிக முறைப்படி கடவுளை வணங்குதல், வலம்வருதல் முதலியன

உலகத்தவர்களிடத்திருக்கும் சாதாரண பக்தி யாகிறது. இத்தனை தடவை ஜபம் பண்ணுதல், இவ்வளவு நேரம் தியானம் பண்ணுதல், இன்னின்ன பொருள்களை வைத்துக் கொண்டு இன்னின்ன பாங்குகளில் தேவ ஆராதனை அபிஷேகம் முதலியன செய்தல்; இன்னின்ன பாங்குகளில் வேள்வித் தீ மூட்டி யாகம் பண்ணுதல், அபிஷேகத்திற்கு என்னென்ன வஸ்துக்களை எப்படியெப்படிப் பயன்படுத்துதல், தெய்வத்தின் முன்னிலையில் என்னென்ன மந்திரங்களை என்னென்ன பாங்குகளில் ஓதுதல், ஸ்தோத்திரங்களையும், பக்தி நிறைந்துள்ள பாக்களையும் என்னென்ன பாங்கில் பயன்படுத்துதல் ஆகிய இவையாவும் சாதாரணப் பக்தியைச் சேர்ந்தவைகளாகின்றன. இத்தகைய பக்தி உலகத்தவன் ஒருவனிடம் திடீரென்று புதியதாக வடிவெடுக்கிறது. பிறகு சில நாட்களில் அது தானாகவே மறைந்து பட்டுப் போகிறது. உலகத்தவர்கள் தங்களுக்கிடையிலே இயம்பிக் கொள்வதாவது: 'நல்லது நண்பா, நாங்கள் இத்தனை நாட்கள் வாரவிரதங்கள் இருந்தோம். இத்தனை நாட்கள் இரவு உணவை ஒதுக்கினோம். இத்தனை நாட்கள் தாம்பூலம், உப்பு, புளி முதலியவைகளை ஒதுக்கினோம். எங்கள் இல்லங்களில் இன்னின்ன பாங்குகளில் மணிக்கணக்காக தேவாராதனை பண்ணினோம்!—இவையாவையும் அனுஷ்டித்தான பிறகு நாங்கள் அடையப்பெற்றதுதான் என்ன? சமுதாயப் பழக்க வழக்கங்களை அனுசரித்து இப்படி வேண்டியவாறு அபிஷேகம், ஆராதனை முதலியன புரியலாம். விழா எடுக்கலாம். உற்சவங்கள் நடாத்தி வைக்கலாம். ஆயினும் இவை யாவும் சரியான ஆத்மசாதனங்கள் ஆகமாட்டா. ராகபக்தி அல்லது பிரேமைபக்தி ஒருவனுக்கு வாய்க்குமானால் அதினின்று அவன் ஒருபொழுதும் வழுவிப்போக மாட்டான். பின்பு அத்தகைய பிரேமைபக்தி யாருக்கு வந்து வாய்க்கிறது? பூர்வஜன்மத்தில் சாதனங்கள் பல புரிந்து ஆத்மபரிபாகம் அடையப்பெற்றிருப்பவர்களுக்கே பராபக்தி அல்லது பிரேமை பக்தி வாய்க்கிறது. ஜன்மாந்தரங்களில் பண்ணிய தவத்தின் விளைவாக அந்தக்கரண சுத்தி அடையப்பெற்ற சித்தபுருஷர்களுக்கே பிரேமை பக்தி வாய்க்கிறது. பாழடைந்துபோன வீடு ஒன்றைச் சான்றாக எடுத்துக்கொள்ளுவோம். ஆங்குள்ள குப்பை, கூளம் தாமாக முளைத்து வந்துள்ள செடிகள் ஆகியவைகளைத் துப்புரவு படுத்துகிறபொழுது மூடப்பட்டுக்கிடந்த நீர்க் குழாய் ஒன்று காட்சிக்கு எட்டுகிறது. அதன் மீது மண்ணும் செங்கற்களும் குவிந்திருந்தன. அவைகளை அப்புறப்படுத்திய உடனே நீர் ததும்பிக்கொண்டு வருகிறது.

"கடவுள் பக்தி ஆழ்ந்து வாய்க்கப்பெற்றிருக்கிறவர்கள் அனாவசியமான பேச்சுக்களைப் பேசுவதில்லை. அதாவது சகோதரா, உணவு விஷயத்தில் நான் எவ்வளவு எச்சரிக்கையாக இருந்திருக்கிறேன்! ஆயினும் நான் அடைந்துள்ளதுதான் யாது? வெறும் மேற்போக்கான பக்தி சாதனம் பண்ணுகிறவர்களே இப்படியெல்லாம் பேசுவார்கள். புதிதாகக் கிருஷியில் ஈடுபடுகிற பயிர்த்தொழில்காரர்கள் பூமியில் ஒன்றும் விளையாவிட்டால் அத்தொழிலை உடனே நிறுத்திவிடுகிறார்கள். ஆனால் பரம்பரையாகப் பயிர்த் தொழிலிலேயே ஈடுபட்டு இருக்கிறவர்கள் விளைவு வாய்த்தாலும் வாய்க்காது போனாலும் அத்தொழிலை நிறுத்திவிடமாட்டார்கள். அன்னவர்களுடைய தந்தைமார்கள் பாட்டன்மார்கள் ஆகிய எல்லாரும் குடித்தனம் பண்ணியவர்கள் ஆதலால் அவர்களின் சந்ததிகளாக வந்தவர்கள் சாகுபடியையே தங்களுக்குரிய ஜீவன உபாயமாக எடுத்துக்கொள்ளுகின்றனர். அத்தகைய கிருஷிகர்களுக்கு நிகரானவர்கள் தூய பக்தி வாய்க்கப் பெற்றவர்கள்.

"பராபக்தி யாரிடம் அமைந்திருக்கிறதோ அவர்களே உண்மையான பக்தர்கள் ஆகிறார்கள். மேற்பகட்டு ஏதுமின்றி மெய்யன்பே வடிவெடுத்திருக்கிறவர்களுக்குக் கடவுளும் கடமைப்பட்டு இருக்கின்றார். மானுடனொருவன் நோயாளியாக ஆஸ்பத்திரியில் தன்னுடைய பெயரைப் பதிவு செய்துகொண்டால் நோயினின்று அவன் சிகிச்சை அடையும் பரியந்தம் டாக்டர் அவனை ஆஸ்பத்திரியினின்று வெளியே போக அனுமதிக்கமாட்டார். டாக்டருடைய பராமரிப்பில் இருப்பது அவனுக்குக் கிடைத்துள்ள வாய்ப்பாகிறது. அதேவிதத்தில் கடவுளின் அருளுக்குப் பாத்திரமாய் இருக்கிறவர்கள் சிலர் உளர்.

அவர்கள் எதற்கும் அஞ்சவேண்டியதில்லை. தந்தையின் கையைப் பிடித்துக்கொண்டு, வயல் வரப்பின் மீது நடந்து செல்லுகிற மைந்தன் பிடியை விட்டு விடுவானாகில் வழுவிக் கீழே வீழ்ந்து விடுவான். ஆனால் தந்தை தானே மைந்தனுடைய கையைப் பிடித்துக்கொண்டிருப்பானாகில் அம்மைந்தனுக்கு ஆபத்து ஒன்றும் நேராது. அதேவிதத்தில் தன் திறமையை நம்பி இருப்பவனுக்கு நெறி வழுவும் ஆபத்துண்டு. முற்றிலும் தெய்வத்தை நம்பியிருப்பவனுக்கு அத்தகைய ஆபத்து ஏதுமில்லை.

"தீவிரமான தெய்வ விசுவாசம் வைத்திருப்பவனுக்கு ஆகாதது யாது உளது? உண்மையான பக்தனொருவன் தெய்வத்திடத்துத் தீவிர விசுவாசம் வைத்திருக்கிறான். தெய்வம் பற்பல வடிவங்களில் விளங்குகின்றார் என்கின்ற நம்பிக்கையும் அவனிடத்து உறுதியாக அமைந்திருக்கிறது. பரவஸ்துவானவர் அருவமாகவும் இருக்கின்றார், உருவம் படைத்தவராகவும் இருக்கின்றார். அதே பரவஸ்து ராமனாகவும், கிருஷ்ணனாகவும், அம்பிகையாகவும் இலங்குகின்றார்.

"முன்பொருதடவை கமார்புகூருக்கு நான் போய்க்கொண்டிருந்தேன். வழியில் திடீரென்று புயல் காற்று ஒன்று அடித்தது. அப்பொழுது ஒரு பெரிய மைதானத்தில் நான் இருந்தேன். அவ்விடத்தில் திருடர்கள் உண்டு. அந்நிலையில் தெய்வங்களுடைய நாமங்களை நான் உச்சரித்தேன். ராமா, கிருஷ்ணா, பகவதி இப்படியெல்லாம் நான் உச்சரித்தேன். ஹனுமானுடைய நாமத்தையும் நான் அப்பொழுது இயம்பினேன். தேவதைகள் எல்லாருடைய நாமங்களை நான் ஜபித்தேன். அப்படிச் செய்ததின் உட்பொருள் யாது? சொல்லுகிறேன் கேளுங்கள். வேலையாள் ஒருவன் கடையில் வாங்கிய பொருள்களுக்குக் கிரயங்களைச் செலுத்திக் கொண்டிருக்கிறான். அப்பொழுது அவன் இயம்பியதாவது, 'பைசாக்களெல்லாம் கீரை வகைகளுக்கு உரியவை. அணுக்களெல்லாம் கத்தரிக்காய், வெண்டைக்காய்களுக்கு உரியவை. பணம் பருப்புக்குரியது. அந்தந்தப் பதார்த்தத்துக்குரிய கிரயத்தைத் தனியாகப் பிரித்து வைக்கின்றான். அப்படிக் கிரயம் போடுவதை முடித்தான பிறகு அந்த நாணயங்களையெல்லாம் அவன் ஒன்று சேர்த்துக் குவிக்கிறான். கிரயம் செலுத்துவதில் தன் திறமைக்கேற்ற முறையை அவன் கையாளுகிறான். கடவுள் பக்திவாய்க்கப்பெற்றவன் முழு நம்பிக்கையோடு எம்முறையைக் கையாண்டாலும் இறைவனுக்கு எப்பெயரிட்டு அழைத்தாலும் கடவுளுக்கு அது சம்மதம்.

"பக்தன் ஒருவனிடம் தெய்வபக்தி ஓங்குமிடத்துக் கடவுளைப்பற்றியே பேசிக்கொண்டிருக்க அவன் விரும்புகிறான். கடவுள் சிந்தனையைவிட்டு வேறு சிந்தனையோடு இருக்க அவனால் இயலாது. அவனுடைய திரிகரணமும் தெய்விகத்திலேயே மூழ்கி வருகின்றன. தைலதாரை போன்று இடைவிடாத ஈஸ்வர சிந்தனை அவனுடைய மனத்தில் வந்தவண்ணமிருக்கும். பேசுவது என்றால் பகவானுடைய பெருமையை மட்டும் பேசுவது அவனுடைய சுபாவம். உலக சம்பந்தமான பேச்சுக்களை யாரேனும் பேசவந்தால் அவ்விடத்தைவிட்டு அவன் அப்பால் போய்விடுவான். மானுடனொருவனுக்கு ஒரு மனிதனிடத்து அன்புமிக வாய்க்குமானால் அந்த மனிதனைப் பற்றியே அவன் பேச விரும்புகிறான். அம்மனிதன் பேசுகின்ற பேச்சையும் அவன் விருப்பத்தோடு கேட்கிறான். உலகப்பற்று உடைய மானுடனொருவன் தன் செல்வனைப்பற்றிப் பேசுகின்ற பொழுது அவனுடைய நாவினின்று ஏராளமாக எச்சில் கொட்டுகிறது. தன்னுடைய மைந்தனை யாராவது ஒருவன் மெச்சிப் பேசினால் அது அவனுக்குப் பெரு மகிழ்ச்சியையுண்டுபண்ணுகிறது. உன் சித்தப்பா கால் அலம்புதற்கு ஓடிப்போய் ஜலம் கொண்டுவா என்று தன் மகனுக்கு அவன் உத்தரவு இடுகிறான். தன் மகனை மெச்சுபவனிடத்து அவனுக்கு அவ்வளவு அபிமானம். அத்தகையவனுக்குப் பணிவிடை பண்ணவும் மகனைத் தூண்டுகிறான்.

"புறா வளர்ப்பதில் சிலர் பேரார்வம் படைத்திருக்கின்றனர். அத்தகையவர்கள் முன்னிலையில் நீ புறாக்களைப் பாராட்டிப் பேசினால் அவர்கள் பரமானந்தமடைகின்றனர். ஆனால் புறாக்களைச் சிறுமைப்படுத்தி நீ பேசினால் உடனே அவர்கள் 'உன்னுடைய குடும்பப் பரம்பரையினர் யாராவது புறா வளர்த்திருக்கிறார்?' என உன்னை அவர்கள் இகழ்வார்கள்."

மலைவளர் காதலி

(தாயுமானவர் இயற்றியது)

மிடியிட்ட வாழ்க்கையால் உப்பிட்டகலமெனவும்
மெய்யெலாம் உள்ளுடைந்து
வீறிட்ட செல்வர்தம் தலைவாயில் வாசமாய்
வேதனை களூறவேதனும்
துடியிட்ட வெவ்வினையை ஏவினன் பாவிநான்
தொடரிட்ட தொழில்களெல்லாந்
துண்டிட்ட சாண்கும்பியின் பொருட்டாயதுன்
தொண்டர்பணி செய்வதென்றோ
அடியிட்ட செந்தமிழின் அருமையிட்டாரூரில்
அரிவையோர் பரவை வாயில்
அம்மட்டும் அடியிட்டு நடைநடந்தருளடிகள்
அடியீது முடியீதென
வடியிட்ட மறைபேசு பச்சிளங்கிள்ளையே
வளமருவு தேவையரசே
வரைராசனுக்கிருகண் மணியாய் உதித்தமலை
வளர்காதலிப் பெண்உமையே.

மொழி ஒன்றனுள் நுண்ணிய கருத்துக்களை வெளிப்படுத்துதற்கான பண்பு எவ்வளவுக்கெவ்வளவு மேன்மையுற்றிருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு அந்த மொழி சீர்மை அடையப் பெற்றதாகும். தமிழுக்கு அந்த மகிமை இருப்பதால் அடியிட்ட செந்தமிழ் என அதை அண்ணல் பாராட்டுகிறார். செம்மையாக இம்மொழி அமைக்கப் பெற்றிருப்பதால் அது செந்தமிழ் என இயம்பப் பெறுகிறது. கருத்துக்களைத் தெளிவுபடுத்த இம்மொழிக்குத் தகைமையிருப்பதால் அதை அடியிட்ட மொழி என இயம்புகிறார்.அத்தகைய மொழியின் அருமையிட்டுஎன இயம்புவது அருமையைக் கருத்தில் வைத்துக்கொண்டு சிவனார் குற்றேவல் புரியச் சென்றார். எங்குச் சென்றார் என்னும் கேள்வி எழுகிறது. ஆரூரில் அரிவை ஒர் பரவை வாயில் அம்மட்டும்— திருவாரூரிலே சுந்தரமூர்த்தி நாயனார்க்கு அருள்துறையில் வாழ்க்கைத் துணையாக வாய்த்திருந்த பெண்பாலின் பெயர் பரவை. அவள் இளம் வயதில் இருந்ததினால் அரிவை என இயம்பப்படுகிறாள். பரவைக்கும், சுந்தரமூர்த்தி நாயனார்க்கும் இடையில் ஏற்பட்டிருந்த தெய்விக இணக்கத்திற்குப் பணிவிடை பண்ண பரமன் முன்வந்தார். அவருடைய வரவுக்கு மேலும் தூண்டுதல் போட்டது சுந்தரமூர்த்தி நாயனார் செந்தமிழில் பாடியருளிய தேவாரமாகும். அப்பரமனே அகண்ட வஸ்து. ஆதலால் அவருடைய அடியையும்,முடியையும் சென்றடையக் கிருத்திய கர்த்தாக்களாகிய ஹரிக்கும், அயனுக்கும் இயலவில்லை. அகண்டப்பொருளை எல்லையிலடங்கிய மூர்த்தி யாருமே எட்டமுடியாது என்பது தத்துவம். மொழியிலடங்காத முழுமுதற் பொருளை மொழிமயமாயிருக்கின்ற வேதநாயகி எட்டமுயலுகிறாள்.அத்தகைய பராசக்திக்கு அது ஓரளவு சாத்தியமாகிறது. முழுதும் சாத்தியப்படுவதில்லை என்னும் கோட்பாட்டைப் பரவை வாயில்அம்மட்டும் அடியிட்டு நடை நடந்து அருளுகின்ற அடிகளின் அடி ஈது முடி ஈது என வடியிட்ட—வடித்தெடுத்த செம்மையான சொற்களைப் பயன்படுத்தும் மறை நாயகி என அம்பிகை போற்றப் பெறுகிறாள். அவள் திரிலோக சுந்தரி. இக்கோட்பாட்டை விளக்குதற்கு அண்ணல் பச்சை இளம் கிள்ளையே எனப் பாராட்டுகிறார். கிளிக்கு அமைந்துள்ள மற்றொரு பெயர் கிள்ளை. கட்டிலடங்காத பரம்பொருள் தெள்ளி எடுத்த மொழிக்குச் செவி சாய்க்கிறார் என்னும் கோட்பாடு இப்பாடலில் அடங்கியிருக்கிறது. மேலும் போக்கும் வரவும் புணரும் இலாத பெரிய பொருள் பக்திக்கு இணங்கி ஒரு பக்திமதியின் இல்லம் வரையில் நடந்து சென்றார் என்னும் கோட்பாடு பக்தியின் மகிமைக்கு நல்ல விளக்கமாகிறது. அன்னை பராசக்தி மேலும் வளமருவு தேவையரசே எனப் பாராட்டப் பெறுகிறாள். தேவை–என்பது ராமேஸ்வரத்துக்கு அமைந்துள்ள மற்றொரு பெயராகும், தெய்விகப் பெருமைகள் யாவும் செறிந்துள்ள ராமேஸ்வர க்ஷேத்திரத்தின்கண் எழுந்தருளியிருக்கும் அண்ட நாயகியே என்பது இந்தச் சொல்தொடரின் உட்கருத்தாகும். வரைராஜன் என்னும் சொல் ஹிமவானைக் குறிக்கிறது. ஹிமாசலப் பர்வதம் முழுதுமே தெய்விகம் திகழும் மூர்த்தியாகக் கருதப்படுகிறது. ஸ்தாவரங்களுள் நான் ஹிமாசலமாக இருக்கிறேன் என்று கிருஷ்ண பரமாத்மா தம்முடைய தெய்வீக விபூதியை விளக்குகின்றார். அத்தகைய மலை

மூர்த்திக்கு மகளாக அம்பிகை அவதரித்ததினால் அவள் ஹைமாவதி என்னும் பெயர் பெறுகின்றாள். தம் தந்தையாகிய ஹிமவானுக்கு அவள் இரண்டு கண்களாகத் திகழ்வது அவளுடைய ஆத்மீகச் சைதன்யத்துக்கு எடுத்துக் காட்டு ஆகும். இரு கண்மணியாய் உதித்தவள் என்னும் சொல் அதை விளக்குகிறது. அன்போடு தந்தையினால் பேணப்பெற்றதனால் அவள் மலைவளர் காதலி என விளக்கப் பெறுகிறாள். உமையே என்னும் சொல் உமாதேவி என விரிவடைகிறது. உமா என்னும் பதம் சக்திக்குரிய பிரணவம் எனப் போற்றப் பெறுகிறது. ஏனென்றால் அகர உகர மகரமாகிய மூன்றெழுத்துக்களும் அந்த நாமத்தில் இடம் பெறுகின்றன. இத்தனைவித மகிமைகளையும் வாய்க்கப்பெற்றுள்ள அன்னையே என் குறை பாட்டை உன்னிடம் சமர்ப்பிக்கின்றேன். அதற்குச் சிறிது செவிசாய்ப்பாயாக என்னும் கருத்து இப்பாடலில் தொக்கியிருக்கிறது. மிடியிட்ட வாழ்க்கையில் நான் உழல்கிறேன் என்பது வறுமைநோயில் வருந்திக்கொண்டிருப்பது எனப் பொருள்படுகிறது. அருளுக்குப்பாத்திரமாகாதவர்கள் வேறு எந்தப் பேறு அதனை எவ்வளவுதான் பெற்றிருந்தாலும் அவர்கள் வறியர்களே. அருளுக்குப்புறம்பாகிய நான் அத்தகைய வறுமையில் வாடுகின்றேன். உப்புப் போட்டுவைக்கப்பட்டிருக்கின்ற மட்பாண்டம் நல்லநிலையிலிருப்பது போன்று வெளிக்குத் தென்படுகிறது. ஆயினும் அதன் உட்பகுதி உப்பின் உவர்ப்பினால் அரிப்பு உண்டு க்ஷீணதசையடைகிறது. அதற்கு நிகராக என் உடல் வெளிப்பார்வைக்கு ஆரோக்கியமாக இருப்பது போலத் தென்படுகின்றது. ஆனால் உடலினுள்ளே என்னென்ன நோய்கள் புகுந்து என்னென்ன பாங்குகளில் அதை வாட்டிவருகின்றன என்பதைப் பிணியாளியாகிய நான் அறிகிலேன். இக்கோட்பாட்டை மிடியிட்ட வாழ்க்கையால் உப்பு இட்ட கலம் எனவும் மெய் எல்லாம் உள் உடைந்து என அண்ணல் இயம்புகின்றார். நோய்வாய்ப்பட்டிருக்கும் ஒருவன் திதிக்ஷை அல்லது பொறுமை பழகுதல் வேண்டும். அப்படிச் செய்வதால் ஆத்மசாதனத்துக்கு உற்ற உபாயமாக நோய் வந்து அமைகிறது. அந்தப் பாங்கில் நோயை நான் ஏற்றுக் கொள்ளவில்லை. நோயை அகற்றுதற்கு ஏற்ற உபாயமாய்ச்செல்வத்தைநாடிப் பணக்காரர்கள் இடத்தின் கண்சென்று அங்குநான் வீண்காலம் போக்கிக் கொண்டிருக்கின்றேன். இக்கோட்பாட்டை வீறு இட்ட செல்வர் தம் தலைவாயில் வாசமாய்என்று அண்ணல்இயம்புகின்றார். வீறு இட்டஎன்னும்சொல்ஏராளமாகஎனப்பொருள் படுகிறது. பஞ்சபூதங்களாகிய உடல் பிராரப்த கர்மத்தின் விளைவாக ஏதேனும் ஒரு விதத்தில் இடையிடையே நோய்வாய்ப்படும். காரண காரியமாக நோய்வந்துவாய்ப்பது இயல்பு. இக்கோட்பாட்டை வேதனைகள் உறவேதனும் துடியிட்ட வெவ்வினையைஏவினன் என்று விளக்குகிறார். வெவ்வியவினை அல்லது கொடிய வினை துன்பத்தை விளைவிக்கின்றது. துடியிட்ட என்னும் சொல் அப்பதைபதைப்பை எடுத்துக் காட்டுகிறது. பெறுதற்கரிய மானுடப் பிறவியைப்பெற்றிருப்பவன் அதைஒரு பெரியகாரியத்துக்காகப் பயன்படுத்துதல் பொருட்டேயாம். உடலைப் பேணுதற் பொருட்டுப் பிறவி எடுத்திருப்பது சிற்றுயிர்களின் பாங்கு ஆகும். அந்த அல்ப செயலில் மேன்மை தங்கிய மனிதனும் ஈடுபடுவானாகில் அவன் முற்றிலும் அனுதாபத்திற்குரியவனாகிறான். இப்பரிதாபகரமான நிலையை 'பாவி நான் தொடரிட்ட தொழில்களெல்லாம் துண்டு இட்ட சாண்கும்பியின் பொருட்டாயது' என்று வருந்துகின்றார் அண்ணல். சாண்கும்பி என்பது ஒரு சாண் நீளமுள்ள வயிற்றைக் குறிக்கிறது. அது வயிற்றினுள் ஓர்அளவுக்கு உட்பட்டிருப்பதால் துண்டு இட்ட என அதன் அளவை இயம்பப்படுகிறது. மானுட ஜன்மத்தின் மேலான செயல்களுள் ஒன்று இறைவனுடைய பக்தர்களுக்குப் பணிவிடை பண்ணுதலாம். பக்தர்களுக்குப் பண்ணுகிற பணிவிடையும், பகவானுக்குப் பண்ணுகிற பணிவிடையும் ஒன்றேயாம். அந்த வாய்ப்புத் தமக்குஅமையாதிருப்பதைக்குறித்து 'உன் தொண்டர்பணி செய்வதென்றோ' என்று அண்ணல் ஏங்குகின்றார். அன்னையின் அருளால் வாய்க்கப்பெற்ற மானுட வாழ்வு அனர்த்தமாய்ப்போகலாகாது. இறைவன் பணிவிடையிலும், பக்தர்கள் பணிவிடையிலும் அது நன்கு பயன்படவேண்டும் என்பதே இப்பாடலின் உட்கருத்தாம்.

அருள் நெறி

(ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிஷ்யரான சுவாமி அபேதானந்தரின் போதனை)

கர்மதத்துவத்தைப்பற்றி அறிந்திருக்க வேண்டும். அறிந்ததைப் பின் நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டும். கர்மம் இந்திரியங்களுக்கும் மனதுக்கும் உரியது. கர்மம் ஆத்மாவைப் பாதிக்காது. மனதுக்குச் சாட்சியாக ஆத்மா இருக்கிறது. நீ ஆத்மா என்று உணர்ந்து மனதுக்குச் சாட்சியாக இருந்து பழகு. காமம், கோபம் போன்ற புல்லிய இயல்புகள் மனதைச் சார்ந்தவை. அவை ஆத்மாவைச் சாரமாட்டா. மனம் கீழ்நிலையில் உழன்றுகொண்டிருக்கும் பொழுது அது காமம் கோபம் முதலிய புல்லிய இயல்புகளுக்கு அடிமைப்பட்டுக் கிடக்கின்றது. மனதை உயர்த்துவதற்குத் தெரிந்துகொள். யோகநூல் உடலில் ஏழு ஆதாரங்கள் இருக்கின்றன என்று பகர்கின்றது. அதன்படி ஆறுவது ஆதாரமாக இருப்பது ஆக்ஞைச் சக்கரம் என்று சொல்லப்படுகிறது. அந்த ஆறுவது ஆதாரம் புருவங்களுக்கிடையில் நெற்றியின் மத்தியில் அமைந்திருக்கிறது. மனதை அந்த ஆதாரத்திற்கு எடுத்துச் செல். காமம் கோபம் முதலியவைகளெல்லாம் அப்பொழுது உன்னை வந்து பற்ரு. அனைத்திற்கும் சாட்சியாக, அனைத்தையும் இயக்குவதாக, பூரணப் பொருளாக, குணங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டதாக எப்பொருள் இருக்கிறதோ அது பிரம்மம். அப்பொருளைக் குறித்துத் தியானம் செய். அதைப்பற்றிய சிந்தனையே மனதில் இடம்பெற்றிருக்க வேண்டும். மனதின் ஆதிக்கத்திற்கு வசப்பட்டுவிடாதே. ஆத்மாவைப்பற்றிய சிந்தனையிலேயே மனதை யாண்டும் வைத்திருந்து பழகு. இடைவிடாது இதை அப்பியாசம் செய்துவா. நாளடைவில் மனம் அலைவது நின்றுவிடும். மனதை அடக்கவும், மனதைச் சாந்தப்படுத்தவும் வேண்டிய ஆற்றலை எனக்குத் தா என்று இறைவனிடம் பிரார்த்தனை செய்து வா. ஆத்மீக விஷயங்களடங்கிய நூல்களை ஓதி வா. அப்புஸ்தகங்களில் கூறப்பட்ட முறைகளை அனுஷ்டானத்திற்குக் கொண்டு வா. தொடர்ந்து முறையாக நீ சாதனை செய்து வருவாயாகில் உன் மனது பண்பாடடையும். மனம் பண்பாடு அடைய அடைய சூட்சுமமான ஆத்மீக இரகசியங்கள் எல்லாம் உனக்குத் தெளிவாக விளங்கும். ஆத்மீக விஷயங்கள் உனக்குத் தெளிவாக விளங்குவதற்குத் தெளிந்த உள்ளம் தேவை. காமம், கோபம் முதலானவைகள் ஜீவனுடைய இயல்புகள் ஆகின்றன. அவைகளை வளர்க்கவும், அழிக்கவும் உனக்கு உரிமை உண்டு. அவைகள் பொல்லாதவைகள் என்று அவைகளைப்பற்றிக் குறை கூறிக்கொண்டிருப்பதில் பயனில்லை. அவைகளுக்கு நீ அடிமையாக இருக்கக்கூடாது. அவைகளை நீ வளர்க்க முயன்ருல் அவைகள் உன்னிடத்து வளர ஆரம்பிக்கும். அவைகளை உன்னிடத்திலிருந்து ஒழிக்க முயன்ருல் அவை ஒழிந்துபோகும். உன்னுடைய சாதனைக்கு ஏற்ற பலன் கிட்டும்.

சாதனையில் இரண்டுவித மார்க்கங்கள் உண்டு. ஒன்று பிரவிருத்தி மார்க்கம். மற்ரென்று நிவிருத்தி மார்க்கம். இவ்விரண்டு மார்க்கங்களுள் ஏதாவது ஒன்றைப் பின்பற்றி நீ கடவுள் தரிசனம் பெறலாம். நீங்கள் யாவரும் பிரவிருத்தி மார்க்கத்தைப் பின்பற்றுபவர்களாக இருக்கின்றீர்கள். ஒருநாளைக்கு உண்மையான பக்தியோடும் விசுவாசத்தோடும் கடவுளுடைய நாமத்தை ஒருதடவை சொல்வீர்களானுல் கடவுள் உங்கள்மீது விருப்பப்படுவார். ஈசனுடைய நாமத்தைச் சொல்லிக்கொண்டு நீ எவ்விதக் கவலையும் இல்லாதவனாக இருக்கலாம்.

உன் குருவைத் தெய்வமாகவே கருது. அப்பொழுதுதான் உனக்கு அனைத்து நலன்களும் வாய்க்கும். மற்றவர்கள் என்ன சொல்கின்ருர்கள் என்பதைப் பற்றி நீ கருத்துச் செலுத்த வேண்டாம். உன்போக்கில் உன்னிடம் தெய்விக பக்தியையும் விசுவாசத்தையும் வளர்த்து வா. சத்சங்கத்தில் இரு அல்லது தனிமையில் இரு. உலக விவகாரத்தில் உழன்று கிடப்பவருடன் நீ சகவாசம் வைக்கவேண்டாம்.

உன் மனம் குழப்பமடையும் பொழுது உன் மனதில் ஆசைகள் தலையெடுத்து வரும்பொழுது அவற்றிலிருந்து நீ மீள்வதற்கு உன்னைக் கடவுளிடம் ஒப்படைத்து விடு. கடவுளுடைய இச்

சைக்கு உன்னை முழுவதும் ஆளாக்கு. உன்னுடைய அற்ப ஆசை நிறைவேருமல் இருக்கலாம். அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம். மனதை அவ்வாசையில் இருந்து மீட்டு எடுத்து ஈசனுடைய இச்சைக்கு உட்படுத்து. ஈசன் திட்டப்படி நிகழ்கிறது என்பதில் உனக்கு நம்பிக்கை வந்து விட்டால் நீ சாந்தி அடைவாய். குடும்பத்தை உன்னுடையதாக நீ ஏன் நினைக்கின்ருய்? உனக்கு மகன் இல்லை. உனக்கு எப்பொழுதும் மகன் இருக்கமாட்டான். ஏன் என்ருல் யாவரும் ஈசனுடைய குழந்தைகள் ஆகின்ருர்கள். ஈசனுடைய குழந்தைகளைப் பராமரிக்கிற பொறுப்பு ஈசனுடையதாகும். ஈசன் அனைத்தையும் பொறுப்பேற்றுக் கவனித்துக் கொண்டிருக்க நீ ஏன் உன் மனதை அலட்டிக் கொண்டிருக்கின்ருய்? உலக மக்கள் போன்று வெறும் பிதற்றுதல் உனக்கு வேண்டாம். கடவுள் உன்னைச் சம்சாரசாகரத்தைக் கடக்கும்படி செய்வார். நீ முழு மனதோடு 'சாந்தமும், அமைதியும் கொடு' என்று இறைவனிடம் பிரார்த்தித்துக்கொள். அவர் சாந்தத்தையும் அமைதியையும் உனக்குத் தருவார். உன் மனதை இறை சிந்தனையில் வைத்து யாண்டும் மகிழ்வுற்றிருக்கச் செய்.

உற்ருர் உறவினர் யாரும் உனக்குத் துணையாக மாட்டார்கள். நீ எப்பொழுதும் தனியாகத்தான் இருக்கின்ருய். நீ இவ்வுலகுக்கு வரும்பொழுது தனியாகத்தான் வந்தாய். இவ்வுலகத்தை விட்டுப் போகும் பொழுதும் தனியாகத்தான் போவாய். உலகத்தில் உள்ள யாரும் உன்னேடு வரவுமில்லை. உலகத்தை விட்டுப் போகும் பொழுது வரவும் மாட்டார்கள். எனவே அவர்கள் யாரும் உனக்கு உரியவர்கள் ஆகமாட்டார்கள். கடவுள் ஒருவர்தாம் உனக்கு உரியவர் ஆவார். அவரையே முற்றும் சார்ந்திருந்து அவருடைய அருளுக்குப் பாத்திரமாக வேண்டும் என்று பிரார்த்தித்துக்கொள்.

தியானப் பயிற்சி அவசியமானது. உன்னுல் எவ்வளவு தியானம் செய்ய முடியுமோ அவ்வளவு தியானம் செய். மனதை மிகவும் சங்கடப்படுத்தி நீண்டநேரம் தியானம் செய்ய வேண்டுவதில்லை. மனம் தியானத்தில் நிலை பெருவிட்டால் ஜபத்தில் ஈடுபடுத்து. மனம் தியானத்தில் ஒடுங்க வேண்டும் என்று இறைவனிடம் பிரார்த்தித்துக்கொள். குடும்பத்தில் உள்ளவர்களுக்குத் தியானம் செய்வது சுலபமாக இருக்காது. ஆத்ம சாதனத்திற்கென்றே தங்கள் வாழ்க்கையை ஒப்படைத்துள்ள பிரம்மச்சாரிகளுக்கும், சந்நியாசிகளுக்கும் கூடத் தியானம் செய்வது சுலபமன்று. உண்மை அப்படியிருக்கக் குடும்பஸ்தர்களைப் பற்றிப் பேசுவானேன்? இடையருது ஜபம் பண்ணுவதின் மூலமும் இறைவனுடைய மகிமையை உருகிப்பாடுவதன் மூலமும் தியானத்தின் பலனைப் பெறலாம். நீ சாதனையில் முன்னேறி வருகிருய் என்பதை அறிந்து கொள்வதற்கு ஓர் உபாயம் உண்டு. நீ பந்தத்தில் அகப்பட்டுக் கொண்டிருப்பதாகவும் இவ்வுலக வாழ்க்கையில் அமைதி இல்லை எனவும் உணரும் பொழுது சாதனையில் முன்னேறி வருகிருய் என்பதற்கு அது அறிகுறியாகும். நீ குடும்பஸ்தனுக உலகில் வாழ்ந்துதான் ஆக வேண்டும் என்ற நிலை ஏற்பட்டால் பற்றற்று இருந்து பழகவேண்டும். நீ செய்யும் செயல்களின் பயன்களை யெல்லாம் கடவுளுக்கு அர்ப்பணித்துவிடவேண்டும். கர்மம் செய்யத்தான் உனக்கு உரிமை உண்டு. கர்ம பலனில் உனக்கு உரிமையில்லை என்பதை எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்துக்கொள். உனக்கு அமைந்த கடமைகளைப் பயனில் பற்று வைக்காது செய்து பழகு. பயனில் பற்று வைக்காது செய்கின்ற கர்மங்கள் உன் உள்ளத்தைத் தூய்மைப்படுத்துகின்றன. மரத்தில் ஒட்டியிருந்து காய் கனியாகிறது. நன்கு கனிந்ததும் அது மரத்தை விட்டுத் தானுகப் பிரிந்து விடுகிறது. பற்றற்றுக் கர்மம் செய்யும் பொழுது மனம் பண்பாடடைகிறது. பண்பட்ட மனது உலகத்திலிருந்து தானுகப் பிரிந்து கொள்கிறது. பண்பட்ட மனதைக் கர்மமும் பந்தப்படுத்துவதில்லை. சாந்தியும் அமைதியும் உலகத்திலிருந்து உனக்குக்கிடைக்கா. பற்றற்ற தெய்வீக வாழ்விலிருந்துதான் அமைதியையும் சாந்தியையும் நீ பெறமுடியும். தெய்வீக வாழ்க்கையில் ஈடுபாடு சுலபத்தில் உண்டாகாது. இடைவிடாது அப்பியாசம் செய்வது அவசியம். மனதுக்கு ஆரம்பத்தில் சோர்வு உண்டாகும். ஆனுல் தொடர்ந்து அப்பியாசம் செய்து வந்தால் மனதுக்குத் தெய்வீக வாழ்வில் நாட்டம் ஏற்பட்டு விடும்.

மறு பிறப்பு

(சுவாமி விவேகானந்தர் 1895ஆம் ஆண்டு நியூயார்க்கிலுள்ள ஆன்மீக பத்திரிகை ஒன்றுக்கு எழுதிய கட்டுரை)

[*176*ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஹிப்ருக்களுக்கிடையில் ஆத்மாவைப்பற்றியும், ஆத்மா தனிப்பொருள் என்பதைப்பற்றியும் ஏற்பட்ட கருத்துக்கள் எகிப்தியர்களுடைய சமயக் கருத்துக்களிலிருந்து வந்தவையாகும். எகிப்தியர்களுக்கு அக்கருத்து இந்தியர்களிடமிருந்து போய்ச்சேர்ந்தது. இக்கருத்து, அலெக்ஸாண்டிரியா வழியாக எகிப்தை அடைந்தது என்பது முக்கியமானது. இதற்குப் புத்தமத ஆவணங்கள் சான்ருக இருக்கின்றன. அலெக்ஸாண்டிரியாவிலும், ஆசியாவிலும் புத்தமதப் பிரச்சாரம் இருந்தது என்பதைப் பௌத்த நூல்கள் தெளிவாகக் காட்டுகின்றன.

பித்தகோரஸ் என்பவர் ஹெல்லெனிஸ் என்பவருக்கு மறுபிறப்புக் கொள்கையைப் பற்றி முதலில் போதித்த கிரேக்கராவார். ஆரிய இனத்தவர்களாகிய கிரேக்கர்கள் இறந்தவர்களை எரித்து வந்தார்கள். ஆன்மா தனிப்பொருள் என்பதை நம்பி வந்தார்கள். எனவே அவர்கள் பித்தகோரஸ் போதித்த மறுபிறப்புக் கொள்கையை எளிதாக ஏற்றுக்கொண்டார்கள். இந்தியாவுக்குச் சென்ற பித்தகோரஸ் இந்திய பிராமணர்கள் மூலமாக மறுபிறப்புக் கொள்கையை ஏற்ருர் என்று அபூலியஸ் என்பவர் கருதுகின்ருர்.

இதுவரையில் நாம் அறிந்துகொண்டவற்றை விமர்சனம் செய்வோம். மனிதனுடைய உண்மையான சொரூபம் ஆத்மா என்றும், அது தனித் தன்மை பொருந்தியது என்றும், உடலுக்கு உயிர் அளிக்கும் பகுதி மட்டும் அன்று என்றும் கருதப்பட்டபொழுதெல்லாம் மறுபிறப்பைப்பற்றிய கொள்கையும் நிலவியே இருந்தது. ஆத்மா உடலோடு சம்பந்தப்பட்டது அன்று என்றும், சுதந்திரம் உடையது என்றும் நம்பியவர்கள் இறந்தவர்களுடைய சரீரங்களை நெருப்பிலிட்டு எரித்து வந்தார்கள். ஆனல், பழைய ஆரிய இனத்தவர்களின் ஒரு பகுதியினரான பாரசிகர்கள் நெடுங்காலத்துக்கு முன்பே சிமிட்டிக் இனத்தாரின் செல்வாக்குக்குட்படாமல் இறந்தவர்களின் சரீரங்களை அகற்றுவதற்கு ஒரு புது முறையைக் கையாண்டார்கள். அம்முறையை "Tower of Silence" என்று அழைத்தார்கள். அதற்கு மூலம், "Daha" "எரிப்பது" என்பதாகும்.

சுருங்கச் சொல்லின் உள்முகமாக மனதைச் செலுத்தித் தங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்வதில் கருத்தைச் செலுத்தாதவர்கள் சரீர உணர்வுக்கு அப்பால் செல்லமுடியாதவர்களாக இருந்தார்கள். இந்நிலையைக் கடந்து அப்பால் போக வேண்டும் என்று எண்ணிய சிலர், நீண்ட காலத்துக்குப் பிறகு என்ருே ஒருநாள் எப்படியாவது இந்த உடல் அழியா நிலையை அடைந்துவிடும் என்ற முடிவுக்கு வந்தார்கள். பௌதிக உலகத்தை ஆராய்ச்சி செய்வதற்குப் பதிலாக, மனிதனுடைய உண்மை சொரூபத்தை ஆராய்ச்சி செய்வதில் முழுச் சக்தியையும் செலவழித்த இந்து ஆரிய இனத்தில் சிறந்த சிந்தனையாளர்கள் இருந்தார்கள். அவர்கள் இந்தச் சரீரத்துக்கு அப்பால் தங்கள் முன்னேர்கள் அடைய விரும்பிய ஒளிமிக்க உடலுக்கு அப்பால் உண்மையான மனிதன் தத்துவப் பொருள் உள்ளது என்பதைக் கண்டுபிடித்தார்கள். அத்தத்துவப்பொருள் இந்த உடலால் தன்னை மறைத்துக்கொண்டிருக்கிறது என்பதனையும், இவ்வுடல் தகுதியற்றதாகும்பொழுது இதை உதறித்தள்ளிவிடுகிறது என்பதையும் கண்டுபிடித்தார்கள். இந்தத் தத்துவப்பொருள் உண்டாக்கப்பட்டதுதான? சூனியத்திலிருந்து வந்தது என்பது சிருஷ்டிக்குப் பொருள் எனின், அதற்கு இல்லை என்பதே அவருடைய விடையாகும். ஆத்மாவுக்குப்பிறப்பும் இல்லை, இறப்பும் இல்லை. இது சேர்க்கைப் பொருளும் அன்று; கூட்டுப்பொருளும் அன்று. ஆத்மா தனிப்பொருள். அதைச் சிருஷ்டிக்கவும் முடியாது; அழிக்கவும்முடியாது. அது பல நிலைகள் அடைந்து பிரயாணம் செய்துகொண்டிருக்கிறது. இவ்வளவு காலமாக அது எங்கேஇருந்தது என்றகேள்விஎழுகிறது. அதற்கு இந்தியத் தத்துவ ஞானிகள் பகர்வதாவது: ஸ்தூல நிலையில் வைத்துப்பார்க்கும்பொழுது அது பல சரீரங்

களின் மூலம் சென்றுகொண்டிருந்தது எனலாம். தத்துவப்படி பார்க்கின், அது மன உலகங்களில் சஞ்சரித்துக்கொண்டிருந்தது எனலாம்.

இந்தியத் தத்துவ ஞானிகள் கூறுகின்ற மறு பிறப்புக் கொள்கைக்கு வேதங்களின் ஆதாரங்களைத் தவிர வேறு ஆதாரங்கள் உண்டா? வேறு ஆதாரங்களும் இருக்கின்றன. உலகத்தவர்கள் அனைவரும் ஒப்புக்கொள்கின்ற கொள்கைகளுக்கு ஆதாரங்கள் உள்ளன போல, இதற்கும் ஆதாரங்கள் உள்ளன. தற்கால ஐரோப்பிய சிந்தனையாளர்கள் மறுபிறப்புக் கொள்கையைப்பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதை முதலில் காண்போம்.

I. H பிக்டே, ஆத்மாவின் அழியாத் தன்மையைப் பற்றிப் பகர்ந்திருப்பதாவது: "ஆத்மாவின் தொடர் வாழ்வை மறுப்பதற்கு இயற்கையில் உபமானம் எடுத்துக்காட்டலாம் என்பது உண்மை. தோன்றிய யாவும் ஒருகாலத்தில் அழிவது உண்மை என்பது எல்லாரும் அறிந்ததே. இக்கோட்பாட்டிலிருந்து ஆன்மாவுக்கு முந்திய இருப்பு உண்டு என்பது வெளியாகிறது. இது நியாயமான முடிவு. இது ஆன்மாவுக்கு மறுபிறப்பு உண்டு என்பதற்கு மறுப்பாகாது. ஆத்மா உண்டு என்பதற்கு மேற்கொண்டு சான்றாகும். ஒன்றை ஆக்கவோ அழிக்கவோ முடியாது என்ற தத்துவ இயல், ஆன்மாவைப்பற்றியது என்பதை யாவரும் அறியவேண்டும். ஷோபனேர் என்பவர் தாம் எழுதியுள்ள நூலில் மறுபிறவியைப் பற்றிப் பகர்ந்திருப்பதாவது: ஒரு மனிதனுக்குத் தூக்கம் எப்படியோ அப்படி நினைப்புக்கு மரணம் இருக்கிறது. மயக்க நிலையில் ஏற்பட்டுள்ள தனித்தன்மையும், நினைப்பும் ஜீவனைப் பற்றிக்கொண்டிருக்குமானால், காலம் முழுவதும் ஒரே மாதிரியான வினைகளையும், துக்கங்களையும் அனுபவித்து வரவேண்டும். இது ஜீவனுக்குப் பொறுக்க முடியாததாக இருக்கும். எனவே, இப்பொழுது உள்ளசெயல்களையும்,துக்கங்களையும் உதறிவிடுவதுதான் பெரும் தூக்கமாகிறது. மரணம் எனும் உறக்கத்தின் வாயிலாக இந்த ஜீவன் மற்றொரு உடல் பெற்றுப் புதிய ஜீவனைத் தோன்றுகிறது. புதுப்பிறவியில் புதிய ஆசைகள் தோன்றுகின்றன. அடிக்கடி ஏற்படும் புதுப்பிறவிகள் வாழ்க்கையில் கனவுகளாக அமைகின்றன. பிறவிகள் ஏற்படும்பொழுது நினைப்புக்குக் காரணமான மனம் அழிவதில்லை. மனம் பிறவிகளை வளர்த்துக்கொண்டே வருகிறது. பிறவிகள் தோறும் வெவ்வேறு விதமான அறிவைப் பெற்று அது புதிய வடிவைப்பெற்று வருகிறது. மனம் தானாகவே அழியும் இயல்பு பெற்றதன்று. மறுபிறவிக்கு உலக அனுபவம் ஒத்தாசை செய்கிறது. பிறப்புக்கும், இறப்புக்கும் தொடர்பு இருப்பதைக் காண்கிறோம். பெரும் நோயால் மக்கள் அழியும் பொழுது அதைத் தொடர்ந்து மக்கள் இனத்தில் அதிக அளவில் பெருக்கம் ஏற்படுகிறது. பதினான்காம் நூற்றாண்டில் கொடியநோய் ஏற்பட்டு உலகின் பல பகுதிகளில் மக்களே இல்லாமல் அழிந்துவிட்டனர். அதைத் தொடர்ந்து அசாதாரணமான மக்கள் பெருக்கம் உண்டாயிற்று. இரட்டைக் குழந்தைகள் அடிக்கடி தோன்றின. அந்தச் சமயத்தில் பிறந்த குழந்தைகளுக்கு எல்லாப் பற்களும் முளைக்கவில்லை என்பது ஒரு வியப்பான செயல். இந்தக்குறை இருந்தது. காஸ்பர் என்பவர் 1835ஆம் ஆண்டில் எழுதிய "Ueber die Wahrscheinliche Lebendauerdes Menschen உபர்டி வார்ஷசென்லிச்சிலெபனஸ் டார்டெஸ்மென்ஸ்சென் என்ற நூலில் இவ்வுண்மையைப் பின்வருமாறு ஏற்றுக்கொள்கிறார். பிறப்பும், இறப்பும் மனித சமுதாயத்தில் ஒரே விகிதத்தில் ஏறவும், இறங்கவும் செய்கின்றன. பல நாடுகளிலும் பல்வேறு மாகாணங்களிலும் இருந்து சேகரித்த விவரணங்களைக்கொண்டு அவர் இதை மெய்ப்பித்து இருக்கிறார். நாம் இளமையில் மரணம் அடைவதற்கும், மணமாகி மகிழ்வதற்கும் உடலை ஒட்டிய காரணகாரியத் தொடர்பு எதுவும் இல்லை. உடலுக்கு அப்பால் தத்துவரீதியான ஒன்று அதற்குக் காரணமாக இருக்கிறது. புதிதாகத் தோன்றும் ஒவ்வொரு ஜீவனும் புதுப்பிறவியை இலவசமான கொடை என்று ஏற்று அனுபவிக்கிறது. ஆனால் இயற்கையில் எதுவும் இலவசமாகக் கொடுக்கப்படுவதில்லை. முன்பு மூப்படைந்து அழிந்துபோன மரணம், புதுப்பிறப்புக்கு விலையாகின்றது. அழிந்துபோன பழைய வாழ்வில், புதிய வாழ்வுக்குரிய விதை ஒன்று இருந்தது. அவ்விதை இப்புதுவாழ்வுக்குக் காரணமாகும்."

(தொடரும்)

அம்பிகையின் மகிமை

(ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் 1970ஆம் ஆண்டு திருப்பராய்த்துறை தபோவனம் சக்திபூஜை அந்தர் யோகத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு)

[214 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பொருத்தமான சொல்லைப் பிரயோகிக்கக் கற்றுக்கொள்ளுவது சாத்தியமானல் அது அம்பிகையின் திருவருள் என்று சொல்லலாம். இந்திய தேசிய காங்கிரஸின் காரியக்கமிட்டி ஒரு முறை கூடியது. அது ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தது. அதற்கு என்ன சொல்லைக் கையாளுவது என்பது யாருக்கும் புலப்படவில்லை. மஹாத்மா காந்தி ஒத்துழையாமை இயக்கத்தைக் கொண்டுவந்தார். Non co-operation is the only alternative to என்பதற்குப் பின் என்ன பதம் போடுவது என்பதைப்பற்றிக் காரியக் கமிட்டிக்கு முடிவு எடுக்க இயலவில்லை. அடுத்த நாள் பேசிக்கொள்ளலாம் என்று தீர்மானம் செய்தார்கள். அடுத்தநாள் மஹாத்மா காந்தி Non co-operation is the only alternative to protests and petitions என்று சொல்லி அதை முடித்தார். அதுவரையிலும் காங்கிரஸ் விண்ணப்பம் தருவதும், நிராகரிப்பதுமாக இருந்தது. அவையாவும் வாய்ப்பேச்சளவில் இருந்தன. ஒத்துழையாமை இயக்கம் வந்த பின்தான் காங்கிரஸ் செயலில் ஈடுபட்டது. இடத்துக்கு ஏற்ற சரியான பதத்தைப் போடுவது சொல்பழக்கம் உடையவர்களுக்குத்தான் சாத்தியமாகும். இடையருப் பழக்கத்தால் அது வந்தமைகிறது. பொருத்தமான சொல்லைக் கையாள ஒருவனுக்குச் சாத்தியமென்றால் அது அம்பிகையின் திருவருளாகும்.

வேத ஜனனி என்பது அம்பிகைக்கு ஒரு பெயர். ஸம்ஸ்கிருதத்தில் உள்ள நான்கு வேதங்களையும்தான் பொதுப்பட வேதங்கள் என்கின்றோம். எது வித்யாசொரூபமாக இருக்கிறதோ அது வேதம் ஆகிறது. மனதைத் தெளிவுறச் செய்கின்ற கலைகள் யாவும் வித்தை மயமாக இருக்கின்றன. தனுர் வேதம் என்று சொல்லுமிடத்து அது வில்வித்தையைக் குறிக்கிறது. ஆயுர்வேதம் என்று சொல்லுமிடத்து மனிதனுடைய ஆயுளைக் காப்பாற்றும் வித்தையைப்பற்றியதாகிறது. ஒவ்வொரு கலையும் ஒரு வேதமாகின்றது. இன்றைய பௌதிக விஞ்ஞானம் வேத சொரூபமாகிறது. இயற்கையிலுள்ள உண்மைகளை அறிந்து இயற்கையைச் சரியாகப் பயன்படுத்தத் தெரிந்துகொள்ளுகிறபொழுது அது வித்யா சொரூபமாகிறது. பிரளயத்திற்குப் பிறகு பிரம்மா தோன்றி வருகிறார். பிரம்மதேவனின் சக்தி சொரூபமாக சரஸ்வதி தேவி இருக்கின்றாள். பிரம்மதேவனுக்கு வேதத்தை அறிந்தவன் என்பது பெயர். சிருஷ்டி வந்தவுடன் கலை வளர்கிறது. அதற்குச் சான்றாக நம் வாழ்க்கையே அமைந்திருக்கிறது. அயர்ந்து தூங்குவது நமக்குப் பிரளயம். தூக்கத்தில் இருந்து எழுந்தவுடன் அன்றைக்குச் செய்யவேண்டிய காரியங்களை அறிவைப் பயன்படுத்தித் திட்டம் போடுகின்றோம்.

சிருஷ்டியின் துவக்கத்தில் பேதம் தோன்றுகிறது. பிரம்மதேவனின் நாவில் சரஸ்வதி இருந்துகொண்டு வேதத்தைத் தோற்றுவிக்கின்றாள். ரிஷிகளின் ஹிருதயத்தில் ஞானோதயம் உண்டாகிறது. சிருஷ்டிகிரமத்தில் ரிஷிகள் தோன்றிவந்தனர். ஞானம் அதிவேகம் அவர்களுடைய உள்ளத்தில் வளர்ந்து வந்தது. அப்படித் தோன்றிவந்த ஞானத்தை அவர்கள் குறித்து வைத்தார்கள். பிரம்மதேவனுடைய செயலையும், ரிஷிகளினுடைய செயலையும் ஒவ்வொரு குழந்தையும் தன்னுடைய வளர்ச்சியில் செய்து வருகின்றது. வளர்ச்சி அடைந்து வரும் குழந்தை ஒவ்வொன்றாக அறிய ஆரம்பிக்கின்றது. அக்குழந்தை அறிவதற்கேற்ற சூழ்நிலையை உண்டுபண்ணித் தருவது நாம் அதற்குச் செய்யும் பெரிய உபகாரமாகிறது. வளர்ந்து வரும் செடிக்குவேலிகட்டிப் பொருத்தமான சூழ்நிலையை உண்டுபண்ணி வைத்து விட்டால் அது விரைவில் வளர்ச்சி அடைகிறது. எல்லா உயிர்களைக் காட்டிலும் மக்களுடைய உள்ளத்தில் அறிவை வளர்க்கும் ஆற்றல் அதிகம் புதைந்து கிடக்கிறது. விலங்கின் குட்டி ஒன்று, பறவையின் குஞ்சு ஒன்று, மானுட சிசு ஒன்று ஆகிய மூன்றையும் ஒரு சூழ்நிலையில் வைத்து வளரும்படி செய்யவேண்

டும். மானுட சிசு சூழ்நிலையை அறிந்து கொள்ளுகின்ற அளவு மற்ற உயிர்கள் அறிந்து கொள்ளா. ஜீவன் பூர்வ ஜன்ம வாசனை யோடு வந்திருக்கின்றான். பொருத்தமான சூழ் நிலையை உண்டுபண்ணி வைக்கின்ற பொழுது ஜீவன் தன் பழைய ஞானத்தைப் புதுப்பித்துக் கொள்கின்றது. சில குழந்தைகள் விரைவில் கற்றுக் கொள்கின்றன. அக்குழந்தைகளுக்குப் பழைய சம்ஸ்காரம் துணைபுரிகிறது. வேறு சில குழந்தைகள் விரைவில் கற்றுக்கொள்வ தில்லை. அவைகளுக்குப் பழைய சம்ஸ்காரம் துணையாக இல்லை என்றுதான் சொல்லவேண் டும். அவைகளுக்கும் பொருத்தமான சூழ் நிலையை அமைத்துத் தந்தால் நாளடைவில் அவைகளும் முன்னுக்கு வருகின்றன. பணக் காரனிடம் மூலதனம் இருக்கிறது. ஆனால் அவன் அதைக்கொண்டு பெரிய வியாபாரம் செய்கின்றான். கூலி வேலை செய்பவன் தனக் குக் கிடைக்கும் பணத்தை வைத்துக்கொண்டு தான் வாழ்க்கை நடாத்தியாக வேண்டும். குழந்தைகள் காலி மனதோடு பிறப்பதில்லை. பூர்வ சம்ஸ்காரங்கள் ஒவ்வொருவருடைய உள் ளத்திலும் புதைந்து கிடக்கின்றன. அச்சம்ஸ் காரங்களுக்கேற்ற சூழ்நிலையைப் புறவுலகில் உண்டுபண்ணி வைத்தால் அவை விரைவில் மேலே வருகின்றன. பிரம்மதேவனுடைய சிருஷ் டியில் முதலில் வந்தவர்கள் அவர்களுடைய மானச புத்திரர்களாகிய சனகன், சனந்தன், சனாதனன், சனத்குமாரன் ஆகிய நால்வர்களா வார்கள். அவர்கள் நிவிருத்தி மார்க்கத்தில்சென் றார்கள். பரப்பிரம்மத்தைத் தவிர இப்பிரபஞ் சத்தை அவர்கள் அங்கீகரிக்கவில்லை. அவர்கள் யாண்டும் பரத்தோடு லயமாகி இருந்தார்கள். இந்நிலை அதீத நிலையாகும். இவர்களுக்குச் சற்றுக் கீழ்நிலையில் பிரம்மதேவன் பிரஜாபதி களை உண்டுபண்ணினார். அவர்கள் உலகப்பற்று டையவர்களாகவிருந்து சந்ததிகளைத் தோற்று வித்தார்கள். பறவைக்கு இரண்டு சிறகுகள் இருப்பன போன்று சமுதாயத்தில் பிரவிருத்தி, நிவிருத்தி ஆகிய இரண்டும் இருக்கவேண்டும். நாம் பிறந்து வளரும் பொழுது அறிவு சொரூபம் ஆக முயல்கின்றோம். அறிவைச் சரியான முறையில் வளர்ப்பது சரியான அம்பிகை உபாசனை ஆகின்றது. சில தாய்மார்கள் தங்களுடைய குழந்தைகளுக்கு அளவுக்கு மீறிப் பால் ஊட்டுவார்கள். குழந்தை சீக்கிரம் வளர வேண்டுமென்ற எண்ணத்தில் அவர்கள் அங்ஙனம் செய்கின்றார்கள். ஆனால் அது அறிவுடைய செயல் ஆகாது. குழந்தை உண் கின்ற அளவுக்கு மேல் உணவு கொடுத்தால் ஜீரணக் கருவி கெட்டுப்போய்விடும். மேலும் குறிப்பிட்ட வேளையில்தான் குழந்தைகளுக்கு உணவு தரவேண்டும். மற்ற வேளைகளில் அது அழுதாலும் அதற்கு உணவு தரக்கூடாது. செடியின் தரம் அறிந்து அதற்கேற்ற சூழ் நிலையை அமைத்துத் தருபவன் கிருஷித் தொழிலை நன்கு அறிந்தவனாகின்றான். அது போன்று குழந்தையின் உள்ளத்தில் எத்தகைய ஞானம் புதைந்து கிடக்கிறது என்பதை அறிந்து அவ் அறிவு வளர்வதற்கேற்ற சூழ் நிலையை அதற்கு அமைத்துத் தரவேண்டும். கல்வியே வராத குழந்தைக்கு அதற்கேற்ற சூழ் நிலையை அமைத்து அதனிடத்தும் அறிவு வளர் வதற்கு உதவுதல் வேண்டும். ஜீரண சக்திக் கேற்ற பிரகாரம் உணவு தருவது போன்று, உள்ள வளர்ச்சிக்கேற்ற பிரகாரம் கல்வி தர வேண்டும். கல்வியைச் சரியாக வழங்குகிறோம் என்பதற்கு அறிகுறி குழந்தைகள் மனமகிழ்ச்சி யோடு பள்ளிக்குப் போகவேண்டும். தாய் குழந்தைக்கு உண்கின்ற அளவு உணவு கொடுத்தால் குழந்தை மகிழ்ச்சியோடு உண்ண வரும். அளவுக்குமேல் உணவு கொடுத்து, குழந்தையை உண்ணும்படிவற்புறுத்தினால்அது தப்பித்துக்கொண்டு ஓடப்பார்க்கும். இதே கோட்பாடு கல்வித்துறைக்கும் பொருந்தும். அம்பிகை வேத ஜனனியாக இருந்துகொண்டு உயிர்கள் அனைத்திற்கும் அவைகளுடைய தகு திக் கேற்றவாறு அறிவைப் பெறுவதற்கான சூழ்நிலையை வழங்குகின்றாள். உயிர்களுக்குத் துணைபுரிகின்ற பாங்கில் அம்பிகை சூழ் நிலையை அமைத்து வைக்கின்றாள். அம்பிகை யின்அத்திட்டத்திற்குத் துணைபுரிகின்ற அளவு நாம் அம்பிகையை உபாசனை செய்தவர்கள் ஆகின்றோம்.

வேத வேத்யா என்பது அம்பிகைக்கு ஒரு பெயர். வேதத்தை முற்றிலும் உணர்ந்தவள் என்பது அதற்குப் பொருள். தத்துவத்தை முற் றிலும் அறிந்தவளாக அம்பிகை இருக்கின்றாள்,

உயர்நிலைப்பள்ளியில் தலைமை ஆசிரியராக இருப்பவர் பையனுடைய உயர்நிலைப்படிப்பு முழுவதையும் அறிந்திருக்கவேண்டும். உயர் நிலைப்படிப்பு முடிந்ததும் அவனுக்கு என்ன துறை பொருந்தும் என்பதை அவர் சொல்பவராக இருக்கவேண்டும். அப்படி அவர் சொல்வாரானால் அவர் அம்பிகையின் மஹிமையை அறிந்தவராகிறார். அம்பிகை யார் யாருக்கு எதை எப்படி வழங்கவேண்டும் என்பதை அறிந்திருக்கின்றாள். ஒரு சமயம் பன்னிரண்டு வயதுள்ள ஒரு பையனைப் பிரசிடென்சி கல்லூரிக்கு அழைத்து வந்திருந்தார்கள். அவனிடம் M. A. வகுப்பில் படிக்கிறவனுடைய கணக்கைக் கொடுத்தபொழுது சிறிது நேரத்தில் அந்தக் கணக்கைச் செய்து முடித்துவிட்டான். அவனுக்கு இன்ன போக்கில் கல்வி வழங்குங்கள் என்று ஒவ்வொருவரும் அபிப்பிராயம் சொன்னார்கள். அப்பொழுது அக்கல்லூரிக்குப் பங்க் என்பவர் தலைவராக இருந்தார். அவர் பகர்ந்ததாவது: "அவனுக்கு நல்ல உணவு தாருங்கள். நன்கு விளையாடச் சொல்லுங்கள். ஓய்வு கொடுங்கள். கொஞ்ச நாட்களுக்கு அவனுக்கும் கணிதத்துக்கும் தொடர்வு இல்லாது செய்து வையுங்கள்." இங்ஙனம் அவர் கூறியதை மற்றவர்கள் அலட்சியம் செய்தார்கள். அப்பையன் சில மாதங்களுக்குள் காலமாகி விட்டான். பங்க் சொன்னதுதான் சரியானது. எந்த உயிருக்கு எவை பொருத்தமானவை என்பதை அம்பிகை அறிவதுபோன்று பண்பட்ட ஜீவர்களும் அறிகின்றார்கள். உயிர்களை ஓம்புதற்கு எல்லாருக்கும் தெரியாது. எந்த உயிர்களிடத்தில் என்ன தகுதி இருக்கிறது? அதை என்ன பாங்கில் வளர்ப்பது? என்பதை அறிந்துகொள்வது அலாதிக்கலையாகும். வைத்திய நிபுணர் நோய்க்கேற்ற மருந்தைத் தருகின்றார். கல்வித்துறையில் நிபுணர் எந்தமாணுக்கனிடத்து அறிவை எந்தப் பாங்கில் தருவது என்பதை அறிந்து தருகின்றார். ராமகிருஷ்ணர் மூன்றாவது வகுப்புவரை படித்திருந்தார். அவர் எழுதிய ராமாயண நகல் ஒன்றைப் பேலூர் மடத்தில் வைத்திருக்கின்றார்கள். அவர் எழுதிய கையெழுத்து நன்றாக இருக்கிறது. கல்வியில் பயன்படுகிற பகுதி எது? பயன்படாத பகுதி எது? என்பதைச் சிறு வயதிலேயே அவர் அறிந்திருந்தார். "இப்பள்ளிப் படிப்பு என்னுடைய பக்தியைக் கெடுத்துவிடும்" என்று பள்ளிக்கூடம் போக மறுத்து விட்டார். பள்ளிக்கூடம் போக மறுத்தவர் மற்ற கலைகளில் திறமை வாய்ந்தவராகவிருந்தார். அபாரமான ஞாபகசக்தி அவருக்கு இருந்தது கலைகளின் தத்துவத்தை எடுத்துப் புகட்டும் திறமை இருந்தது. நூலறிவில் பெறுவதை விடச் சிறந்த நுண்ணறிவு பெற்றிருந்தார். ஓதாது உணர்வதும் சர்வக்ஞனாக இருப்பதும் பரதத்துவத்தின் நிலையாகும். பரதத்துவத்தின் நிலைக்கேற்ப அவர் சர்வக்ஞனாகவும், ஓதாது உணர்ந்தவராகவும் இருந்தார். எதை எடுத்துக் கொண்டாலும் அதன் அடிப்படை உண்மையை உள்ளது உள்ளபடி உரைப்பவராக இருந்தார்.

'எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு'

என்ற குறள் வேதவேத்யா என்பதற்குப் பொருத்தமான விளக்கமாகிறது. கிருஷிகன் ஒருவன் நிலத்தைப்பற்றிய தத்துவத்தை அறிந்திருப்பான். இந்த மண் கட்டடத்துக்குத்தான் உதவும்; சாகுபடிக்கு உதவாது என்று மண்ணைப்பற்றி அறிந்திருப்பான். அவன் சொல்லுவதைக் கேட்காது சாகுபடிக்கு உதவாத மண்ணில் சாகுபடி செய்தால் அது பயனில்லாது போய்விடும். ஒவ்வொரு துறையிலும் அந்தந்தத் துறையில் நிபுணர்கள் சொல்கின்றபடி நடந்து கொள்ள வேண்டும். யார் எதற்குத் தகுதி உள்ளவர்களோ அதில் ஆழ்ந்து செல்லவேண்டும்; மற்றவற்றை ஒதுக்கிவிட வேண்டும். ஸ்ரீ ராமகிருஷ்ணர் தற்காலக் கல்வி பக்தியைக்கெடுத்துவிடும் என்று அறிந்திருந்தார். கல்வியை ஒதுக்கிய ராமகிருஷ்ணர் பக்தியில் ஆழ்ந்து போனார். அதன் விளைவாக அவருக்கு எல்லா ஞானங்களும் வந்தமைந்தன. பள்ளிசென்று படியாத அவர் பகர்ந்ததாவது: "நான்கல்வி கல்லாது ஒருநாள்கூடக் கழித்தவன் அல்லன். கல்லாத நாள் வீணாளாகும். அந்த நாள் செத்ததற்கு நிகராகும்."

"பெரும்பற்ற புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே" என்று பெரியார் ஒருவர் பகர்ந்துள்ளார். நாள்தோறும் நம் அறிவை வளர்த்துவர வேண்டும். ஜீவன் ஒருவன்

தான் எடுத்துக்கொண்ட துறையில் சரியான முறையில் நடந்துகொண்டால் அத்துறையில் மேல் நிலைக்கு வருவான். அம்பிகையைச் சார்ந்திருக்கிற அளவு அறிவு வளர்கிறது. அம்பிகையின் செல்வர்கள், செல்விகளாக இருந்து அறிவை நாம் முறையாக வளர்த்து வர வேண்டும்.

திரிகரணங்கள் வாயிலாக அம்பிகை உபாசனை செய்யவேண்டும். திரிகரணங்களுள் ஸ்தூலமாக இருப்பது சரீரம். அம்பிகைக்கு உரிய ஆலயமாக அதைத் திருத்தி அமைப்பது நல்ல சாதனமாகும். வாக்கு அல்லது சொல் சாதனத்துக்குச் சிறந்த கருவி ஆகிறது. நாதமே பிந்து ஆகும். நாதத்தின் துணையைக்கொண்டு நம்முடைய சொரூபத்தை நாம் திருத்தி அமைக்கலாம். வித்துக்கேற்ற விருக்ஷம் உண்டாகின்றது. நம் சொரூபத்தைத் திருத்தி அமைப்பதற்குச் சிறந்த சாதனமாக இருப்பது ஓசை ஆகும். சில பறவைகள் இரவு முழுவதும் ஓசையைக் கிளப்பிக்கொண்டே இருக்கும். தவளைகள் அங்ஙனம் செய்கின்றன. சில பூச்சிகள் அங்ஙனம் செய்கின்றன. தங்களுடைய இன்பத்தை விளக்குவதற்கு அல்லது தாங்கள் நாடியதைப் பெறுவதற்கு அவைகள் அத்தகைய ஓசையைக் கிளப்புகின்றன. தவளையின் ஓசையைக் கவனித்துக் கேட்டுப்பார்த்தால் ஓர் உண்மை விளங்கும். முதலில் ஓர் தவளை ஓசையைக் கிளப்பும். பிறகு அதைத் தொடர்ந்து அத்தனை தவளைகளும் ஒரேசமயத்தில் ஓசையிடுகின்றன. அவ்வளவும் சேர்ந்து ஒரேசமயத்தில் ஓசையை நிறுத்துகின்றன. இதை ஆராய்ந்து பார்த்தால் சிற்றுயிர்களிடத்திலும்அறிவு இருப்பது தெரிகின்றது. சிற்றுயிர்கள் தங்கள் போக்கில் கடவுள் வழிபாடு செய்கின்றன. ஓர் உயிர் தான் அடைந்திருக்கும் நிலையை விட மேலான நிலையை அடைவதற்குச் செய்யும் முயற்சி கடவுள் வழிபாடு ஆகின்றது. தன்னுடைய நிலையை மேலும் உயர்நிலையாக மாற்றி அமைப்பதற்கு உள்ளத்தில் உண்டாகும் உணர்ச்சி கடவுள் வழிபாடு ஆகும். அவ்வுணர்ச்சி சொல்லாக வடிவெடுப்பதும் செயலாகப் பரிணமிப்பதும் பிரார்த்தனை ஆகின்றது. உயிர்கள் அனைத்தும் மேலான நிலைக்குத் திருந்தி அமைய முயல்கின்றன. உயிர்கள் அறிந்தோ அறியாமலோ பர சொரூபத்தை அடைய முயலுகின்றன. அறிந்து எடுத்துக்கொள்கின்ற முயற்சி மனிதனிடத்து அமைந்திருக்கின்றது.

மனிதன் தன் வாக்கைச் சரியாகப் பயன்படுத்துவது சிறந்த சாதனமாகும். "நாம பாராயண ப்ரீதா" என்பது அம்பிகைக்கு ஒரு பெயர். அம்பிகையின் நாமங்கள் மந்திரங்களாகின்றன. மந்திரங்களின் ஓசையை ரிஷிகள் தரிசனத்தில் பெற்றார்கள். தரிசனத்தில் உணர்ந்த ஓசையைத் திருப்பி உச்சரிக்கின்றபொழுது மனிதன் சொரூபத்தை அது மாற்றி அமைக்கின்றது. ஒவ்வொரு ஜீவனும் ஓசையின் ஸ்தூல விளக்கமாக அமைந்திருக்கின்றான். ராகம், ராகினி என இசை ஆண்பால், பெண்பாலாக வடிவெடுக்கிறது. இசைக்கு வடிவம் உண்டு என்பதை ஓர் ஆராய்ச்சியில் காட்டியுள்ளார்கள். மிகமிக இலேசான தங்கத்தட்டின் மீது நுண்ணிய தூளைப் பரப்பி ஒரு ராகத்தைப் பாடவேண்டும். காற்றில் ஏற்படும் சலனம் தங்கத்தட்டில் மோதி அசைவை உண்டுபண்ணுகிறது. நதியில் தண்ணீர் குறைவாக ஓடும்போது மணலில் வெவ்வேறு வடிவங்கள் ஏற்படுகின்றன. அது போன்று தங்கத்தகட்டில் படும் ஓசையின் சலனத்தால் அதன் மேலே உள்ள தூளில் ஒரு வடிவம் ஏற்படுகிறது. அந்த வடிவத்தைக் கலைத்துவிட்டு மறுபடியும் அதே ராகத்தைப் பாடினால் அதே வடிவம் உண்டாகிறது. ராகத்தை மாற்றி அமைத்தால் அதற்குஏற்ற வடிவம்உண்டாகிறது. ஆக, ராகம் கற்பனையாக வந்தது அன்று என்று தெரிகிறது. தத்துவத்துக்கு உட்பட்டதாக ராகத்தை அமைத்து இருக்கிறார்கள். ராகம், ராகினி ஆகியவைகள் பக்தியை ஊட்டக்கூடியவைகளாகவும், ஆனந்தத்தை உண்டு பண்ணக்கூடியவைகளாகவும், விசனத்தை ஏற்படுத்தக் கூடியவைகளாகவும், காமத்தை உண்டுபண்ணக்கூடியவைகளாகவும், குரோதத்தை உண்டுபண்ணக் கூடியவைகளாகவும் இருக்கின்றன. ஓசை, மனதை மாற்றியமைக்கக்கூடியது. ஓசைகளுக்கிடையில் தெய்வத்தின் நாமங்களாக வடிவெடுத்திருப்பவைகள் கற்பனையாக வந்தவைகள் அல்ல. ஓசைக்கு மூலமாக இருப்பது பிரணவம். ஓங்காரத்தின் கிளைகளாகவும்

மற்ற நாமங்கள் இருக்கின்றன. சிருஷ்டிக்கு முடிவு வரும்பொழுது அது பிரளயமாகிறது. மறுபடியும் சிருஷ்டி உண்டாகிறபொழுது சிருஷ்டியில் தோன்றுகின்ற ரிஷிகளுக்குத் தத்துவங்கள் உதயமாகின்றன. அவர்கள் தத்துவங்களைப் புதுப்பிக்கின்றார்கள். தத்துவங்கள் அழிந்துபட்டுப்போகாது யாண்டும் இருந்துவருகின்றன. புரான பூர்வமாக இதைச் சொல்லுமிடத்து, விஷ்ணுவின் முதல் அவதாரமாகிய மச்ச அவதாரத்தில் கடலுக்கடியில் அசுரர்கள் புதைத்து வைத்திருந்த வேதங்களை மகாவிஷ்ணு கொண்டு வந்தார் என்று சொல்லுகிறோம்.

தத்துவத்தை ஆராய்ந்து பார்க்குமிடத்து உயிர் தோற்றத்துக்கு வந்தவுடன் அறிவை வளர்க்க ஆரம்பிக்கிறது என்பது விளங்கும். வேதத்தைப் புதுப்பிப்பது என்பது அறிவு வளர்ச்சியைக் குறிக்கின்றது. எத்தனையோ உண்மைகள் இப்பொழுது மறைந்து போய் விட்டன. அவை நிரந்தரமாய் மறைந்து போனவைகள் அல்ல. அவ்வைகளைப் புதுப்பிப்பதற்கு மக்கள் வருகின்றார்கள். வேதத்தில் சொல்லியிருப்பதைக் காட்டிலும் இயற்கையைப் பற்றிய பல உண்மைகளை விஞ்ஞானிகள் அறிந்துள்ளார்கள். பழைய காலத்தில் அஸ்திர சஸ்திரங்கள் பிரயோகிப்பதில் மனோசக்தியைப் பயன்படுத்தினார்கள். மனதால் மந்திரத்தை உச்சரித்து எதிரியின் மீது அஸ்திரத்தைப் பிரயோகித்தால் அவ்வஸ்திரம் எதிரி இருக்கின்ற இடத்தைத் தேடிக் கண்டுபிடித்து அவனைச் சம்ஹாரம் செய்துவிட்டுத் திரும்பி வரும். இன்றைக்கு ஜடசக்தியின் வல்லமையினால் உலகத்தில் எந்த இடத்தை வேண்டுமென்றாலும் இருந்த இடத்திலிருந்து தாக்கமுடியும். இவ்வுண்மையைக் கண்டு பிடித்ததின் விளைவாக அமெரிக்காவும், ரஷ்யாவும் கவலைக்கு உள்ளாகியிருக்கின்றன. நவீன மனிதனுக்குக் கவலை அதிகம். தன்னுடைய தெய்வீக மகிமையை மறந்துவிட்டு ஜடசக்தியின் மகிமையை அதிகரிக்கச் செய்கின்ற அளவு மனிதனுக்குக் கவலை அதிகமாகிறது. சித்சக்தியாக இருக்கும் நாமங்களைப் பயன்படுத்தும் பொழுது நம்முடைய சொரூபம் மாறுகின்றது. சக்தி அழிந்து போவதில்லை. அது அறிவு மயமாக இருந்து வருகிறது. மனிதனுடைய முன்னேற்றத்துக்குக் கண்டு பிடிக்கப்பட்ட கருத்துக்கள் சன்மார்க்கம் என்றும், அத்யாத்ம வித்தை என்றும் பெயர் பெறுகின்றன. அம்பிகையின் நாமத்தை நாம் உச்சரித்து வருகிறபொழுது அம்பிகைக்கு மகிழ்ச்சி உண்டாகிறது. தலைமாணக்கன் பாடத்தை ஒழுங்காகப் படித்தால் ஆசிரியருக்கு மகிழ்ச்சி உண்டாகிறது. அதுபோன்று சாதகன் சாதனையை ஒழுங்காகச் செய்தால் அம்பிகை மகிழ்ச்சியடைகின்றாள்.

சிவனார் ஆனந்தத்தாண்டவம் ஆடுகின்றார். சரீர அசைவின் மூலம் அவர் தெய்வீகத்தை ஞாபகமூட்டுகின்றார். நிர்த்தனத்தின் மூலமாக வழிபாடு செய்யலாம். நிர்த்தனத்தில் உள்ள பாவம், முத்திரை ஆகியவற்றின் மூலமாகவும் பெரிய கருத்துக்கள் விளக்கப்படுகின்றன. நிர்த்தனத்தில் இறைவனுக்குத் திருப்தி உண்டாகிறது. இறைவனுடைய நாமத்தைச் சொல்லுவது எளிது. இறைவனுடைய நாமங்கள் அவருடைய சொ ரூ ப த் தை விளக்குகின்றன. நாமத்தை உச்சரிக்கும்பொழுது ஓசை உண்டாகிறது. ஓசையில் மனம் ஒடுங்குகின்றபொழுது ஓசைமயமாக மனம் திருந்தியமைகிறது. மனதைத் திருத்துகின்ற வல்லமை ஓசைக்குஉண்டு. ஓசை இசையாக வடிவெடுக்கிறது. பாம்பாட்டி மகுடி ஊதிப் பாம்பை வசப்படுத்துகின்றான். சில வகையான ஓசைகளைக் கேட்டு மகிழ்ச்சியடைந்து பசுக்கள் அதிகம் பால் தருகின்றன. வாழைத் தோட்டத்தில் பாடல்கள் பாடினால் அவற்றைக் கேட்டு வாழைகள் அதிகம் பயன் தருகின்றன என்று ஆராய்ச்சியில் கண்டு பிடித்திருக்கிறார்கள். சில ஓசைகள் உயிர்களுக்கு உற்சாகமூட்டுகின்றன. ஓசையைக் கடந்த நிலையில் பரம்பொருள் இருக்கின்றார். நாதசொருபிணியாக அம்பிகை இருக்கின்றாள். நாதத்தின் துணைகொண்டு தான் நாதாதீதத்துக்குப் போகமுடியும். கண்ணன் குழலோசையைக் கிளப்பினான். அதைக் கேட்ட உயிர்கள் தங்களை மறந்து அதீத நிலைக்குப் போக ஆரம்பித்தன. இசை மனிதனைப் பிரபஞ்சத்துக்கு அப்பால் கொண்டுபோக வல்லது என்பதை இது காட்டுகிறது. உயிர்களை அதீத நிலைக்கு எடுத்துச் செல்வதற்கு இசையைக் கையாளலாம். (தொடரும்)

அனுமன் - 10

(சுவாமி ஆத்மானந்தர்)

இராவணனைக் காணுதல்

அருமைத் தம்பி அட்சகுமாரன் இறந்தான் என்ற செய்தியைக் கேட்ட இந்திரஜித்து ஆருத் துயரத்தில் ஆழ்ந்தான். வீரம் மிகுந்த அவன் உள்ளம் பழிக்குப்பழி வாங்கத் துடிக்கிறது. நெஞ்சு கொதித்துக் கோபம் பொங்கி எழுகிறது. கண்கள் சிவந்து நெருப்பைக் கக்குகின்றன. 'அனுமனைக் கொன்றே தீருவேன்' என்று வீர உரை பகர்கின்ருன். "தம்பியை நினைந்து நினைந்து தாரை தாரையாகக் கண்ணீர் உகுக்கின்ருன். தம்பியின் இன்னுயிர் காக்க உதவாது போயிற்றே என்று தன் கைவில்லை நோக்குகிருன். சினமிகுதியால் தன் உதட்டை மடித்துக் கடித்துக் கொள்ளுகிருன். மரக் கொம்பேறி வாழும் அற்பக் குரங்கினுல் அழியா ஆற்றலுடைய அருமைத் தம்பி மட்டுமா அழிந்தான்! என் தந்தையின் உலகம் நிறைந்த புகழல்லவா அழிந்துபோய்விட்டது" என்று ஏங்குகிருன்.

"தம்பியை உன்னும் தோறும், தாரைநீர் ததும்பும் கண்ணன்,
வம்பு இயல் சிலையை நோக்கி, வாய்மடித்து உருத்து நக்கான்;
கொம்பு இயல் மாய வாழ்க்கைக் குரங்கினுல், குரங்கா ஆற்றல்
எம்பியோ தேய்ந்தான்? எந்தை புகழ் அன்ருே தேய்ந்தது?"

தந்தை இராவணனிடம் சென்று, தம்பி அட்சகுமாரன் இறந்து போனுனே என்று அவன் கால்களில் விழுந்து கதறியழுகின்ருன். அடிபணிந்து அழுத இந்திரஜித்தைத் தன் கைகளால் வாரியெடுத்து மார்போடு அணைத்துக்கொண்டு இராவணனும் தேம்பித் தேம்பி அழுதான். பின்னர் இந்திரஜித்து இராவணனை நோக்கி: தந்தையே! கடத்தற்கரிய கடலைக் கடந்து, கட்டுக்காவல் மிக்க அசோக வனத்தை அழித்த குரங்கு சாதாரணமானதன்று. நம்முடைய சேனைத் தலைவர்களையெல்லாம் போரிலே கொன்ற அக்குரங்கு மும்மூர்த்திகளைப் போன்று வலிமையுடையதன்ருே! அதனைப் பிடிக்க என்னையல்லவா அனுப்பியிருக்க வேண்டும்! அந்தக் குரங்கு அசாதாரணமான ஆற்றல் உடையதென்று அறிந்திருந்தும், ஆழ்ந்து ஆலோசியாமல் அரக்கவீரர்களைக் கூட்டம் கூட்டமாக அனுப்பி ஆடுகளைப்போல் பலியிட்டுவிட்டாயே. உண்மையில் அரக்க வீரர்களை அக்குரங்கு கொல்லவில்லை; நீயேதான் கொன்று குவித்தனை. கொன்றனை நீயே அன்ருே, அரக்கர்தம் குழுவை எல்லாம்" என்று தன் தந்தை மீது குற்றம் சாட்டினுன். பிறகு தனயனை இழந்து வருந்தும் தந்தைக்குத் தேறுதல் சொல்ல வேண்டியது தன் கடமை என்பதை உணர்ந்து, "ஐயனே, வருந்த வேண்டாம். என் தம்பி அட்சகுமாரனைக் கொன்ற குரங்கினைக் கட்டிப் பிடித்துக் கொண்டுவந்து தங்களிடம் ஒப்படைக்கிறேன்" என்று கூறிப் போருக்குப் புறப்பட்டான்.

போர்க்களம் ஒரே ஆயுதக்காடாய்க் கிடப்பதைக் காணுகிருன். எங்குநோக்கினுலும் பிணக் குவியல்கள் தென்படுகின்றன. எண்ணற்ற அரக்க வீரர்களைக்கொன்ற அனுமனின் வீரத்தினை வியக்கின்ருன். தூதஞக வந்தவன் வீரமே இப்படியென்ருல், இனி ராமனேபோருக்கெழுந்தால் அவனை எப்படைகொண்டு வெல்வது என்று எண்ணுகிருன். கண்ணினும் இனிய கணக்கற்ற அரக்கவீரர் மாண்டு கிடப்பதைக் கண்டு, வெந்தபுண்ணில் வேலெறிந்தாற் போன்று நெஞ்சம் வெதும்பலானுன். அனுமனை நோக்கித் தேரை விரைந்து செலுத்துகிருன். வேகமாகச் சென்ற அவன் தேர் திடீரென நின்றது. காரணம் என்னவென்று கீழே பார்த்தான். அனுமனுல் தரையோடு தரையாய்த் தேய்த்து அழிக்கப்பட்ட தன் தம்பியின் இரத்தம் தோய்ந்த உடம்பினைக் கண்டான். நெஞ்சம் திடுக்கிட்டான். கடுங் கோபம் கொண்டான். கண்கள் நெருப்பைக் கக்கின. அனுமனுடன் போர் தொடுக்க வில்லை வளைத்து நாண்ஒலி எழுப்பினுன். அனுமனும் அதனைத் தோள்கொட்டி வரவேற்ருன்.

தேரேறிவரும் இந்திரஜித்தை அனுமன் நோக்குகிருன். எண்ணற்ற அரக்க வீரரை எமலோகத்திற்கு அனுப்பியதனுல் இவன்

இங்கே வந்துள்ளான். இவன் இந்திரஜித்து வாகத்தான் இருக்கவேண்டும். "இது வரையில் நான் செய்த போரெல்லாம் உண்மையில் போரே அன்று. அவை வெறும் விளையாட்டேயாம். இவனோடு பொருதல் தான் உண்மையில் போராகும். இவனை வெல்வது இராவணனை வெல்வதற்கு நிகராம்" என்று கருதுகிறான்.

அனுமனைக்கண்ட இந்திரஜித்து வில்லை வளைத்து அம்புமாரி பெய்தான். தலையிலும் மார்பிலும் தைக்கும்படி சரமாரியாக அம்புகளைப் பொழிந்தான். அனுமன் தன் கைகளை நீட்டி அவ் அம்புகளையெல்லாம் தடுத்து விடுகிறான். மிகப்பெரிய வடிவுகொண்டு இந்திரஜித்தின் தேரில் குதித்து அதனை அழித்து விடுகிறான். உடனே இந்திரஜித்து வேறு தேர் ஏறி அனுமன் மேனிமீது அம்புமாரி பொழிந்தான். அனுமன் அந்தத் தேர்மீதும் பாய்ந்து அவன் வில்லையும், தேர்ப்பாகனையும், குதிரைகளையும் அழித்துவிடுகின்றான். உடனே இந்திரஜித்து தனக்கு இந்திரன் அளித்த வில்லை எடுத்து அனுமன்மீது காயங்களை உண்டாக்குகிறான். அனுமன் பெரிய மரம் ஒன்றைப் பிடுங்கி இந்திரஜித்தின் மூளை கலங்கும்படி தாக்கினான். அவனைத் தேரோடு தூக்கி மேலே விசியெறிந்தான். அவன் மேலே உயரம் சென்று கீழே விழுந்தான். விழுந்தவுடனே பந்துபோல் விரைந்தெழுந்து விண்மிசை ஏகினன். இப்பொழுது இந்திரஜித்திற்கு ஏறத்தேருமில்லை; எதிர்க்கப் போதிய வலிவுமில்லை. ஆதலால் பிரம்மாஸ்திரத்தை அனுமன் மீது பிரயோகித்தான். பிரம்மாஸ்திரம் அனுமனைக் கட்டிப் பிணித்தது. அனுமன் தரையில் சாய்ந்தான். தன்னைக் கட்டியது பிரம்மாஸ்திரம் என்பதை அனுமன் அறிந்துகொண்டான். அதன் கட்டுக்கு அடங்கியிருக்கவேண்டுமென்று செயலற்று விழ்ந்து கிடந்தான். அனுமனின் வலிவு குலைந்தது என்று இந்திரஜித்து அவனைக் கட்ட முற்பட்டான். சுற்றியிருந்த அரக்க வீரரும் அனுமன் விழ்ந்தது கண்டு ஆரவாரஞ் செய்தனர். பெருமகிழ்வோடு ஓடி வந்து அனுமனைக் கட்டிப்பிணித்தனர். அனுமனை இந்திரஜித்து ஒரு முரட்டுக்காளைமாட்டை இழுத்துப் போவதுபோல், இராவணன் அரண்மனைக்கு அழைத்துப்போகிறான். இந்திரஜித்து அனுமனை அழைத்துப் போவதைக் கண்ட இலங்கை மாநகர ஆண்களும் பெண்களும், சிறியோரும் பெரியோரும் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவென்பதேயில்லை. இந்திரஜித்து இந்திரனைவென்று சிறைப்படுத்திய நாளில் எத்தகைய மகிழ்ச்சி அடைந்தனரோ அத்தகைய மகிழ்ச்சி இன்றும் அடைந்தனர். கட்டுண்டிருந்த அனுமனைக்கண்ட அரக்கரில் பலர், 'இவனைத் தப்பவிடலாகாது. இவனைத்தப்ப விட்டால் அனைவரையும் கொன்று விடுவான். அம்பால் எய்யுங்கள் என்றனர்; கல்லால் எறியுங்கள் என்றனர் சிலர்; கத்தியால் வெட்டுங்கள் என்றனர் சிலர்; தடியால் அடியுங்கள் என்றனர்சிலர்; தரையிலிட்டு அறையுங்கள் என்றனர்சிலர்; உடலைப் பலப்பல கூறுபடுத்துங்கள் என்றனர் சிலர். இந்தக் குரங்கினை இவ்வளவு நேரம் விட்டு வைப்பதா! உடனே கொல்லுங்கள் என்றனர் சிலர். கடலுள் அமிழ்த்துங்கள்; தீயிலிட்டுக் கொளுத்துங்கள் என்றனர் சிலர். அனுமனால் கொல்லப்பட்டோரது உறவினரில் பலர் 'என் தந்தையைத் தந்துபோ; என் தமையனைத் தந்துபோ; என் தம்பியைத் தந்துபோ' என்று தடுத்துக் கேட்டனர். கணவரை இழந்த அரக்கமாதர் 'இந்தக் குரங்கினைக் கொன்று இதன்மீது இருந்துதான் தாலி வாங்குவோம்' என்றனர். அரக்க மாதரில் சிலர் அனுமன் கட்டுண்டு இருப்பதையும் மறந்து, இவன் நம்மைக் கொன்றுவிடுவான் என்று வயிற்றில் அடித்துக்கொண்டு நகருக்கு வெளியே ஓடினராம்.

அரக்கர் ஆர்ப்பாட்டங்களையெல்லாம் பார்த்துக்கொண்டே அனுமன் இராவணன் அரண்மனையை நோக்கிச் செல்லுகின்றான். திரிலோகாதிபதிக்குள்ள ஆடம்பரத்துடன் வீற்றிருக்கும் இராவணன் முன்னிலையில் கொண்டு போய் நிறுத்தப்படுகிறான். இந்திரஜித்து இராவணனை அணுகி, அனுமன் வீரத்தை வியந்து போற்றுகிறான். "ஆண்மைக்குணம் உடையவனை இவன் சிவபெருமான் போலவும், திருமாலைப் போலவும் வலிவு மிக வாய்க்கப்பெற்றவன்" என்று அறிமுகப்படுத்துகிறான். ரத்தினக்கிரிடங்கள் தாங்கிய பத்துத்தலைகளும், இருபதுதோள்களும் கொண்ட இராவணன்

யமனைப் போல் பயங்கரதோற்றமளித்தான். அனுமனைக் கண்டதும் கண்கள் சிவக்கக்கடும் கோபம் கொண்டான். அனுமனைக் கோபம் பொங்கப் பார்த்து, "நீ யார்? இங்கு வந்த காரணம் யாது? நீ சக்கராயுதம் தரித்த திருமாலோ? வஜ்ராயுதம் தரித்த தேவேந்திரனோ? சூலாயுதம் தரித்த சிவபெருமானோ? தாமரை மலரில் தோன்றிய பிரம்மதேவனோ? பூமியைத் தாங்குகின்ற ஆயிரம் தலைகளையுடைய ஆதிசேடனோ? வடிவம் மாறி வந்திருக்கும் நீ யார்? என்ன காரியமாக இங்கு வந்தாய்?" என்று கேட்டான்.

உயிருக்குயிரான அசோகவனத்தை அழித்ததுடன்; பல்லாயிரக் கணக்கான அரக்க வீரரையும் அழித்தொழித்த அனுமனைப் பார்க்கப் பார்க்க இராவணனுக்கு மேலும் மேலும் கோபம் பொங்கி எழுகிறது. அவனுடைய உள்ளத்தில் வினமேல் வின எழுகிறது. அனுமனை நோக்கி மடமடவெனக் கேள்விகளைக் கேட்கின்றான். "நீ பாசக்கயிறு வீசி உயிர்களைப் பறித்துச் செல்லும் யமதர்மனோ? மலையினுள் புக வேலெறிந்த முருகக் கடவுளோ? தென் திசைக்கு உரிமை பூண்ட தமிழ்முனி அகத்தியனோ? திசைகளில் இருந்து ஆட்சி செய்யும் திக்குப் `பாலகர்களில் ஒருவனோ? இவர்களில் யார் நீ? சொல் என்றான். அதற்கு அனுமன் பதில் கூறுவானாயினன். "நீ அடுக்கிச் சொல்லிய அனைவரில் யாருமல்லேன். அந்த அற்ப ஆற்றலுடையவர்களில் யாருடைய கட்டளைக்குட்பட்டும் வந்த ஆளுமல்லேன். ஒரு வில் வீரனின் (செந்தாமரைக் கண்ணனை இராமபிரானின்) தூதனேன் நான்" என்று அலட்சியமாகப் பதில் சொன்னான். அவனை யாரென்று அறிய விரும்புவாயானால் கூறுகிறேன் கேள். "முனிவரும், தேவரும், தேவாதி தேவர்களாகிய மும்மூர்த்திகளும், மற்றும் எத்துணை மேம்பாடு உடையவர்களாய் எத்தனை எத்தனை வகுப்பினருண்டோ அவர்களனைவரும், மற்றுமுள்ள எல்லாப் பிராணிகளும் நினைத்தற்கும் அரிதான மிகப் பெரிய காரியத்தைச் செய்துமுடிக்கப் பிறந்திருக்கின்றான் அப்பெருமகன். உன் தேகபலத்தையும், தவ வலிமையையும், தேவரிடம் பெற்ற ஆயுத பலத்தையும், நீண்ட ஆயுள்பலத்தையும், ஏனைய வரபலங்கள் அனைத்தையும் ஒரே அம்பினால் அழித்துவிடுவான் அந்த வீரன். அவன் நீ வென்ற தேவரல்லன், திக்குப்பாலகரல்லன், கயிலையங்கிரியல்லன், திரிமூர்த்திகளுமல்லன். மற்று, யாவனெனில், பூவுலகத்தை ஒரு குடைக்கீழ் ஆண்ட தசரத சக்கர்வர்த்தியின் திருக்குமாரனாவான். இராமன் என்பது அவன் திருநாமமாகும். மறைகள் போற்றும் மெய்யறமூர்த்தி. கருணையின் உறைவிடம். தன் திருவடிகளைத் தஞ்சம் என்று வந்தடைந்தோர்க்கெல்லாம் வீடுபேறு நல்கும் வள்ளல். படைத்தல், காத்தல், அழித்தல் தொழில்களைச் செய்யும் பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மும்மூர்த்திகளும் கைக்கொண்டிருக்கும் கமண்டலம், சங்கு, சக்கரம், சூலாயுதம் முதலியவைகளை விட்டுக் கையில் வில் ஏந்தி அம்மூர்த்திகளுக்குரிய இருப்பிடமான தாமரை, ஆலிலை, கைலயங்கிரியை நீத்து, அயோத்தியில் இராமன் என்ற ஒரு மூர்த்தியாய் அவதரித்திருக்கின்றான்.

மூலமும் நடுவும் ஈறும் இல்லது ஓர் மும்மைத்துஆய
காலமும், கணக்கும், நீத்த காரணன்—கை வில்
[ஏந்தி,
சூலமும் திகிரி சங்கும் கரகமும் துறந்து, தொல்லை
ஆலமும் மலரும் வெள்ளிப் பொருப்பும் விட்டு,
[அயோத்தி வந்தான்.

உலகில் அதர்மத்தைத் துடைத்துத் தர்மத்தை நிலைநிறுத்தவும், தீயோரை அழித்து நல்லோரைக் காக்கவும் ராமன் அவதரித்திருக்கிறான்.

அறம் தலைநிறுத்தி, வேதம் அருள் சுரந்து
[அறைந்த நீதித்
திறம் தெரிந்து, உலகம் பூணச் செந்நெறி
[செலுத்தி, தீயோர்
இறந்து உக நூறி, தக்கோர் இடர் துடைத்து,
[ஏக, ஈண்டுப்
பிறந்தனன் – தன்பொன்—பாதம் ஏத்துவார்
[பிறப்பு அறுப்பான்.

ராமனின் பெருமையினையும், அவதார நோக்கத்தினையும் இராவணனிடம் எடுத்து இயம்புதலில் அனுமனுக்கு அளவிடற்கரிய உற்சாகம் பிறக்கிறது. தான் இலங்கைக்கு வந்த காரணத்தையும் எடுத்து இயம்புகிறான். "நான் ராமபிரானது அடிமையாவேன்; என் பெயர்

அனுமன்என்பதாகும்.சீதாபிராட்டியைத்தேடித் திசைகள் எங்கும் சேனைகள் அனுப்பப் பட்டன. தென் திசை நோக்கி வந்த வானர சேனைக்குத் தலைவன் வாலியின் மைந்தன். அவன் தூத னாய் இலங்கைக்குத் தனியே வந்தவன் நான்" என்கிறான்.

அன்னவற்கு அடிமை செய்வேன்; நாமமும்
[அனுமன் என்பேன்;
நன்னுதல்தன்னைத் தேடி நாற் பெருந் திசையும்
[போந்த
மன்னரில், தென்பால் வந்த தானைக்கு மன்னவ்,
[வாலி—
தன் மகன், அவன்தன் தூதன் வந்தனென்,
[தனியேன்

என்பது கம்பராமாயணம்.

வாலியின் மைந்தன் பெயர் அங்கதன் என் றிருக்க, அவன் பெயரைச் சொல்லாது அவன் தகப்பன் வாலியின் பெயரைச் சொல்கின் றான் அனுமன். அனுமன் வாயால் 'வாலி' என்ற பெயரைக் கேட்டதும் இராவணனுக்கு மனத்தகத்து அச்சம் உண்டாகிறது. நெஞ்சு பட படக்கின்றது. முன்னாளில் வாலியின் வாலில் கட்டுண்டு தான் பட்ட பாட்டினை எண்ணிப் பார்க்கின்றான். ஆயினும் அரக்கர் கோன் தன் அச்சத்தினை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. வாலியின் பெயரைக் கேட்டுப் பெருமகிழ்வு கொள்வதுபோல் வாய் திறந்து தன் கோரப் பற்கள் வெளியில் புலப்பட 'கட கட' என்று சிரிக்கின்றான். "நான் யாரோ எதிரி என்றல்லவா கருதிவிட்டேன். என் நண்பன் வாலியின் மைந்தன் அனுப்பிய தூத னல்லவா நீ. சரி, போனது போகட்டும். என் நண்பன் வாலி சௌக்கியமாக இருக்கின் றானா? அவன் அரசாட்சி நன்கு நடைபெற்று வருகின்றதா?" என்று கேட்கலானான். இராவணன் வாலியின் யோக க்ஷேமத்தைக் கேட்கத் தொடங்கவே, அனுமனுக்குச் சிரிப்பு வந்துவிட்டது. அவன் இராவணனை 'அரக்க' என்றழைத்து, 'அஞ்சாதே. உன்னை வாலில் கட்டி இங்குமங்கும் அலக்கழித்தபெரு வலிவு படைத்த வாலி இராமன் விட்ட ஒரே அம்பி னால் மண்ணுலக வாழ்வை நீத்து விண்ணுலக வாழ்வை அடைந்தான். அவனுடன் அவன் வாலும் போய்விட்டது. இனி அவன் திரும்பி வாரான். இப்பொழுது எங்களுக்கு அரசன் சூரியகுமாரனான சுக்கிரீவனாவான் என்றான்.

"அஞ்சலை, அரக்க! பார்விட்டு அந்தரம் அடைந்
தான் அன்றே,
வெஞ்சின வாலி; மீளான்; வாலும் போய் விளிந்
தது அன்றே;
அஞ்சன மேனியான்தன் அடுகணை ஒன்றால்
மாழ்கித்
துஞ்சினன்; எங்கள் வேந்தன், சூரியன் தோன்றல்"

என்பது கம்பராமாயணம்.

அனுமனின் பேச்சைக் கேட்டுப் பிரமித்துப் போன இராவணன், 'இராமன், என்ன கார ணத்தினால் வாலியைக் கொன்றான்? அவன் இப்போது எங்கே இருக்கின்றான்? அவனு டைய மனைவியை வாலியின் மைந்தன் அங்க தன் தேடுவானேன்?' என்று கேட்க, அனுமன் பதில் கூறுகின்றான். தேவியைத் தேடிவந்த ராம லக்குவருடன் நட்புக்கொண்டு "என் துயரி னைத் தீர்ப்பாயாக" என்று சுக்ரீவன் ராம னிடம் வேண்டினான். சுக்ரீவனுக்குற்ற துன்பத் தினை உணர்ந்த ராமன் "வாலியின் அரசையும் உன் மனைவியையும் உனக்கு மீட்டுத் தந்தேன்" என்று முன்னர் வாக்குத்தத்தம் செய்து, பின் னர் வாலியைக் கொன்று கொடுத்த வாக்கை நிறைவேற்றினான். அதன் பின்னர் சுக்ரீவன் தன் சேனைகளைத் திரட்டித் திசைகளனைத்தும் தேடுங்கள் என்று கட்டளையிட்டான். நாங் களும் தேடுகின்றோம்" என்றான்.

அனுமன் உரையினைக் கேட்ட இராவ ணன் தன்னை ஒருவாறு சமாளித்துக்கொண்டு, "ஒப்பற்ற உயர்வுடைய உம் குலத்தலைவனைக் கொன்றவனுக்கு அடிமைத் தொழில் செய்யப் புகுந்தீர்களே! இது சரியா? இப்பெரும்பழி எப்படித் தீரும்? உங்கள் செயலை உலகம் புகழு மானால் அது அறியாமை மிக்கதேயாம். தன் தமையனைக் கொன்ற இராமனிடம் அன்பு கொண்ட உன் தலைவன் எனக்குச் சொல்லி யனுப்பிய செய்தி யாது? தூதுவனாகிய நீ என்ன செய்தி கொண்டுவந்திருக்கின்றாய்? உன்னைக் கொல்லேன். அச்சம் ஏதுமின்றி உன் உள்ளத்தில் உள்ளதை ஒளியாமல் என்னிடம் சொல்" என்றான். இராவணனின் கேள்வி களுக்கு அனுமன் பதில்சொல்லுகிறான். அனும னின் உரை நீதிகள் பலநிறைந்தனவாய் இருக்

கின்றன. அவன் அரக்கர்கோனை நோக்கி, "உன்னுடைய மேலான வாழ்க்கையை வீணாக வீழ்த்தினாய். அரச நீதியைச்சிறிதும் எண்ணிப் பார்க்காது அடியோடுபுறக்கணித்தாய். கொடிய தீங்கை நீயே தேடிக்கொண்டாய். முடிவு காலம் உன்னைநெருங்கிவிட்டது. ஆயினும் ஓர் உறுதி உரைக்கின்றேன். அதன்படி நடப்பாயா னால் உன்ஆயுளை நீ பாதுகாக்க முடியும். நீ பெருந்தவம்செய்துபெற்றவாழ்வினைச்சீதையை அபகரித்த மாபாதகத்தினால் பாழ்படச் செய் தனை அதை அறிகின்றாயில்லை. எப்போதும் தர்மம் வெல்லும்; அதர்மம் வெல்லாது. தீமை நன்மையை வெல்லாது என்னும் உண்மையை அறியாது போனாய். முறை தவறிய காமத் துக்கு வசப்பட்டவர்கள் அறிவிழந்து விரைவில் அழிந்து போவார்கள். காமம் மனிதனுடைய ஆயுளைத் தேய்த்து விடுகின்றது. எல்லாக் கேட்டுக்கும் காமம்தான் காரணமாகும். காமமும் காசாசையும் அறிவை மயக்கி அழிக்க வல்ல வைகள். அவைகளினின்று விடுபடுதலைப் போல் அறிவைத் தெளிவிக்கும் உயர்நெறி இல்லையென்பது ஆன்றோர் துணிவு.

"பொருளும், காமமும், என்று இவை போக்கி, வேறு
இருள் உண்டாம் என எண்ணலர்; ஈதலும்
அருளும், காதலின் தீர்தலும், அல்லது, ஓர்
தெருள் உண்டாம் என எண்ணலர்—சீரியோர்"

பிறன் மனைவியை விரும்பி வாழுகின்ற வாழ் வும் ஆண்மையுடைய வாழ்வாகுமா? வேதங் களையெல்லாம் கற்றுணர்ந்த நீ தருமநெறி தவற லாமா? உலகம் முழுதையும் வெற்றி கொள்ள வல்ல உன் உடல் வலிமை, உன் உள்ளத் துள் வைத்திருக்கும் சீதாதேவியைப் பற்றிய காமத்தீயினால் வெந்து சாம்பலாய்விடும். பிரம் மன் முதலியோர் தந்த வரம் தவறினாலும்; இராமபிரான் விடும் சரம் உன்னைக் கொல்லத் தவறாது. நீ பெற்ற செல்வமும், அருமந்த சுற்ற மும், உன் ஆருயிரும் அழியாதிருக்கவேண்டு மாயின், சீதாதேவியை விட்டுவிடு என்று சுக் ரீவன் சொல்லியனுப்பினான்'' என்றான்.

அனுமனின் உரையைக்கேட்ட இராவணன் மனம் பொறாது 'குன்றில் வாழும் குரங்கா எனக்கு நீதியை எடுத்துப் புகட்டுவது? நன்று, நன்று,' என்று பெருஞ்சிரிப்புச் சிரித்தான். பின்பு அனுமனை நோக்கி, 'நீ கூறிய இராம னது வீரமும், சுக்ரீவனது நீதியும் இருக்கட் டும். தூதனாக வந்த நீ அசோகவனத்தை அழித்து அரக்கர்களைக் கொன்றது ஏன்? என் றான். அதற்கு அனுமன், "உன்னைக் காண வேண்டுமென்று விரும்பினேன். ஆனால் உன் னைக் காண்பிப்பார் யாரும் இன்மையால் அசோகவனத்தை அழித்தேன். அரக்கர் என் கருத்தை உணர்ந்து கொள்ளாமல் என்னைக் கொல்ல வந்தனர். அதனால் நான் அவர்களைக் கொல்ல நேர்ந்தது. இப்போது பிரம்மாஸ்திரத் திற்குக் கட்டுப்பட்டு இங்குவந்தது உன்னைக் காணவேண்டுமென்ற விருப்பத்தினால்தான்" என்றான். இதனைக்கேட்ட இராவணனுக்கு அடங்காக்கோபம் மூண்டது. குரங்கைக் கொல் லுங்கள் என்று கட்டளை இட்டான். அரக்கவீரர் அனுமனைப் பிடித்துக் கொல்ல நெருங்கிய போது 'நில்லுங்கள்! நில்லுங்கள்!' என்று கூறி அக்கொலையைத் தடுத்தான் விபீடணன். அவன் கூப்பிய கரங்களுடன் இராவணனை நோக்கி: '' நீ சினங்கொண்டது நியாயமன்று. அருந்தவம் செய்து மூவுலகங்களையும் வெற்றி கொண்டு தனியரசு செலுத்தும் நீ, செய்தி சொல்ல வந்த தூதுவனைக் கொல்லுதல் சரி யன்று. மன்னருள் மாதரைக் கொன்றார் உள ரெனினும், தூதரைக் கொன்றார் எவருமிலர். தூதுவந்த இந்தக் குரங்கைக் கொல்லுதலினும் நம்குலத்துக்குப் பெரும் பழி தரவல்லது பிறி தொன்றில்லை. இந்தக் குரங்கினைக் கொன்றால், நம் குலத்துக்கு எதிரிகளாகிய தேவர்களும் நம்மைப் பார்த்துச் சிரிப்பார்கள். இவனைக் கொல்வாயானால், இங்கு நிகழ்ந்த நிகழ்ச்சிகளை யும் செய்திகளையும் இராமனிடம் சென்றுசொல் லாதபடி செய்தவனாவாய். அன்றியும் 'உன்னைக் கொல்லேன்' என்று அக்குரங்கினிடம் முன்பு வாக்களித்தும் உள்ளாய்" என்று பணிவுடன் சொன்னான். வீடணன் நல்லுரைகளைக் கேட்ட இராவணன் 'சரி' என்று ஒப்புக்கொண்டான். தம்பியின் கூற்று அவனுக்கு நியாயமாகப்பட் டது. ஆயினும் அனுமனை அவன் சும்மா அனுப்ப விரும்பவில்லை. 'குரங்குக்கு வால்தான் முக்கியமானது. அடாத செயலைச் செய்த இக் குரங்கின் வாலில் நெருப்புவைத்து ஊரைச் சுற் றிக்கொண்டுபோய் விரட்டிவிடுங்கள்' என்று உத்தரவிட்டான்.

ஸ்ரீ லலிதா வியாக்கியானம்-131

752. महाग्रासा மஹாக்ராஸா — நழுவ விடாத பெரும் பிடியை உடையவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

அண்டங்கள் பல தோற்றத்தில் வந்துள்ளன. அவைகள் ஒன்றோடொன்று சம்பந்தப்படா தவைகள் போன்று தென்படுகின்றன. சான்ருக சூரிய மண்டலத்தை எடுத்துக் கொள்ளலாம். கிரகங்கள் சில சூரியனைச் சார்ந்திருக்கின்றன. பூமி, செவ்வாய், புதன், வியாழன்முதலிய கிரகங்கள் தனித்தனியாக இயங்கிவருகின்றன. ஆயினும் அவைகளின் இயக்கங்கள் சூரியனுடைய ஆகர்ஷணம் அல்லது ஈர்ப்புச் சக்தியில் கட்டுண்டு இருக்கின்றன. எந்தக் கிரகமாவது நெறிவழுவித் தன்போக்கில் போக முடியாது. அங்ஙனம் கிரகங்களை அதனதன் ஸ்தானத்தில் வைத்து அதனதன் பாதையில் முறையாக இயங்கும்படி செய்வது இயற்கைத் தாயின் ஆகர்ஷண சக்தியாக அமைந்திருக்கிறது. இப்படி அண்டங்களனைத்தும் அவளுடைய பிடிப்பில் அடங்கியிருக்கின்றன. பிரளய காலத்தில் அவைகளை ஒடுக்குவதும் அவளுக்கு விளையாட்டுப் போன்று அமைந்திருக்கிறது. பூச்சிகளை எடுத்து விழுங்குவது பல்லிக்கு எவ்வளவு எளிதோ அவ்வளவு எளிதில் அண்டங்கள் யாவையும் ஒரு நொடிப் பொழுதில் எடுத்து விழுங்க வல்லவளாக அம்பிகை இருக்கின்ருள். அவைகளைத் தோற்றத்தில் வைத்திருப்பதும் தோற்றத்தில் இல்லாது தன்னகத்து ஒடுக்கி வைப்பதும் அவளுடைய திருவுளப் பாங்கின் போக்காம். அம்பிகையின் திறமைக்கு இச்செயல் நல்லதொரு எடுத்துக்காட்டு ஆகிறது.

753. महाशना மஹாசனு— பேருண்டி உண்பவள் என்பது இதன் பொருள்.

உணவை உண்கிற மனிதன் அந்த உணவை செமித்துத் தன் மயம் ஆக்குகிருன். உண்ட உணவு ஜீரணமாகாவிட்டால் உண்பவனுக்கு அது ஆபத்தாக முடியும். மனிதனல் எதை ஜீரணம் பண்ணமுடியுமோ அதை மட்டுமே அவன் ஆகாரமாக எடுத்துக்கொள்ள வேண்டும். அன்னை பராசக்திக்குச் சேதனம், அசேதனமாகிய பிரபஞ்சப் பொருள்கள் யாவும் பொருத்தமான உணவுகளாக அமைந்திருக்கின்றன. அம்பிகையின் கண் விழிப்பில் அண்டங்கள் தோற்றத்துக்கு வருகின்றன. அவள் கண் மூடினல் அவை யாவும் அவளிடத்து ஒடுங்கிப் போகின்றன. உணவு உண்பவனும் அவன் உண்கின்ற உணவும் அமைப்பில் ஒன்றையொன்று ஒத்திருக்கின்றன. சான்று ஒன்று எடுத்துக்கொள்ளுவோம். நெற்பயிர் வளர்ந்து விளைபொருள் ஆகிறது. அதில் அரிசியை உண்ணத் தகுந்தவனுக மனிதன் இருக்கிருன். அந்த விளைபொருளில் வேறு எதையும் உண்ண அவனுக்கு இயலாது. வைக்கோலைக் கால்நடைகள் உணவாக ஏற்றுக்கொள்ளுகின்றன. அந்தந்த உடலமைப்புக் கேற்ற உணவு என்னும் கோட்பாடு இதில் அடங்கியிருக்கிறது. இக்கோட்பாட்டின்படி அண்டகோடிகளனைத்தும் அன்னைக்கு ஏற்ற உணவாக அவளுடைய சொரூபத்தில் ஒடுங்குகின்றன; மீண்டும் தோற்றத்திற்கு வருகின்றன. அன்னைக்கும் அண்டங்களுக்குமுள்ள தொடர்பு இச்செயலின் மூலமாக நன்கு வெளியாகிறது.

754 अपर्णा அபர்ணு — கடமைப்படாதவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

குழந்தையைப் பேணத் தாய் கடமைப்பட்டிருக்கிருள். தாயின் பராமரிப்பு இல்லாவிட்டால் குழந்தை வளர முடியாது. ஜீவகோடிகளனைத்தும் அன்னை பராசக்தியின் குழந்தைகள். ஆதலால் அவைகளுக்கு உணவூட்டி அவைகளை முறையாக வளர்க்கக் கடமைப்பட்டிருக்கிருள். அச்செயல் புரிவதில் அவளுக்கு யாதொரு சிரமமும் இல்லை. ஏராளமாகப் பாலை உடைத்திருக்கிற பசுவானது கன்றுக்கும் வேண்டியவளவு பாலைக் கொடுக்கிறது. அதே விதத்தில் மக்களுக்கும் அது தாராளமாகப் பாலை எடுத்து வழங்குகிறது. ஏராளமாகத் தீனியைத் தின்றுவிட்டு மக்களுக்குப்பால் ஏதும் தரப் பசு ஒன்றுக்கு இயலாது போனல் மக்களிடத்து அது கடன்பட்டதாகிறது. அத்தகைய பரிதாபகரமான நிலை யாருக்குமே ஒவ்வாது. காமதேனுக்கு நிகராக அன்னை பராசக்தி தன்னிடத்திருந்து தோன்றி வந்துள்ள உயிர்வகைகளனைத்துக்கும் வேண்

டியவாறு உணவைக் கொடுத்து உதவுவதால் அவள் அபர்ணா அல்லது எவ்வுயிர்க்கும் கடன் பட்டவள் அல்லள் என்னும் பெரிய ஸ்தானத்தில் அவள் இருக்கிறாள்.

பர்ணம் என்றால் இலை. பார்வதிதேவி கடுந் தவம் புரிந்தாள். அப்பொழுது உண்ணுதற்குரிய ஒரு இலையையும் கூட உணவாக ஏற்றுக் கொள்ளாது கடுந்தவத்தில் ஈடுபட்டிருந்தாள். அதன் விளைவாகவே அவள் சிவத்துக்கு உரியவள் ஆனாள். அச்செயலின் மூலமாகத் தன் குழந்தைகளாகிய மக்களுக்கு அவள் பாடம் புகட்டிக்கொண்டிருக்கிறாள். சிவனை அடைவதற்கு நிகரான அரிய பெரிய செயல் எதையேனும் சாதிக்க விரும்புகிற மனிதன் அதற்கேற்ற தியாகத்தையும் தபசையும் கையாண்டாக வேண்டும். பெறுகிற பொருள் எவ்வளவு பெரியதோ முயற்சியும் அதற்கேற்ற பெரு முயற்சியாயிருக்க வேண்டும் என்பது அபர்ணா என்னும் நாமத்தின் உட்பொருளாம்.

755. चण्डिका சண்டிகா — சினந்து கொள்ளுபவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

உலக நடைமுறைக்குச் சினம் ஓர் இன்றியமையாத கூறு ஆகும். தாய் ஒருத்தி தன் குழந்தையைச் செல்லமாக வளர்க்கிறாள். அக்குழந்தையோ களியாட்டத்தில் வரம்பு கடந்து போகிறது. அப்பொழுது சினந்து கொள்ளும் பாங்குடையவளாகத் தாய் இருக்க வேண்டும். சினத்தின் மூலம் பொருந்தாத செயலுக்கு ஆட்சேபம் வருகிறது. தாய்க்குச் சினந்துகொள்ள இயலாவிட்டால் அவளுடைய குழந்தை கெட்டுப்போவது திண்ணம். அன்னை பராசக்தி ஜீவகோடிகளனைத்தையும் பேணி வருகிறாள். எந்தெந்த ஜீவனிடத்து எந்தெந்த வேளையில் எத்தகைய தடையைப் போட வேண்டுமோ அதை நெறி பிறழாது அகிலாண்டநாயகி இயற்றி வருகிறாள். அவளுடைய கோபம் பலப்பல வடிவெடுக்கிறது. பூகம்பமாக வருவது பராசக்தியின் கோபம். புயல் காற்றாக வருவது அவளுடைய கோபம். காட்டுத் தீயாக எங்கும் பற்றி எரிவது அவளுடைய கோபம். ஜலப் பிரளயத்துக்கு நிகராக மழையை அபரிமிதமாகப் பொழிந்து தள்ளுவது அவளுடைய கோபம். மழை பெய்யாது பொய்த்துப் போய்ப் பஞ்சம் வருவது அவளுடைய கோபம். கொள்ளை நோயாக வடிவெடுத்துஎண்ணிறந்த உயிர்களைத் துடைத்துத் தள்ளுவது அவளுடைய கோபம். நாடுகளுக்கிடையில் போராட்டம் மூண்டு கணக்கற்றபேர் போரில் மடிந்து போவது அவளுடைய கோபம். இவை யாவும் விசுவத்திற்குரிய விரிவடைந்த செயல்கள் ஆகின்றன. இனி, சிறிய சிறிய அளவிலும் அவளுடைய கோபம் வெளியாகிறது. மானுடனொருவனுக்கு நோய், நொடி, கஷ்டம் நஷ்டம் வந்தால் அது ஒரு போக்கில் அன்னையின் கோபமாகிறது. அம்மனிதன் செய்த பிழை அக்கோபத்தின் வாயிலாகத் திருத்தியமைக்கப்படுகிறது. இங்ஙனம் அன்னை சூழ்நிலைக்கேற்றவாறு சினந்துகொண்டு உலகின் நடைமுறையைத் திருத்தியமைத்து வருகிறாள். இதுவே சண்டிகா என்னும் நாமத்தின் உட்பொருளாம்.

756. चण्डमुण्डासुरनिषूदिनी சண்டமுண்டாசுர நிஷூதினீ — சண்டன் முண்டன் என்கின்ற அசுரர்களைச் சம்ஹாரம் செய்தவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

இயற்கை முழுதும் அன்னையின் சொரூபம். இயற்கையில் நலன்கள் இருப்பது போன்று கேடுகளும் உள. கேடுகளிலிருந்துவிலகியிருந்து நலனிலேஉறுதிபெறுவது வாழ்க்கையின் குறிக்கோள். கேடு பெரும்பாலும் இரண்டு கூறுகள் உடையதாகக் காணப்படுகிறது. வரம்புக்குட்பட்ட காமம் வாழ்க்கைக்கு இன்றியமையாதது. அதே விதத்தில் வரம்புக்குட்பட்ட குரோதம் அல்லது கோபம் வாழ்க்கைக்குத் தேவையாயிருக்கிறது. அந்தக் கோபத்தின் பயன் சண்டிகா என்னும் நாமத்தில் விளக்கப்பட்டிருக்கிறது. இக்காமமும், கோபமும் வரம்புக்கு மீறிப் போனால் அவை வாழ்க்கைக்குப் பெரும் தீங்கை உண்டு பண்ணுகின்றன. பெரும் தீங்கை விளைவிக்கின்ற பிரகிருதிகளெல்லாம் அசுரர் என்னும் பெயர் பெறுகிறார்கள். வரம்பு கடந்த பேராசை, கட்டிலடங்காத கடும் கோபம் ஆகிய இரண்டு தீய கூறுகளின் வடிவங்களாக வந்தவர்கள் சண்டன், முண்டன் என்னும் புராணபூர்வமான அசுரர்கள்.

மக்களாகிய நமக்கு வாழ்க்கைக்கு உணவு இன்றியமையாதது. உணவை அளந்து

உண்ணுவது அவசியம். மிதூண் விரும்பேல் என்பது கோட்பாடு. மிகைபட உண்டால் அந்த உணவே வயிற்றினுள் புகுந்து நமக்கு விரோதியாகிறது. விரோதியை எப்படியாவது வெளிப்படுத்தியாக வேண்டும். வாந்தி பண்ணுவது ஒன்றே உற்ற உபாயம். அங்ஙனம் இயற்கைத் தாயின் அமைப்பில் வடிவெடுத்துள்ள விருப்பு வெறுப்பு என்னும் இரண்டு மனநிலைகள் அசுரர்களாகக் கருதப்படுகின்றன. இந்த அசுரர்களுக்குச் சண்டன், முண்டன் என்னும் பெயர்களும் தரப்பட்டிருக்கின்றன. புராண பூர்வமாகப் பராசக்தி அவர்களோடு பயங்கரமாகப் போர் புரிகின்ருள். கடைசியில் அவர்களைத் துடைத்துத் தள்ளுகிருள். ஆத்ம சாதகன் செய்ய வேண்டிய அந்தக்கரண பரிபாகத்தின் புறத்தோற்றமாகச் சண்டமுண்டாசுர நிஷூதம் அமைந்திருக்கிறது. அகத்தில் நாம் அடைய வேண்டிய பரிபாகத்தைப் புறத்தில் அம்பிகையின் அரிய பெரிய செயலாக உருவகப்படுத்தப் பட்டிருக்கிறது. காமத்தை வென்றவன் கடவுள் சொரூபமாக மாறுகிருன். குரோதத்தை வென்றவன் தன்னுடைய நிஜசொருபத்திலேயே நிலைபெற்றவனுகிருன். எங்குக் காமம் இருக்கிறதோ, அங்குக் குரோதமும் நிச்சயமாக நிலைத்திருக்கும். தடைப்பட்ட காமமே குரோதமாக வடிவெடுக்கிறது. கீர்த்தியில் ஒருவனுக்குப் பேராசை பிடித்திருக்கிறது. அன்னவனை இகழ்ந்து பேசினுல் அவனுக்கு அடக்க முடியாத சினம் உருவெடுக்கிறது. ஆக, காமமும் குரோதமும் இணைபிரியாதிருப்பதுபோன்று சண்டனும் முண்டனும் ஆகிய இரண்டு அரக்கர்களும் இணைபிரியாது இருந்துகொண்டு மக்களுக்கு இடுக்கண்செய்து கொண்டு வருகின்றனர். அன்னவர்களை அழித்துத் தள்ளுவது அம்பிகையின் செயல். சண்டனையும், முண்டனையும் மாய்த்ததினுல் அவள் சாமுண்டி என்னும் நாமம் படைத்துள்ளாள். அன்னையை ஆராதிப்பவர்கள் தங்கள் உள்ளத்தில் மறைந்திருக்கிற சண்டனையும், முண்டனையும் சம்ஹாரம் செய்தல் வேண்டும்.

757. क्षराक्षरात्मिका க்ஷராக்ஷராத்மிகா— கேடுற்றவை, கேடற்றவை ஆகிய பொருள்களின் வடிவிலிருப்பவள் என்பது இதன் பொருள்.

எது தோன்றி, இருந்து, ஒடுங்குகின்றதோ அது க்ஷரம். நிலைமாறிக்கொண்டிருப்பது என்பது அதன் பொருள். இப்பிரபஞ்சம் க்ஷரமாகக் காட்சிகொடுத்துக்கொண்டிருக்கிறது. எங்குத் திரும்பி இயற்கையில் எப்பகுதியைப் பார்த்தாலும் அதில் புதிய வடிவம் உண்டாவதும், உண்டாகிய வடிவு சிறிதுகாலம் நிலைத்திருப்பதும் பிறகு அந்த வடிவத்தை இழந்து அது தோன்ருநிலைக்குப் போவதும் அதனுடைய பாங்காக இருந்து வருகிறது. மாறியமைதல் என்பது க்ஷரத்தினுடைய நேர் பொருள். அது இயற்கைக்கு முற்றிலும் பொருத்தமானது. எது இயங்குகிறதோ அது இயற்கை. இருபத்துநான்கு தத்துவங்களையுடைய பிரகிருதியானது சர்வகாலமும் மாறியமைந்து கொண்டேயிருக்கிறது. இப்படி மாறியமைகின்ற பிரகிருதிக்கு ஆதாரமாயிருப்பது யாண்டும் இருந்தபடி இருக்கிறது. அது எங்கும் நிறைந்திருப்பதால் அசைவதில்லை. அது அசைகின்ற பிரகிருதியினூடு ஊடுருவியும் அதற்கப்பாலும் இருக்கிறது. அது நித்தியப் பொருள். அது அக்ஷரம் எனவும், அக்ஷரப் பிரம்மம் எனவும் பெயர் பெறுகிறது. இந்த இரண்டின் கூட்டுறவால் உயிர்வகைகள் உருவெடுக்கின்றன. ஒவ்வோர் உயிரிடத்தும் மாறியமைகிற உடல் தத்துவமும் யாண்டும் இருந்தபடி இருக்கிற ஆத்ம தத்துவமும் அமைந்துள்ளன. யாண்டும் மாறியமைகிற பொருளுக்கு மாருதிருப்பது ஆதாரமாகிறது. அதற்கு நல்ல சான்று மாறியமைகிற நான்கு பூதங்களுக்கும் மாறியமையாத ஆகாசம் ஆதாரமாயிருக்கிறது. இந்த ஆகாசமே சிதாகாசமாகுமிடத்து அது அக்ஷரபிரம்மமாக அமைகிறது. மற்ருெரு சான்று கடலின் கீழ்ப்பகுதி அசைவதில்லை. மேல் பரப்போ அலையெடுத்து விளையாடிக்கொண்டிருக்கிறது. கடல் எங்ஙனம் க்ஷர அக்ஷரமாக இருக்கிறதோ பஞ்சபூதங்கள் எங்ஙனம் க்ஷர அக்ஷராத்மாவாக இருக்கின்றனவோ அங்ஙனம் அன்னை பராசக்தி க்ஷரமாயுள்ள பிரகிருதி தத்துவமாகவும் அக்ஷரமாக இருக்கின்ற ஆத்மதத்துவமாகவும் விளங்கிக் கொண்டிருக்கிருள் என்பது இந்த நாமத்தின் கருத்து.

ஸத் ஸம்பாஷணை

கேள்வி: (205) கடவுள் நல்லவர்களுக்கு அனுக்ரஹம் பண்ணுகிறார் என்பது கோட்பாடு. கெட்டவர்களுக்கும்தானே அவர் அனுக்ரஹம் பண்ணவேண்டும்? டாக்டர் நோயாளிகளைக் கண்ணும்கருத்துமாகக் காப்பது போன்று கெட்டவர்களை நல்வழிக்குத் திருப்புவதற்குக் கடவுள் ஏதாவது முயற்சிஎடுத்துக்கொள்கிறாரா?

நோயாளிகளுடைய நோயை நீக்குதலில் டாக்டர் முயற்சி மிக எடுத்துக்கொள்கிறார். ஆரோக்கியமாக இருக்கிறவர்களைப்பற்றி அவருக்கு அக்கறை இல்லை. அக்கறை எடுத்துக் கொள்ளவேண்டிய அவசியமும் இல்லை. கடவுள் நல்லார்க்கு மட்டும் அனுக்ரஹம் பண்ணுகிறார்; மற்றவர்களைக் குறித்து உதாசீனராக இருக்கிறார் என்பது உண்மையன்று. நல்லார், பொல்லார் ஆகிய எல்லார்க்கும் அவர் பொது நிலையிலிருந்துகொண்டு அவரவர் தகுதிக்கேற்ற பிரகாரம் கடவுள் உதவிபுரிகிறார். அனுக்ரஹம் என்னும் சொல்லை முதலில் ஆராய்ந்து பார்க்கவேண்டும். நிக்ரஹம் என்னும் சொல்லின் எதிரிடை அனுக்ரஹம். நிக்ரஹம் என்றால் தடை. அனுக்ரஹம் என்றால் தடையை நீக்குதல். சான்றொன்று எடுத்துக்கொள்வோம். பாதையில் போகும் வண்டிகளை ஒழுங்காகப் போவதற்கு உதவிபுரிதற்குப் போலீஸ்காரன் அமர்த்தப்பட்டிருக்கிறான். அவன் தன் கடமையை முறையாகக் கவனித்து வருகிறான். பாதையில் போகின்ற வண்டிகள் போக்குவரத்து நியதிகளைக் கடைப்பிடிக்கக் கடமைப்பட்டிருக்கின்றன. ஒழுங்காகப்போகிற வண்டிகளுக்குப் போவதற்கு அவன் அனுமதி கொடுக்கின்றான். ஒழுங்கு பிசகுகிற வண்டிகளுக்கு அவன் தடைபோடுகிறான். அப்படி அவன் தடைபோடுவது வண்டிக்காரனுக்கு இடைஞ்சலாக அல்ல. தடைபோடுவதன் வாயிலாக வண்டிக்காரனுக்கும் நலன் பண்ணுகின்றான்; மற்றவர்களுக்கும் நலன் பண்ணுகின்றான். தடைபோடுவதே அவன் பண்ணுகிற பேருபகாரமாகிறது. கடவுளின் பாங்கு மிக மேலானது. நெறிபிறழ்வதற்கு அவர் இடம் தருவதில்லை. தர்மகோப்தா என்பது கடவுளுக்கு அமைந்துள்ள பெயர். தர்மமும் தர்மவானாகிய கடவுளும் ஒன்றே. தர்மத்தினின்று பிசகுகின்றவனுக்கு எக்காலத்திலும் எல்லாச் சூழ்நிலைகளிலும் எச்சரிக்கை வருகிறது. அந்த எச்சரிக்கையைப் பயன்படுத்திக்கொண்டால் அது அனுக்ரஹம் ஆகிறது. எச்சரிக்கையை மீறி நடந்துகொண்டால் அவன் துன்பத்திற்கு ஆளாகிறான். துன்பத்தை விளைவிப்பது நிக்ரஹம். துன்பத்தின் வாயிலாக அவன் பாடம் கற்றுக்கொள்ளுகின்றான். கற்றுக்கொண்டபிறகு மீண்டும் அப்பிழையை அவன் செய்யமாட்டான். எரிகிற தீபத்தைக் குழந்தையொன்று எட்டிப் பிடிக்க முயலுகிறது. தாய் அதற்குத் தடைபோடுகிறாள். தாய் கவனிக்காதபொழுது தீப்பிழம்பைக் குழந்தை தொடுகிறது. கை காந்திப் போகிறது. குழந்தை கோவென்று கதறி அழுகிறது. நிக்ரஹத்தை மீறியதின் விளைவு அது. தர்மவானாகிய தெய்வம் தர்ம அனுஷ்டானத்திற்கு அனுக்ரஹமும், அதர்ம அனுஷ்டானத்திற்கு நிக்ரஹமும் வழங்குகிறார். நிக்ரஹத்தை மீற முயன்றால் அது துன்பமாக விளையும். ஆகவே கடவுள் நல்லார் பொல்லாராகிய எல்லார்க்கும் நலனையே வழங்குகின்றார். அவர் போடுகிற நிக்ரஹம் அல்லது தடை தங்களுடைய நலத்துக்காகவென்று அறிந்துகொள்ளாதவர்கள் தங்களுடைய தீச்செயலின் வாயிலாகத் தங்களுக்குத் தாங்களே துன்பத்தை வரவழைத்துக் கொள்ளுகிறார்கள். ஆக நெறி பிறழுகிறவர்களைக் கடவுள் உதாசீனராகக் கைவிட்டு விடுகிறார் என்பது உண்மையன்று. எல்லா உயிர்களின் நலத்திலேயே அவர் கருத்தைச் செலுத்துகிறார். கடவுளின் திட்டப்படி அனுக்ரஹம் எவ்வளவு நலனைச் செய்கின்றதோ அவ்வளவு நலனை நிக்ரஹமும் செய்கிறது. இக்கோட்பாட்டை அறிந்துகொள்ளுகின்றவர்கள் மிகச் சிலர்.

கேள்வி: (206) சிவன், அம்பிகை, திருமால் இவர்கள் உக்கிரமூர்த்திகளாக மாறியமைவதற்குக் காரணம் என்ன?

சிவனுடைய உக்கிர சொரூபம் ருத்திரன். அம்பிகையின் உக்கிர சொரூபம் ஸ்மசானகாளி.

திருமாலின் உக்கிர சொரூபம் நரசிம்மமூர்த்தி. தெய்வம் சாந்தமூர்த்தியாகவும், உக்கிரமூர்த்தியாகவும் அமைந்திருப்பது தத்துவத்தின் பாங்கு ஆகிறது. உக்கிரமூர்த்தியாக அமையாது சாந்தமூர்த்தியாகவே யாண்டுமிருந்தால் நலன் தானே என்பது கேள்வியினுடைய உட்கருத்து. இம்மூன்று தெய்வங்களும் தத்துவ அமைப்பில் பொருள் ஒன்றே. சமய அனுஷ்டான வசதிக்காக ஒரு தெய்வம் அந்தந்த சமயத்துக்குரிய தெய்வமாக வடிவெடுக்கிறது. எப்படி வடிவெடுத்தாலும் தெய்வத்திடத்துச் சாந்த சொருபம் உக்கிரசொரூபம் ஆகிய இரண்டும் சேர்ந்தே அமைந்திருக்கின்றன. ஜீவகோடிகளைப் பண்படுத்துதற்குச் சாந்தசொருபம் பயன்படுவதைவிட உக்கிர சொருபம் அதிகமாகப் பயன்படுகிறது. கடவுள் தாமே பஞ்சபூதங்களாகப் பரிணமித்திருக்கிறார். பஞ்சபூதங்களுள் பூமி பொறுமையே வடிவெடுத்தது. ஆனால் பூமியில் உண்டாகின்ற பூகம்பம் அதனுடைய உக்கிர சொருபம். பூகம்பத்தின் வாயிலாக உயிர்களுக்குப் பரத்தைச் சார்ந்திருக்கும் பாடம் புகட்டப்படுகிறது. மக்கள் எவ்வளவுதான் எச்சரிக்கை எடுத்துக்கொண்டாலும் தற்பாதுகாப்புக்கு அந்த எச்சரிக்கை போதாது. பரம்பொருளின் துணையும் தேவை என்பதைப் பூகம்பமாகிய பூமாதேவியின் உக்கிர சொருபம் பாடம் புகட்டுகிறது. நீர் இல்லாது நில உலக வாழ்க்கை நிலைபெறாது. ஆனால் மழையாகப் பொழிகிற நீரே மிகைபடப் பொழிந்து தள்ளுமாயின் உயிர்களை அது அல்லற்படுத்துகிறது. அல்லலைச் சமாளிப்பது வாழ்க்கைப் பயிற்சி. கடலிலே மாலுமி கப்பலைச் செலுத்துகிறான். கடல் யாண்டும் அமைதியுற்றிருக்குமாயின் மாலுமியினுடைய திறமை மேலோங்குவதில்லை. கடலில் கொந்தளிப்பு நேருமானால் அக்கொந்தளிப்பைச் சமாளிக்கிற மாலுமி கப்பல் ஓட்டும் திறமையில் மேலோங்குகிறான். எனவே கொந்தளிப்பு என்னும் கடலின் உக்கிர சொருபம் மனிதனுடைய திறமையை வெளிப்படுத்துவதற்குப் பயன்படுகிறது.

கேள்வி: (207) 'தியானம் பண்ணுகிறபொழுது கிழக்குப் பார்த்து உட்காரவேண்டும் என்றும் வடக்குப் பார்த்து உட்காரவேண்டும் என்றும் சொல்லப்படுகிறது. அது முற்றிலும் அவசியமா? அதன் நோக்கம் யாது?

பூமியில் வசித்து வருகிற நமக்கு நான்கு திக்குகளும் புலப்படுகின்றன. நம்முடைய நடமாட்டங்களில் நான்கு திக்குகளையும் பயன்படுத்துகின்றோம். குறிப்பிட்ட ஒரு இடத்திற்குப் போதல் என்றால் இன்னதிக்கில் இவ்வளவு தூரம் போகவேண்டும் என்னும் ஏற்பாடு அமைகிறது. தியானம் பண்ணுகிற நாம் கருவி கரணங்களை ஒதுக்கி வைத்துவிட்டு மனதை அந்தர்முகத்தில் செலுத்துகிறோம். நம்முடைய அந்தக்கரண அமைப்பில் திசைகளுக்கு இடமில்லை. ஆதலால் சரியான தியான அவஸ்தையிலிருக்கின்றபொழுது திக்குகளைப் பற்றிய எண்ணம் வருவதில்லை. திக்குகளைப்பற்றிய எண்ணம் வந்தால் அது தியானமாகாது. வசதியையும், சூழ்நிலையையும் அனுசரித்து எப்படி வேண்டுமென்றாலும் அமர்ந்துகொண்டுதியானம் பண்ணலாம். தியானத்தை ஆழ்ந்து நன்றாகப் பண்ணுவது நம்முடைய குறிக்கோள். எந்தத் திக்கைப் பார்த்துச் சரீரத்தை அமைத்து வைத்திருக்கிறோம் என்பது நமக்குக் குறிக்கோள் ஆகாது.

ஆயினும் நமக்கு ஐதிகம் ஒன்று உண்டு. கிழக்குத் திக்கைப் பார்த்துக்கொண்டு அதிகாலையில் தியானத்திற்கு அமர்கின்றோம். தியானம் முடிந்து கண்விழித்துப் பார்க்கின்றபொழுது சூரியன் உதயமாகி ஸ்தூலமாகக் காட்சிகொடுத்துக்கொண்டு அவன் திகழ்கிறான். இந்தக் காட்சியை முன்னிட்டே தியானம் பண்ணுகிறவர்களெல்லாம் கிழக்கு முகமாக அமர்ந்துகொண்டு அந்த அரிய பெரிய செயலில் கருத்தைச் செலுத்தினர். நாளடைவில் அது ஐதிகமாயிற்று. இந்த ஐதிகத்திற்கு உட்பட்டு நடப்பதில் சிரமம் ஏதுமில்லை. வடக்கு முகமாக உட்காருவதைப்பற்றிய கோட்பாடு மற்றொன்று உண்டு. சூரிய பகவான் கிழக்கில் உதித்து மேற்கை நோக்கிப் போவதற்கு நிகராகப் பூமியின் அமைப்பில் காந்த சக்தி வடதுருவத்தினின்று தென் துருவத்தை நோக்கி சர்வகாலமும் பாய்ந்துகொண்டிருக்கிறது. அதன் போக்கு அப்படியிருப்பதால் அது உற்பத்தியாகிற இடமாகிய வடதுருவத்தை நோக்கி அமரவேண்டும் என்னும் ஐதிகம் வந்துள்ளது.

சுவாமி துரியானந்தர் ஜீவிதம்

(224 ஆம் பக்கத் தொடர்ச்சி)

1917 ஆம் ஆண்டு சுவாமி துரியானந்தர் கல்கத்தா வந்து பேலூர் மடத்தில் தங்கினர். அப்பொழுது ராமகிருஷ்ணருடைய நேர் சிஷ்யர்கள் சிலர் அங்கு இருந்தார்கள். பட்டப் படிப்புப் படித்துக் கொண்டிருந்த மாணக்கர்கள் சிலர் பேலூர் மடத்துக்கு வந்தனர். அவர்கள் துரியானந்த சுவாமிகளைச் சந்தித்து அறவுரை வழங்கும்படி கேட்டார்கள். மாணக்கர்களில் ஒருவர் "எங்களுடைய எதிர்கால வாழ்க்கையை உருவாக்குவதற்கு நீங்கள் வழிகாட்டித் தரவேண்டும். எங்களிடத்தில் பொருந்தாத சம்ஸ்காரங்கள் ஏராளமாக இருக்கின்றன. நல்ல சம்ஸ்காரங்கள் மிகக் குறைவாக இருக்கின்றன. நாங்கள் என்ன செய்யவேண்டும்?" என்றுகேட்டார். அதற்குச் சுவாமிகள் அளித்த பதிலாவது: "நீ சொல்வது மிகவும் சரி. உங்களிடத்தில் பொருந்தாத சம்ஸ்காரங்கள் இருக்கின்றன என்பதை நீங்கள் அறிந்திருப்பது நல்லது. அவற்றைப்பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை. அவைகளைத் திருத்தியமைப்பதற்கு இப்பொழுதிருந்தே முயலுங்கள். செய்ததைக் குறித்து வருந்திக் கொண்டிருப்பதில் பயனில்லை. போனது போகட்டும். சென்றதைக் குறித்து நினைத்துப் பார்க்காமல் புதியதாக நல்ல சம்ஸ்காரங்களை உண்டு பண்ணுங்கள். சில நாட்களில் பழைய பொருந்தாத சம்ஸ்காரங்களுக்குப் பதிலாகப் புதிய சம்ஸ்காரங்கள் இடம் பெறுவதைக் காண்பீர்கள். நல்ல சம்ஸ்காரங்களைப் பெறுவதற்கு இப்பொழுதிருந்தே முயலுங்கள். B. A., M. A., பட்டங்கள் பெறுவதற்குக் கஷ்டப்பட்டு உழைக்கிறீர்கள். அந்த அளவாவது நீங்கள் சாதனை செய்ய முயலவேண்டும். சாதனை செய்யாது பலன் உங்களுக்கு எப்படிக் கிட்டும்? விடாமுயற்சியின் மூலமாகவும் கடினமான உழைப்பின் மூலமாகவும் ஆத்மீக வாழ்க்கையில் நீங்கள் வெற்றி காணலாம். உங்களைப் பரிபூரணர்களாக்குவதற்கு நல்ல வாழ்க்கைப் பயிற்சி அவசியமாகிறது. ஒரு கணமும் வீணாக்காது நல்ல சம்ஸ்காரங்களைப் பெறுவதற்குத் தீவிரமாக முயலுங்கள். இளமை உங்களை விட்டுப் போய்க் கொண்டிருக்கிறது. போன இளமை திரும்பி வராது. இளமையை வீணாக்காது சாதனத்தில் தீவிரமாக ஈடுபட்டால் சில நாட்களுக்குள் உங்களிடத்தில் மாறுதல்உண்டாவதைக் காணலாம். பகவான் நாமத்தைச் சொல்லி நான் வெற்றி காண்பேன்; அல்லது அம்முயற்சியில் நான் உயிரையே விடுவேன் என்று உறுதியாகத் தீர்மானம் செய்யுங்கள். சுவாமி விவேகானந்தர் வாழ்ந்திருந்து உங்களைப் போன்ற இளைஞர்களைப் பார்ப்பாராஞல் மிக்க மகிழ்ச்சியடைவார். உங்களைப் போன்ற இளைஞர்களிடத்தில் அன்பு மிகச் செலுத்துவார். மேலும் தாமதம் செய்யாமல் நல்ல செயலில் உங்களை ஈடுபடுத்துங்கள். இன்னும் சுவாமி சிவானந்தர் போன்ற பெரியவர்களுடைய ஆசிர்வாதங்களைப் பெற்றுள்ளீர்கள். ஆகையால் நீங்கள் எதற்கும் பயப்படவேண்டியதில்லை. சாதனைதான் நீங்கள் செய்யவேண்டும். முன்னேக்கிச் செல்லுங்கள்." சுவாமிகளுடைய இத்தகைய அறிவுரையைக் கேட்ட இளைஞர்களுள் இருவர் ராமகிருஷ்ணருடைய சங்கத்தில் பின்னர் சேர்ந்துவிட்டார்கள்.

சுவாமி துரியானந்தர் *1917* ஆம் ஆண்டிலிருந்து *1918* ஆம் ஆண்டு வரை கல்கத்தாவில் உத்போதனில் வாழ்ந்து வந்தார். அங்கு ஸ்ரீ சாரதாதேவியாரும் தங்கி இருந்தார்கள். பேலூர் மடத்துக்குத் திரும்புவதற்கு முன்பு சாரதாதேவியாரிடம் சென்று அவர் முன் வீழ்ந்து வணங்கினர். "தாயே, உங்களுடைய ஆசீர்வாதத்தால் என் உடல் நலம் அடைந்தது. தங்களுடைய ஆசீர்வாதம் இல்லாதிருந்தால் இந்த உடல் வீழ்ந்திருக்கும்" என்று கூறினர்.

காசி மிகவும் புண்ணிய ஸ்தலமாகக் கருதப்படுகிறது. சுவாமி துரியானந்தர் காசியினிடத்துப் பெருமதிப்பு வைத்திருந்தார். சந்தர்ப்பம் வாய்க்கும்பொழுதெல்லாம் அவர் காசிக்குச் செல்லுவார். காசியில் ராமகிருஷ்ண மிஷின் சேவாஸ்ரமம் இருந்தது. அங்குத் தர்ம வைத்தியசாலை இருந்தது. ஏழைகளும், நோயுள்ளவர்களும் அதை நன்கு பயன்படுத்தி

ளர். ராமகிருஷண சங்கத்தைச் சார்ந்த சுவாமிகளும், இளைஞர்களும் அதில்பணிவிடை செய்து வந்தார்கள். அவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்தவர்களுக்குப் பணிவிடை பண்ணுவதிலேயே காலம் முழுவதும் கழித்தனர். எப்பொழுதெல்லாம் அவர்களுக்கு ஓய்வு கிடைத்ததோ அப்பொழுதெல்லாம் அவர்கள் சுவாமி துரியானந்தரிடம் சென்று அறவுரை கேட்டார்கள். அங்கிருந்த துறவிகளுடைய ஆத்மீகவாழ்வைச் சுவாமி துரியானந்தருடைய சாந்நித்தியம் மேலோங்கச் செய்தது. சுவாமி துரியானந்தருடைய அறையில் வேதாந்த தத்துவத்தைப் பற்றிய சம்வாதமும், பக்திப் பாடல்களை உருகிப் பாடுவதும் நாள் முழுவதும் நிகழ்ந்து கொண்டேயிருந்தன. அங்குள்ள ஒவ்வொருவரும் துரியானந்த சுவாமிகளிடம் பெருமதிப்பு வைத்திருந்தனர். அவரைச் சிறந்த தபஸ்வி என்று எல்லாரும் கருதினர். அவர் முன்னிலையில் சாஷ்டாங்க நமஸ்காரம் பண்ணுவதைப் பாக்கியமாகஅவர்கள்கருதினர். சுவாமி துரியானந்தர் தம்முடைய சாதனையைப்பற்றி ஆர்வமுள்ள சாதகர்களிடம் பகர்ந்ததாவது: "நான்ஒருதடவை தூக்கத்தை வெல்ல விரும்பினேன். தூங்குகின்ற நேரத்தையும் கடவுள் சிந்தனையில் கழிக்கவேண்டுமென்றுவிரும்பினேன். முதலில் பகல் நேரத்தில் சிறிது கண்ணயர்வதை விட்டொழித்தேன்.

சிறிது சிறிதாக இரவில் தூங்குவதையும் குறைத்தேன். அதிகம் தூங்குவது என் இயல்பு அன்று. ஒரு நாளைக்கு ஒன்றரை மணி நேரம் தூங்குவது எனக்குத் தேவையாக இருந்தது. சில நாட்களுக்குப் பிறகு அதுவும் தேவையில்லை என்பதை அறிந்தேன். கடவுள் சிந்தனையில் மனம் நிலைத்து நின்றதால் தூக்கம் எனக்குத் தேவையில்லாதிருந்தது. நீண்ட நேரம் இடைவெளியில்லாது தியானத்தில் அமர்ந்திருப்பது எனக்குச் சாத்தியமாயிற்று. தியானத்தின்மூலமாக என் மனதுக்கும்உடலுக்கும் நல்ல ஓய்வுகிடைத்தது. எவ்விதச் சிரமமும் இல்லாது மனம் தியானத்தில் ஆழ்ந்தது. தைல தாரைபோன்று இடையீடில்லாது என் மனம் தானாகத் தெய்வச் சிந்தனையில் ஓடிக்கொண்டிருந்தது. அதிகாலை நேரத்தில் படுக்கவேண்டுமென்ற எண்ணம் எனக்கு உண்டானதில்லை. ஒருவாரகாலம் இரவு பகல் முழுவதும் தூங்காமல் இருந்தேன். தியான உணர்விலேயே என்மனம் நிரம்பியிருந்தது. தூங்காமலிருப்பது சரீர ஆரோக்கியத்தைப் பாதிக்கும் என்பதை உணர்ந்தேன். தூக்கமின்மை ஒரு நோய் ஆகும் என்பதையும் நான் சிந்தித்துப் பார்த்து அறிந்தேன். ஆகையால் தூக்கத்தை அறவே புறக்கணிப்பது அறிவுடைமை ஆகாது என்பதை உணர்ந்தேன். ஆகையினால் உடல் ஆரோக்கியத்தை முன்னிட்டு இரவு நேரத்தில் இரண்டு மணிநேரம் தூங்குவதற்கு முயன்றேன். இரண்டு, மூன்று நாட்கள் முயன்ற பிறகுதான் சிறிது தூங்க முடிந்தது. பிறகு தொடர்ந்து முயன்றதன் விளைவாகத் தூங்குகின்ற பழக்கத்தைச் சிறிது உண்டாக்கிக் கொண்டேன். நாங்கள் செய்த கடும் தவத்தைப் பற்றி இளைஞர்களாகிய நீங்கள் அறிய மாட்டீர்கள். நாங்கள் எத்தகைய கடுமையான சாதனைசெய்தோம் என்பது உங்களுக்குத் தெரியாது. புற அடையாளங்களைக்கொண்டு ஒருவனுடைய புனிதத்தன்மையைக் கண்டு பிடித்துவிட முடியாது. யாருடைய மனம் உலக சுகத்திலிருந்து விலகி இருக்கின்றதோ அவரே புனிதவான் ஆகின்றார். என்னுடைய மனம் உலக விஷயத்திற்குக் கீழிறங்கி வர விரும்புவதில்லை. உயர்ந்த விஷயங்களைக் கேட்பதிலும் பேசுவதிலும் எனக்கு விருப்பம் உண்டாகிறது. நல்லறிவும், பக்தியுமுள்ள அன்பரொருவர் என்னைப் பார்க்க வந்தால், நான் அவரிடம் கடவுள் விஷயங்களைப் பற்றிப் பேசுவதில் மகிழ்ச்சியடைவேன். மணிக்கணக்காக அவரிடம் கடவுள் விஷயங்களைப்பற்றிப் பேசிக் கொண்டேயிருப்பேன். அனைத்தையும் மறந்து விட்டுப் பேச்சிலேயே என் மனம் ஈடுபட்டிருக்கும்.

மனம் முழுவதும் கடவுளிடத்திலேயே மூழ்கிக்கிடப்பதுதான் வாழ்க்கையின் முடிந்த லட்சியமாகும். கடவுள் காட்சி பெறாத மானிட வாழ்வு வீணாக்கப்பட்ட வாழ்வு ஆகிறது. ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய அருளால் அவர்களுடைய சிஷ்யர்களாகிய எங்கள் மனது கடவுள் பால் சென்று கொண்டேயிருந்தது. கடவுளைத்தவிர அது வேறு விஷயங்களில் செல்வதில்லை. சுவாமி விவேகானந்தருடன் நான்

இருந்தபொழுது அவரைப்பற்றியே மனது நினைந்துகொண்டிருக்கும். அவர்பேசும்பொழுது என் முழுக்கவனமும் அவருடைய ஒவ்வொரு வார்த்தையிலும் குவிக்கப்பட்டிருக்கும். சுவாமி விவேகானந்தர் ஆச்சரியமான மனிதராவார். அவர் முன் கூட்டியே அறியும் சக்தி வாய்ந்தவர். அவருடைய சிந்தனையும், சொல்லும் ஒருவரை மிக உயர்ந்த நிலைக்கு எடுத்துச் சென்றுவிடும். அவருடன் இருக்கும்பொழுது பேரானந்தம் உண்டாகும். அவ்வானந்தத்தை வேறு யார் முன்னிலையிலும் நான் அனுபவித்ததில்லை. சுவாமி விவேகானந்தரிடம் இருந்தபொழுது ஏற்பட்ட அனுபவத்தைச் சொல்லால் விளக்க முடியாது. அவருடைய வாயிலிருந்து வரும் வாக்குகளையெல்லாம் தெய்வீக வாக்குகளாகக் கருதினோம். எங்களையும் அவரையும் பேரன்பு பிணைத்துவைத்திருந்தது. அவரை விட்டுப் பிரிந்திருப்பது எங்களுக்குப் பெரிய வேதனையாக இருந்தது. அவர் உலகத்தை விட்டு மறைந்தார் என்பதைக் கேட்டதும் நான் பெரிய அதிர்ச்சியடைந்தேன். அவர் என்னிடம் பகர்ந்திருந்தாவது: “நான் எது செய்தாலும் அது குருநாதர் ஸ்ரீ ராமகிருஷ்ணர், ஸ்ரீ சாரதாதேவியாருடைய செயலாகும். என் மூலம் ஸ்ரீ ராமகிருஷ்ணர் அச்செயலைச் செய்து முடிக்கின்றார். அவர் விரும்பியது நிறைவேறிக்கொண்டிருக்கிறது. என்னைக் கருவியாகக்கொண்டு அவருடைய செயலை முடித்துக்கொள்கின்றார். அவர் விரும்பாவிட்டால் நான் எதையும் செய்ய முடியாது. என்ன காரியம் இப்பொழுது நடந்தேறியிருக்கிறதோ அதைப்பற்றி நான்மகிழ்ச்சியடைகின்றேன். எல்லாவற்றையும் உதறிவிட்டு நான் மகிழ்ச்சியோடிருக்கவும் முடியும். நீங்கள் எதைச் செய்கின்றீர்களோ அதுவும் அவருடைய செயலாகும். அவருடைய செயல் தொடர்ந்து நிகழட்டும்.'' இங்ஙனம் சுவாமி விவேகானந்தர் பகர்ந்துள்ளார்.

சுவாமி துரியானந்தர் சிறந்த சாதகராவார். அவர் சிறந்த அனுபூதிமானுமாவார். அவர் எங்கிருந்தாலும் அவரைச் சுற்றிலும் அருள் சூழ்ந்திருக்கும். அவர் தியானத்திலிருக்கும் பொழுது அவருக்கு அருகாமையிலுள்ளவர்கள் உள்ளமும் உயர்ந்த நிலைக்குச் செல்லும். அவர் காசியில் தங்கியிருந்த பொழுது கோடைகாலத்தில் காலை 4 மணிக்கு எழுந்து தியானத்தில் அமர்ந்துவிடுவார். குளிர் காலமாக இருந்தால் காலை 5 மணிக்கு எழுந்து தியானத்தில் அமர்வார். அவர் தியானத்திலிருக்கும் பொழுது மடத்திலிருப்பவர்கள் அவருடைய அறைக்குச் சென்று அவரை வீழ்ந்து வணங்கிவிட்டு வருவார்கள். சுவாமிகளைச் சுற்றியுள்ள அருள்வட்டம், அங்குச் செல்பவர்களுடைய உள்ளத்தை உயர்ந்த நிலைக்கு இழுத்துச் செல்வதை உணர்ந்தார்கள். அவருக்குப் பணிவிடை பண்ணிக் கொண்டிருந்தவர்களின் உள்ளமும் தெய்வச் சிந்தனையிலேயே மூழ்கிக்கிடந்தது. மாலைவேளைகளிலும் முறையாகச் சுவாமி துரியானந்தர் தியானம் செய்வார். மடத்திலுள்ள அனைவரும் தியானம் செய்யவேண்டுமென்பது அவருடைய விருப்பம். தியானம் செய்யாது இருக்கின்ற சாதுவைப் பார்த்தால் அவரைக் கடிந்துகொள்வார். கோடைகாலத்தில் காசியில் வெப்பம் அதிகமாக இருக்கும். ஆகையால் கோடைகாலத்தில் ஸ்நானம் செய்தபின் உடம்பில் சந்தனத்தைப் பூசிக்கொண்டு சுவாமிகள் தியானத்தில் அமர்வார். அவருடைய செயல்களெல்லாம் முறைப்படி நிகழ்ந்து கொண்டிருக்கும். குறித்த காலத்தில் குறித்த செயல்களை முடிப்பார். உடல் அசௌகரியம் ஏற்பட்டாலும் தினசரி வாழ்க்கைமுறைத் திட்டத்தை விடாது செய்வார். வாசிப்பில் உட்கார்ந்துவிட்டால் முழு மனதையும் அதில் செலுத்துவார். சில சமயம் நேரம் போவதை மறந்துவிட்டு வாசிப்பிலேயே மூழ்கியிருப்பார். அவர் வாசித்த பகுதிகளை ஓய்வு நேரங்களில் மற்றவர்களுக்குச் சொல்லுவார். அதைக் கேட்டு மற்றவர்கள் மிகுந்த பயனடைவார்கள். பொருள்களை அவைகளுக்கு உரிய இடத்தில் தான் வைப்பார்.

சுவாமி துரியானந்தர் சிறு விஷயங்களிலும் கவனம் மிகச் செலுத்தி வந்தார். ஒரு சமயம் இளம் சந்நியாசி ஒருவரை அழைத்துக் கடிதம் ஒன்றை அவரிடம் தந்து தபாலில் சேர்க்கச் சொன்னார். அவர் கடிதத்தை வாங்கிக்கொண்டு அதில் ஸ்டாம்பு ஒட்டப்பட்டுள்ளதா என்பதைச் சரியாகக் கவனியாது எடுத்துச் சென்றார். தபால்பெட்டியில் போடப் போகும் பொழுது கவரில் ஸ்டாம்பு இல்லாததைக்

கவனித்தார்.மறுபடியும் அவர் ஆச்ரமத்திற்குத் திரும்பி வந்து வேறு ஸ்டாம்பு வாங்கிக் கவரில் ஒட்டிப் போட்டார். சுவாமி துரியானந்தர் இதை அறிந்ததும், ''சிறு விஷயமாக இருந்தாலும் அதில் கவனம் மிகச் செலுத்தவேண்டும். சிறு விஷயத்தில் கவனம் செலுத்தாத நீங்கள் பிரம்மதத்துவத்தில் எப்படி மனதைச் செலுத்த முடியும்? பிரம்மநாட்டம் உடையவர்களும் சிறு விஷயங்களில் கவனமாக இருந்தார்கள் என்பதை மறந்துவிடாதீர்கள்," என்று அவ் இளம் சந்நியாசிக்கு அறவுரை பகர்ந்தார்.

ஒரு சமயம் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடமிருந்த பொழுது நிகழ்ந்ததைச் சுவாமி ஆனந்தானந்தாவுக்கு ஸ்ரீ துரியானந்த சுவாமி பகர்ந்ததாவது: "தட்சிணேசுவர ஆலயத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் நான் தங்கியிருந்தேன். ஒருநாள் அவர் என்னிடம் பஞ்சவடிக்குப் போகும்படி சொன்னார். சில பக்தர்கள் உல்லாசமாக இருந்துவிட்டு வரப் பஞ்சவடிக்குச்சென்றார்கள். அவர்கள் விட்டு வந்த சாமான்கள் ஏதாவது அங்கிருந்தால் என்னை எடுத்து வரும்படி அனுப்பினார். நான் அங்குச் சென்று பார்த்த பொழுது ஓரிடத்தில் குடை ஒன்றும், மற்றோரிடத்தில் பேனாக்கத்தியும், மற்ற பொருட்களும் இருந்தன. நான் அவைகளை யெல்லாம் பொறுக்கி எடுத்துக்கொண்டு ராமகிருஷ்ணரிடம் வந்தேன். நான் கொண்டு வந்த கத்தி ராமகிருஷ்ணரிடமிருந்து அவர்கள் வாங்கிச் சென்றதாகும். எனவே அக்கத்தியை அவர் அறையிலுள்ள அலமாரியில் நான் வைத்தேன். ராமகிருஷ்ணர் உடனே அக்கத்தியை அங்கே வைக்கவேண்டாம் என்றார். அவ்வறையில் சிறிய படுக்கை ஒன்றிருந்தது. அப்படுக்கைக் கடியில் அக்கத்தி வைக்கப்படவேண்டும். நான் அதை வேறு இடத்தில் வைத்ததால், அதை வைக்கவேண்டாமென்று தடுத்து, அது இருக்க வேண்டிய இடமாகிய படுக்கைக்கடியில் வைக்கும்படி கூறினார். ஒவ்வொரு பொருளையும் அதற்குரிய இடத்தில் வைக்க வேண்டும் என்று அறிவுரை கூறினார். இரவில் அக்கத்தி எனக்குத் தேவைப்பட்டால் நான் அதை எங்கே தேடுவது? நீ கத்தியை வேறு இடத்தில் வைத்துவிட்டால் இருட்டில்அதை எடுப்பதற்கு நான் தேடி அலையவேண்டியிருக்கும். அப்படிச் செய்வது சேவையாகுமா? உன்னுடைய இஷ்டம்போல் அப்பொருளை வைக்கும்பொழுது மற்றவர்களுக்கு நீ தொந்தரவு கொடுத்தவன் ஆகின்றாய். மற்றவர்களுக்குச் சேவை செய்ய விரும்பினால் உன்னைப்பற்றிய எண்ணத்தை நீ அறவே மறந்துவிடு.'' இங்ஙனம் ஸ்ரீ ராமகிருஷ்ணர் தக்க சமயத்தில் வேண்டியதைக் கூறி எங்களைத் திருத்தியமைப்பார்.

சில சமயம் துரியானந்த சுவாமிகள் வேடிக்கை விநோதமாக நடந்துகொள்வார். ஆனால் மிக விரைவில் அவர் உள்ளம் அதிலிருந்து விலகி கடவுளிடம் ஓடிவிடும். காந்த ஊசியின் முள் வடதிசையையே நோக்கி இருப்பது போன்று, அவருடைய உள்ளம் கடவுளை நோக்கிச் சென்றுகொண்டிருக்கும். காந்த ஊசியின் முனையினைப் பிடித்து வேறு திசையில் திருப்பினால் நாம் விட்டவுடன் அது வடக்குத் திசைக்கே மீண்டும் திரும்பிக்கொள்ளும். அங்ஙனம் சுவாமி துரியானந்தருடைய மனதை யாராவது வேறு விஷயங்களில் திருப்ப முயல்வார்களானால் விரைவில் மறுபடியும் அது கடவுளிடம் ஓடிவிடும். காந்தியினுடைய சுதந்திர இயக்கத்தை அவர் முற்றும் வரவேற்றார். காந்தியினுடைய சொற்பொழிவை ஒருமுறை கேட்டிருக்கிறார். காந்தியினுடைய மன ஒரு முகப்பாட்டைப்பற்றித் துரியானந்த சுவாமிகள் சிலாகித்துப் பேசுவார். சுயநலத்தியாகமும், ஊக்கமும் வடிவெடுத்த தியாகிகளினால் இந்தியா சுதந்திரம் அடையும் என்பதைச் சுவாமி துரியானந்தர் குறிப்பிடுவார். நீங்கள் எல்லாரும் சுதந்திர இந்தியாவைப் பார்ப்பீர்கள்; ஆனால் நான் சுதந்திர இந்தியாவைக் காண மாட்டேன் என்று அவர் பகர்வார். அவர் கூறியது போன்றே நிகழ்ந்தது. சுவாமி துரியானந்தர் சிறந்த சாதகராவார். அவரிடமிருந்தவர்கள் அவரைப் பார்த்துத் தாங்களும் சாதனை செய்ய வேண்டுமென்ற தீவிரநாட்டமுடையவர்களானார்கள். சுவாமி விவேகானந்தர் முதல் முறை மேனாட்டிலிருந்து திரும்பும்பொழுது அடுத்த முறை வரும்பொழுது சிறந்த சாதகரை அழைத்து வருவேன் என்று மேனாட்டவருக்குக் கூறினார். அப்படிக் கூறியபொழுது சுவாமி துரியானந்தரை மனதில் வைத்திருந்ததாகப் பின்னர் கூறியுள்ளார். (தொடரும்)

சங்க இலக்கியங்களில் சமயக் கருத்துக்கள்

(வித்துவான் ஆதி. பாலசுந்தரன் M. A.)

நாளிலும் கோளிலும் நம்பிக்கை வைத்தல்:

பிறந்தநாள் அன்று என்ன நட்சத்திரம் எனப் பார்த்து, பிறந்த நேரம், நாழிகை, நட்சத்திரம் இவற்றை அறிந்து கணித்துப் பார்த்துப் பலன்களை அறிந்துகொள்ளும் பழக்கம் நம்மிடத்தில் உண்டு. சமயத்தின் மீதும், இறைவன் மீதும் நம்பிக்கைகொண்ட சிலரிடையே இப்பழக்கம் இருந்து வருகிறது.

இப்பொழுது கம்ப்யூட்டரிலும் ஜாதகம் கணிக்கிறார்கள்.

நாளும் கோளும் பார்த்துப் பலன் அறிதல் சமய நம்பிக்கையை ஒட்டிய பழக்கமாக இருந்து வருகிறது.

சங்க இலக்கியங்களில் நட்சத்திரங்கள், கோள்கள் இருக்கும் நிலையை அறிந்து பலன் கூறி வந்தார்கள். அவர்கள் கூறிய பலன்கள் சரியாக அமைந்திருந்தன.

"நின்று நிலைஇயர் நின்நாள்மீன் நில்லாது
படாஅச் செலியர் நின் பகைவர் மீனே"

—[புறநானூறு-24] நீ பிறந்த நட்சத்திரம் அழியாமல் நின்று நிலைபெறுக. உன் பகைவர்களின் நட்சத்திரம் நில்லாது அழிவதாகுக எனப் பாண்டியன் நெடுஞ்செழியனை மாங்குடி மருதனார் என்ற புலவர் பாடுகின்றார்.

"வசையில் புகழ்வயங்குவெண்மீன்
திசைதிரிந்து தெற்கு ஏகினும்"

—[பட்டினப்பாலை] புகழ்பெற்ற, வடக்கே இருக்கவேண்டிய வெள்ளி நட்சத்திரம் தெற்குத் திசை நோக்கிப் போனால், உலகத்தில் பஞ்சம் உண்டாகும் எனப் பட்டினப்பாலை என்னும் சங்கநூல் கூறுகிறது.

"வெள்ளி தென்புலத்து உறைய விளைவயல்
பள்ளம் வாடிய பயன்இல் காலை"

— வடக்குத் திசையில் இருக்கவேண்டிய நட்சத்திரம் தெற்குத் திசையில் வந்து தங்குவதால் வயல்கள் எல்லாம் வற்றி வறண்டுபோய்க் கிடக்கின்றன எனப் புறநானூறு [388] கூறுகிறது.

"மைம்மீன் புகையினும் தூமம் தோன்றினும்
தென்திசை மருங்கின் வெள்ளி ஓடினும்"

— சனிக்கோள் புகைந்தாலும், வானத்தில் தூமகேது தோன்றினாலும், வடக்குத் திசை இருந்து தெற்குத் திசைநோக்கிவெள்ளி நட்சத்திரம் போனாலும் பாரியின் பறம்பு நாட்டில் செழிப்பு குறையாது எனப் புறநானூறு குறிப்பிடுகிறது.

சனிக்கோள் புகைவது, தூமகேது தோன்றுவது, தென்திசை நோக்கி வெள்ளி நட்சத்திரம் செல்லுவது ஆகியவை உற்பாதத்தின் அடையாளங்கள் ஆகும் என்ற நம்பிக்கை இருந்து வந்தது.

சனிக்கோள் புகைதல் என்பது ரிஷபராசி, சிம்மராசி, மீனராசி ஆகிய ராசிகளுக்கு எதிராகச் செல்லுதல் ஆகும்.

"பங்குனிமாதம் பதினைந்தாம் நாள்; அன்று கார்த்திகை நட்சத்திரம். நள்ளிரவில், உத்தர நட்சத்திரம் வானத்தின் உச்சியில் இருந்து சாயவும், மூல நட்சத்திரம் எழுந்து வானத்தின் உச்சிக்கு வந்தது. மிருகசீர்ஷ நட்சத்திரம் மறைந்தது. அச்சமயத்தில் ஒரு நட்சத்திரம் வடக்கும் கிழக்கும் போகாமல் தீப்பிடித்துக் கீழே விழுந்துவிட்டது."

இந்த நிகழ்ச்சியைக் கூடலூர் கிழார் என்னும் புலவர் பார்த்தார். அன்றிலிருந்து ஏழாம் நாளில் அந்நாட்டை (சேர நாடு) ஆளும் யானைக்கண் சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை என்னும் அரசன் இறப்பான் என நினைத்தார்.

அவர் எண்ணியவாறே அரசனும் ஏழாம் நாளில் இறந்துவிட்டான்.

— இச்செய்தியைப் புறநானூறு [229] கூறுகிறது.

வழங்குதலும் ஏற்றுக்கொள்ளுதலும்:

ஒருவனுக்கு நிறைய செல்வம் இருக்குமானால், அது அவனுக்கு வாய்த்த நல்ல ஊழ்வினை. செல்வம் இல்லாமல் போனால் அது அவனுக்கு ஏற்பட்ட தீய ஊழ்வினை என்று நாம் எண்ணுகிறோம். அவ்வாறு ஏன் எண்ணுகிறோம்? ஊழ்வினை என்ற தலைவிதி மீது நம்பிக்கை கொண்டிருக்கிறோம். அதனால்தான் அப்படிக் கூறுகிறோம்.

இப்படி நம்பிக்கொண்டு, செல்வந்தர்களுக்கு

ஒரு கட்டளை இடுகிறோம். செல்வம் உடைய வர்கள் ஏழை எளிய மக்களுக்குப் பொருள் கொடுத்து உதவி செய்யவேண்டும். இதுதான் செல்வம் பெற்றதன் பயன் எனக் கூறுகிறோம்.

செல்வம் உடையவர்கள் ஏழை மக்களுக்குப் பொருள் கொடுப்பதும், ஏழை மக்கள் பணக் காரர்களிடம் இருந்து பொருளைப் பெற்று வாழ்க்கை நடத்துவதும் சமுதாயத்தின் நடை முறைச் சம்பிரதாயங்களாக ஆயின.

செல்வம் உடையவர்களுக்குச் செல்வம் எப் படி வந்தது என ஏழை மக்கள் சிந்தித்துப் பார்த்தது இல்லை. ஏழை மக்களுக்கு வறுமை ஏன் வந்தது எனச் செல்வம் உடையவர்கள் நினைத்துப் பார்த்தது இல்லை.

ஊழ்வினை மீது அதிகமான நம்பிக்கைகொண் டிருந்ததால் இத்தகைய சிந்தனை அவர்களுக்கு ஏற்படவில்லை.

"பிறக்கும்போது எதுவும் கொண்டு வந்தது இல்லை; பிறந்து இறக்கும்போது எதுவும் கொண்டு போவது இல்லை" எனப் பட்டினத்து அடிகள் கூறியது போல, பிறக்கும் போதே யாரும் பணத்துடனே,வீடு வாசல் மனையுடனே, நிலபுலன்களுடனே பிறக்கவில்லை; இவன் ஏழை என்று கடவுள் எழுதி அனுப்பவும் இல்லை என்ற பொதுவுடைமைத் தத்துவம் அவர்கள் மனத்தில் ஏற்படவும் இல்லை.

அதற்கு மாறாக, இருப்பவர்கள் கொடுக்க வேண்டும்; இல்லாதவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்; இது திரும்பத் திரும்ப நடைபெற வேண்டும்; அப்படியானால்தான் இந்த உலக வாழ்க்கை உயிர் வாழ்க்கையாக—சுறுசுறுப்பு உடையதாக—நடைபெறும் என்று கருதினர் கள்.

"இரப்பாரை இல்லாயின் ஈர்ங்கண்மா ஞாலம்
மரப்பாவை சென்றுவந் தற்று"

—யாசிப்பவர்கள் இல்லாது இந்த உலகம் சரி யாக அமையாது. இரப்பவர்களாகிய யாசிப் பவர்கள் இருந்தால்தான், கொடுப்பவர்கள் மகிழ்வோடு கொடுப்பார்கள். வாழ்க்கை உயிர்ப்பு உடையதாக இயங்கும். யாசிப்பவர் களும், வழங்குபவர்களும் இல்லாத இந்த உல கம் மக்கள் இல்லாத, உயிர் அற்ற மரப்பொம் மைகள் சஞ்சாரம் செய்யக்கூடிய உலகம் ஆகும் என்கிறார் வள்ளுவர்.

இத்துடன் விட்டுவிடவில்லை வள்ளுவர்.

"ஈவாரும் கொள்வாரும் இல்லாத வானத்து
வாழ்வாரே வன்க ணவர்"

—கொடை வழங்குபவர்களும், அவர்களிடத் தில் யாசிப்பவர்களும் ஆகிய இரு சாரார்களும் இல்லாத தேவலோகத்தில் வாழ்பவர்கள் கொடுமை மிக்கவர்கள். ஏனென்றால் இந்த இரண்டு பண்புகளும் உடையவர்கள் அந்த உலகத்தில் இல்லையே!—என மேலும் கூறு கிறார் வள்ளுவர்.

வள்ளுவரும் தலைவிதி என்ற ஊழ்வினையின் மீது நம்பிக்கைகொண்டு இவ்வாறு கூறுகிறார் என்பது புலனாகிறது.

மரபின் வழிவந்த கருத்துக்கள்: வழிபாட்டுமுறை:

குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த மக்கள் குறவர் கள் எனப்பட்டார்கள். குறவர்கள் முருகனை வணங்கினார்கள். குறவன் தன் உறவினரோடு முருகனை வணங்குவான். குறப்பெண் வேங்கை மலர்களைத் தூவி இறைவனை வழிபடுவாள். மழை பெய்ய வேண்டும் என விரும்பியும், மகப் பேறு விரும்பியும் இறைவனை வழிபடும் பழக்க மும் இருந்தது.

இவ்வாறு வழிபடும் முறை இக்காலம்வரை யிலும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

உண்ணும் நீர் வழங்கக்கூடிய குளத்தங்கரை, ஆற்றங்கரைகளில் தெய்வம் வீற்றிருக்கும் எனச் சங்ககால மக்கள் நம்பினார்கள். ஏதா வது தவறு செய்தால், அத்தெய்வம் தண்டிக் கும் எனவும் கருதினார்கள்.

இன்றும் கிராமத்து ஆற்றங்கரை, குளத்தங் கரைகளில் அரசமரமும் சிறு தெய்வங்களும், பிள்ளையாரும் இருப்பதைப் பார்க்கலாம்.

மார்கழி மாதம் அதிகாலையில் எழுந்து, குளிர்ந்த நீரில் நீராடி இறைவனை வழிபட்டு நோன்பு நோற்கும் பழக்கமும் இருந்து வந்தது. இதனை மார்கழி நீராட்டு, தை நீராட்டு எனவும் குறிப்பிட்டனர். தெய்வ வழிபாட்டில் பலவித இசைக் கருவிகளையும் பயன்படுத்தி வந்தனர்.

மலைப் பகுதிகளில் சூலம் ஏந்திய பெண் தெய்வம் உறைவதாக நம்பினர். அத்தெய் வத்தை 'சூலி' எனக் கூறி வணங்கினார்கள். குறப்பெண்கள் கோவிலுக்குச் சென்று தெய் வங்களுக்கு நேர்த்திக்கடன் செய்தனர். இடைப் பெண் கோவிலுக்குப் பால்கொண்டு

சென்று வழிபடுவாள். மக்கள் கோவில் பிரகாரம் சுற்றி வந்து வழிபாடு செய்வார்கள். தங்கள் பிள்ளைகளையும் வலம் வந்து வழிபடச் சொல்லுவார்கள்.

விழாக்கள் நடத்தி இறைவனை வழிபடக் கூடியவழக்கம் சங்ககாலத்தில் இருந்துவந்தது.

திருவண்ணுமலையில் திருக்கார்த்திகைஅன்று தீபஜோதி ஏற்றப்படுவது போல், சங்ககாலத்தில், சேரநாட்டு மலை உச்சியில் தீபஜோதி ஏற்றப்பட்டதாகப் பாலை பாடிய பெருங்கடுங்கோ என்னும் சேர மன்னராகிய புலவர் அகநானூறு என்னும் சங்க இலக்கிய நூலில் குறிப்பிடுகின்ருர். கார்த்திகை விழாக் கொண்டாடி இவ்வாறு ஜோதி ஏற்றப்பட்டதாக அப்புலவர் குறிப்பிடுகின்ருர்.

கார்த்திகை விழாக் கொண்டாடியதைப் போல, பங்குனி விழாவும் நடைபெற்றது.

உறையூருக்கு அருகில் காவிரி ஆற்றங்கரையின் சோலையில் பங்குனி விழா நடைபெற்றதாக அகநானூறு [137] என்னும் சங்கநூல் கூறுகிறது.

கொங்குநாட்டில், மணி, வைரம் முதலியவற்றைக் கயிற்றில் கோர்த்து இடுப்பில் கட்டிக் கொண்டு சப்பரத்தின் முன்னுல் வீதியில் ஆடிக்கொண்டு வருவார்கள். இந்நிகழ்ச்சி உள்ளி விழா என்ற விழாவின்போது நடைபெறும் என்று அகநானூறு [368] கூறுகிறது.

மதுரையை அடுத்துள்ள திருப்பரங்குன்றம் முருகன் கோவிலிலும் ஓயாமல் திருவிழாக்கள் நடைபெற்று வந்தன.

சங்ககாலத்தில் ஒருவர்மட்டும் தனியே இறைவனை வழிபடக்கூடிய வழக்கம் இருந்துவந்தது. கூட்டாகச் சேர்ந்து வழிபடக்கூடிய வழக்கமும் இருந்தது. இன்னது வேண்டும் என்று இறைவனிடம் வேண்டிப் பிரார்த்தனை செய்யக்கூடிய பழக்கமும் இருந்தது.

இந்தப்பழக்கங்கள் காலப்போக்கில் வளர்ந்து வரத் தொடங்கின. சங்ககாலத்தில் வைதிக சமயக் கருத்துக்கள் தமிழ்நாட்டில் பரவத் தொடங்கின. தமிழ்நாட்டில் வைதிக சமயக் கருத்துக்களைக் கொஞ்சம் கொஞ்சமாக மக்கள் ஏற்றுக்கொள்ளத் தொடங்கினர்கள். யாகம் அல்லது வேள்வி செய்வதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. யாகத்தை நடத்திவைப்பவர்களுக்குச் சமூகத்தில் நல்ல அந்தஸ்து ஏற்பட்டது. வடநாடு, வடநாட்டுக் கருத்துக்கள், தமிழ்நாடு, தமிழ்நாட்டுக் கருத்துக்கள் என்ற வேறுபாடு இல்லாமல் எல்லாக் கருத்துக்களும் கலந்துவிட்டமையால், மக்கள் ஏற்றுக்கொள்ளத் தொடங்கிவிட்டார்கள். புதிதாக வருகின்ற ஒரு கருத்தை எந்த மக்களாக இருந்தாலும் விருப்பத்துடன் ஏற்றுக்கொள்ளுவார்கள். அதுபோன்று, வைதிக சமயக் கருத்துக்களும், வட இந்தியாவில் பரவி நின்ற வேத நெறிக் கொள்கைகளும் தமிழ்நாட்டில்பரவத்தொடங்கி விட்டன.

இத்தகைய சமயக் கருத்துக்கள், வழிபாட்டு முறைகள், நம்பிக்கைகள் ஆகியவை காலந்தோறும் புதியஉருவம்கொண்டு வளர்ந்து வரலாயின.

சங்ககாலத்தில் தனிப்பட்ட முறையில் நடந்து வந்த இறைவழிபாடு, காலந்தோறும் வளர்ச்சியடைந்து, தேவாரம் பாடிய மூவரும் தனித்தனியே சிவபெருமானை எண்ணிப் புலம்பித் தனித்தனியே பாடல் பாடக்கூடிய பக்தி மார்க்கத்தை வளர்த்தது.

சங்ககாலத்தில் கூட்டாகப் பிரார்த்தனை செய்த முறை வளர்ச்சி அடைந்து, அடியார்கள் சூழ்ந்து வர, திருத்தலங்கள் தோறும் சென்று தேவாரம் பாடி, கூட்டு வழிபாடு செய்யும் பக்தி நெறியாக உருவெடுத்தது.

சங்ககாலத்தில் மழை வேண்டும், மகப்பேறு வேண்டும் என வேண்டிக்கொண்ட வேண்டுதல் பிரார்த்தனை முழு வளர்ச்சிபெற்று, இன்று பல்வேறு வேண்டுதல்களைக் கொண்ட வேண்டுதல் பிரார்த்தனையாக வளர்ச்சி பெற்றுள்ளது.

" சங்ககாலத்தில் கி. மு. இரண்டாம் நூற்ருண்டில், வட இந்தியாவில் தோன்றிய பக்தி நெறி தமிழகத்திலும் நன்கு பரவிவிட்டது " என்கிருர் ஆராய்ச்சி அறிஞர் ஒருவர்.

வேள்வியைப் பற்றிய செய்திகள் :

சமயச் சடங்குகளில் ஒன்ருக வேள்வி கருதப்பட்டது. வேள்வியை நடத்தி வைப்பது, வேள்வி செய்பவர்களை மதிப்பது ஆகிய செயல்கள் சிறந்த செயல்களாகக் கருதப்பட்டன. சங்க இலக்கிய நூல்களில் வேள்வியைப் பற்றிய பல செய்திகள் சொல்லப்படுகின்றன.

இராஜசூய யாகம், புத்திரகாமேஷ்டி யாகம், அஸ்வமேத யாகம், வாஜ்பேய யாகம் ஆகிய யாகங்கள் சிறப்பாகச் சொல்லப்பட்டுள்ளன.

இராஜசூய யாகம் செய்த சோழ மன்னன், இராஜசூயம் வேட்ட பெருநற்கிள்ளி எனக் கூறப்படுகிறான்.

பல யாகங்களைச் செய்த பாண்டிய மன்னன் பல் யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி எனப் பெயர் பெறுகிறான். இம்மன்னன் வேள்வி இயற்றிய அந்தணர் பலருக்கு ஊர்களைத் தானம் செய்தான் என்று வேள்வி குடிச் செப்பேடுகள் கூறுகின்றன.

இச்செய்திகளைப் புறநானூறு என்னும் சங்க இலக்கியம் கூறுகிறது.

பல்யானைச் செல்கெழுகுட்டுவன் என்பவன் சேர மன்னன். அவன், பாலைக் கௌதமனார் என்ற புலவரின் பொருட்டு, மிகுந்த பொருள் செலவு செய்து, பத்துப் பெரிய யாகங்களைச் செய்தான் எனப் பதிற்றுப் பத்து என்னும் சங்க இலக்கியம் கூறுகிறது. சேர மன்னர்களில் பலர் வேள்வி செய்தனர். சேர நாட்டில் வேத நெறி தழைத்திருந்தது.

அந்தணர்கள் தாங்கள் தங்கியிருந்த இடங்களில் யாகசாலைகளை அமைத்திருந்தனர். யாகசாலை ஒவ்வொன்றிலும் வேள்வித் தூண் (யூபம்) நடப்பட்டிருந்தது.

பெரிய யாகங்களைச் செய்த அந்தணர்கள் அரசர்களுக்குத் தக்க சமயத்தில் ஆலோசனை கூறி உதவினார்கள். வீட்டின்பம் பெறுவதற்குரிய தத்துவ உண்மைகளை எடுத்துக்கூறினார்கள்.

தொல்காப்பியர் காலத்திற்கு முன்பிருந்தே வேள்வி செய்யக்கூடிய பழக்கம் தமிழ்நாட்டிற்கு வந்துவிட்டது.

வேதம் ஓதுதல் :

சங்ககாலத்தில் வேதத்தில் வல்ல அந்தணர்கள் பல ஊர்களில் குடியிருந்தனர். அவர்கள் வண்டு ஒலி எழுப்புவதைப் போல இடைவிடாமல் வேதம் ஓதினார்கள். அந்தணர்கள் தங்களுடைய இல்லங்களில் கிளி வளர்த்தார்கள். அவர்கள் வேதம் ஓதுவதை நாள்தோறும் கிளி கேட்டுக் கேட்டு அதுவும் வேதம் ஓதப் பழகிக் கொண்டதுஎனப்புலவர்ஒருவர் இயம்புகின்றார்.

வேள்வி நடக்கும்போதும் இடையறாது வேதம் ஓதுவார்கள். வேதம் ஓதினால், வானம் பொய்க்காமல் மழை பொழியும்; விளைபொருள்கள் எல்லாம் ஏராளமாக விளையும், இல்லற வாழ்க்கை சிறப்படையும் என்று மக்கள் நம்பினார்கள்.

வேதம் ஓதும் அந்தணர்களுக்கு அரசன் ஊர்களைத் தானம் செய்தான். இந்த ஊர்கள் சதுர்வேதி மங்கலம் என்று சொல்லப்பட்டன.

திருச்சிராப்பள்ளிக்கு அருகில் உள்ள கம்பரசம்பேட்டைக்குச் (கம்பராயன் பேட்டை) சதுர்வேதி மங்கலம் என்று பெயர். மதுரைக்கு அருகில், திருப்பரங்குன்றத்திற்குப் பக்கத்தில் உள்ள கூத்தியார் குண்டு என்ற ஊருக்குச் சதுர்வேதிமங்கலம் என்று பெயர்.

திருமண காரியம், நீத்தார் கடன் கழித்தலாகிய இறந்தார்க்குச் செய்யும் கிரியைகளைச் செய்தல் ஆகிய தொழில்களைச் செய்யும் அந்தணர்களுக்கும், அரசர்களால் நில தானம் செய்யப்பட்டது. அந்த நிலத்திற்குப் பிரம்மதேயம் என்று பெயர்.

திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் அருகில் உள்ளஓர் ஊர் பிரம்மதேசம் என வழங்கப்படுகிறது. அது அத்தகைய அந்தணர்களுக்குத் தானமாக வழங்கப்பட்ட ஊர் ஆகும்.

கோவில்களுக்கும் அரசர்கள் நிலதானம் செய்தார்கள். அந்த நிலத்திற்குத் தேவதானம் என்று பெயர். மதுரை மாவட்டம் வத்தலக்குண்டு அருகில் உள்ள ஓர் ஊர் தேவதானப்பட்டி என்பதாகும்.

புராணமும் இதிகாசமும் :

பழங்காலத்தில் நிகழ்ந்த வரலாற்றுச் சம்பவங்களுடன் கற்பனையாக சில விஷயங்களைச் சேர்த்துக் கூறுவது புராணம். இதிகாசம் என்றாலும், பழங்கதை என்றாலும் ஒன்றுதான். கடவுளின் அம்சமாகப் பூமியில் வந்து அவதாரம் செய்தவர்களைப்பற்றி விளக்கமாகக் கூறுவது இதிகாசம்.

புராணமும் இதிகாசமும் கடவுளின் மகிமையைக் கூறுகின்றன. அப்படிக் கூறுவதின் மூலம் மக்களுக்கு இறையுணர்வை ஊட்டுகின்றன. இறையுணர்வை ஊட்டி மக்கள் அனைவரும் நன்முறையில் வாழ்வாங்கு வாழ வழி வகுக்கின்றன. புராணத்தைப் பற்றிய செய்திகள் வடமொழியாகிய சமஸ்கிருதமொழியில் சொல்லப்பட்டுள்ளன.

காக்கும் கடவுள் கண்ணபிரான்

(சுவாமி துருவானந்தர்)

டாக்டர் ஒருவர் இருந்தார். அவர் தம்மைத் தேடி வருகிற நோயாளிக்குத் தகுந்த மருந்து கொடுத்து வந்தார். கொஞ்ச நாட்களாக நன்ருக ஓடிக்கொண்டிருந்த அவருடைய மருத்துவ மனைக்குக் கூட்டம் வருவது குறையலாயிற்று. கூட்டம் குறையக் குறைய வருமானம் குறைந்தது. கடன் அதிகரிக்கவே கட்டிய மனைவியின் கடுஞ்சொல்லும், நண்பர்களின் பரிகாசமும் மனதை எரித்துப் பொசுக்கியது. இந்நிலையில் அவருக்கு நெஞ்சில் எங்கோ ஒரு மூலையில் வலி தோன்றுவது போல உணர்ந்தார். தாம் படித்த வைத்திய சாஸ்திரத்தில் அந்த நோய்க்கு என்ன மருந்து விதிக்கப்பட்டிருக்கிறது என்பதை ஆராய்ந்து, வேண்டிய மருந்துகளைச் சாப்பிட்டார். நாட்கள் ஓடின. மருந்து புட்டிகள் காலியாயின. ஆனல் நோய்தான் குறைந்தபாடில்லை. நாளுக்கு நாள் எலும்பும் தோலுமாக ஆள் இளைத்துக் கொண்டே வந்தார். நண்பர்கள் சிலரின் ஆலோசனைப்படி பக்கத்து ஊரில் உள்ள கைராசிக்காரர் என்று புகழ் பெற்ற மனேதத்துவ அறிஞரை அணுகினர். அவர் தம்மிடம் வந்த மருத்துவரின் நிலைமையை ஏற்கனவே நன்கு தெரிந்திருந்தார். அவரைக் குணப்படுத்த மருந்து மட்டும் உதவாது; வேறு ஒன்றும் தேவை என்பதை உணர்ந்தார். தம்மிடம் வந்து அடைக்கலம் புகுந்த மருத்துவருக்குக் கைராசிக்காரர் மருந்து கொடுத்தார். சாப்பிடும் முறைகள், இருக்கவேண்டிய பத்தியம் முதலியனவற்றை முறையாக விளக்கி அவரை அனுப்பி வைத்தார். வீட்டுக்கு வந்த மருத்துவரின் வீட்டில் அன்று அசாதாரணமாக நோயாளிகளின் கூட்டம் அதிகம். மருத்துவரும் தம் நோயைப் பொருட்படுத்தாது வந்தவர்களைக் கவனித்து அனுப்பி வைத்தார். தாம் வாங்கி வந்த மருந்தை முறையாகச் சாப்பிட்டார். நாளுக்கு நாள் கூட்டம் அதிகரிக்கவே வருமானம் பெருகியது. வீட்டில் மகிழ்ச்சி, ஆரவாரம். இடையருது வேலையில் மூழ்கியிருந்தால் உடலைப் பற்றி நினைக்க நேரமில்லை. ஒரு சில நாட்களில் தம் வியாதி முற்றிலும் குணம் ஆனதாக உணர்ந்தார். மகிழ்ச்சிப்பெருக்கோடு தாம் மருந்து வாங்கி வந்த கைராசிக்காரரைச் சந்தித்துப் பல மாதங்கள் தீராத நோய் தங்கள் மருந்தால் குணமான விந்தை கண்டு வியப்படைகிறேன். அது என்ன மருந்து என்று சொன்னல் மிக்க உபகாரமாக இருக்கும் என்ருர். ‘நம்பிக்கை’ என்ற மருந்தைத்தான் இதுநாள் வரை தாங்கள் அருந்தி குணமடைந்தீர்கள். நான் பொடிபோன்று கொடுத்தது வெறும் கோதுமை மாவு மட்டும்தான் என்ருர்.

உங்களிடம் வந்த கூட்டம் குறைந்ததால் வறுமை வாட்டியது. அந்த வறுமையால் ஏற்பட்ட வேதனை ஊனுடலைத் தாக்க ஆரம்பித்தது. வேறு நோய் ஒன்றும் கிடையாது. உங்களின் கஷ்டம் தீர்ந்தால் நோய் தீரும் என்று எண்ணி என்மருத்துவமனைக்கு வந்த நோயாளிகளில் சிலரை உங்களைப் பார்த்துச் சிகிச்சை பெறும்படி அனுப்பி வைத்தேன். கூட்டம் பெருகியது. வருமானம் கூடியது. வறுமை ஓடியது. வந்த நோயும் மாயமாய் மறைந்தது. நான் கொடுத்த மருந்துதான் குணமாகியது என்ற எண்ணமும் மனதில் ஏற்பட்ட உற்சாகமும் உங்களின் நோயைப் போக்கியுள்ளன. ஆகவே நம்பிக்கை என்ற ஆயுதத்திற்கு நிகரானது உலகில் வேறு எதுவும் கிடையாது என்ருர். அந்த நம்பிக்கை என்ற அறிவு எல்லார்க்கும் எளிதில் எல்லா விஷயங்களிலும் வந்துவிடுகிறது. முன்பின் அறிமுகம் ஆகாத வைத்தியர் எழுதிக்கொடுத்த மருந்தை விசுவாசத்துடன் நோயாளி சாப்பிடுகிருன். அவர் எழுதிக் கொடுத்தது மருந்துதானு? நிச்சயம் தன் நோயைக் குணப்படுத்துமா? என்று ஐயுறுவதில்லை. புதிதாக ஊர் ஒன்றுக்குப் போக நாம் செல்லவேண்டிய இடத்திற்குச் சிலரை அணுகிவழி கேட்கிருேம். அவர்கள் சொல்லில் நம்பிக்கை வைத்துப் பல மைல்கள் நடந்தாகிலும் அவ்விடத்தைச் சேர முயற்சிக்கிருேம். இப்படியெல்லாம் உலகியலில் நம்பிக்கை வைக்கிற நாம் இறைவன் சொன்ன வாக்கில் நம்பிக்கை வைக்காது நம்மைத் தாழ்த்திக் கொள்கிருேம். அதன் விளைவாகக் கஷ்டப்படுகிருேம். ஆக அது யாரு

டைய பிழை? நம் பிழைதானே!

நம்பிக்கைக்குப் பரமவிரோதியாயிருப்பது சந்தேகம். நண்பன் ஒருவனுக்குத் தன் நண்பன் மீது சந்தேகம் ஏற்பட்டால் விரைவில் நட்பு முறிந்து பகைமூண்டுவிடும். பக்தியுள்ள மனதில் சந்தேகம் ஏற்பட்டால் பக்திகுன்றி நாஸ்திகம் தலையெடுக்க ஆரம்பித்துவிடும். பக்தனுக்கு மெய்யான துணையாக இருப்பது நம்பிக்கை; அந்த நம்பிக்கைக்கும் இடையிடையே சோதனை ஏற்படுவது உண்டு. தன் இஷ்ட தெய்வத்தையே நம்பி தர்ம நெறியில் இருந்து பிசகாதவனுக்கு எந்தவிதச் சோதனையும் எதுவும் செய்துவிடமுடியாது.

சில காலத்திற்கு முன் பரமபக்தர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் நாள்தோறும் தம்மைத் தேடிவரும் மாணவர்களுக்குப் பகவத்கீதையைத் தெளிவாக உச்சரிக்கச் சொல்லித் தந்தும், பகவத் கீதையின் உட்கருத்தையும் புகட்டி வந்தார். மாணவர்களிடம் அவராக எதுவும் கேட்பது இல்லை. மாணவர்களாக வலியக்கொண்டு வந்து தந்த காணிக்கையால் குடும்ப வாழ்வு நடந்து வந்தது. அவரும், அவர் மனைவியும், இரு குழந்தைகளும் இப்படியாகத் தங்களின் வாழ்க்கையை நடாத்தி வந்தனர். ஒரு தடவை அவ்வூரில் பஞ்சம் நிலவியது. வசதியுள்ளவர்கள் தங்களைத் தாக்குப் பிடித்துக்கொண்டனர். ஆனால் ஏழைகளின் நிலை இன்னலுக்குள்ளானது. இது இப்படியிருக்க வேறு உழைப்பு எதுவுமின்றி பகவத்கீதையை உபதேசித்து அதன் மூலம் கிடைத்ததைக் கொண்டு நடாத்திய வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டது. பல ஆண்டுகளாக நடத்தி வந்த தொண்டினைப் பக்தரும் விட்டு விடவில்லை. ஆனால் வறுமை தாண்டவமாடியதன் விளைவாக மனைவி, மக்கள் அடிக்கடி பட்டினி கிடக்க நேர்ந்தது. கொடிது, கொடிது வறுமை கொடிது என்றாள் ஔவை. இது எவ்வளவு உயர்ந்த அனுபவக் கோட்பாடு என்பதை வறுமைப் பிணியில் உழன்றவர்களால்தான் உணர்ந்து பார்க்கமுடியும். வறுமையின் காரணமாக நல்லார் பலர் திருடர்களாகியுள்ளனர். பல நல்ல மாதர்களும் வறுமைத் துயரைத் தாங்கமுடியாது விலைமாதர்களாகமாறித் தங்கள் வாழ்வை விற்றுப் பிழைக்க வேண்டிய அவலநிலைக்கு ஆளாகியுள்ளனர். அப்பப்பா இந்த வறுமை எத்தனை பேரைத் தங்கள் நிலையிலிருந்து பிசகச் செய்து நெறிவழுவியவர்களாக்கிச் சமுதாயம் கண்டு வெறுத்து ஒதுக்குமளவு செய்துவிடுகிறது. 'கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே என்ற பொன்னுரை மறைந்துவிடவில்லையே!' புறவுலகத்தில் எவ்வளவுதான் வறுமைநோய் தாக்கினாலும் அகத்தில்சிறிதும் மாறுதலின்றித் தாங்கள் சத்தியத்தினின்றும், தர்மத்தினின்றும் பிசகாத சான்றோர்களையும் இவ்வுலகம் கண்டுவருகிறது. சிறியசெடி, கொடிகள் இலேசான காற்று அடித்தவுடன் நாலாபக்கங்களிலும் வளைந்து ஆடி அசைந்து வருகிறது. ஆனால் பாறையோ எந்தவிதப் பயங்கரமான காற்றுக்கும் சிறிதும்அசைந்து கொடுப்பதில்லை. தெய்வநம்பிக்கை உள்ளவன் வாழ்வின் மர்மத்தை உணர்ந்தவன் எதற்கும் அஞ்சான், மனம் கலங்கான். நடப்பது நடக்கட்டும் என்று தன் கடமையை முறையாகச் செய்து கொண்டிருப்பான். இந்தப் பக்தரும் பகவத்கீதையை முறையாகப் பல ஆண்டுகள் ஐயந்திரிபு அறக் கற்றவர். பலருடைய ஐயங்களைப் போக்கி வந்தவர். வறுமைநோயால் தாக்குண்டார். பசி வந்திடப் பத்தும் பறந்துபோம் என்றாற்போல் வறுமை நோயின் கொடுமையால் அவருக்குக் கீதையின் உரை மீது சந்தேகம் தோன்றலாயிற்று. நாட்கள் இங்ஙனம் சென்றுகொண்டிருந்தன. ஒரு நாள் வசதிபடைத்த பக்கத்து வீட்டுக் குழந்தைகள் புத்தாடை அணிந்து மகிழ்ச்சியுடன் விளையாடிக் கொண்டும், தின்பண்டங்களைத் தின்று கொண்டும் ஆரவாரித்துக் கொண்டுமிருந்தனர். வீட்டு முன்னர் மாக்கோலம்போட்டு இசைபாடி மகிழ்வுற்றிருந்தனர். இவ்வளவையும் பார்த்துக்கொண்டிருந்த ஏழைபக்தரின் குழந்தைகள் பட்டினியால் தவித்துக்கொண்டிருந்தனர். ஒட்டியவயிறோடு தாயின் மடியைவிட்டகலாத பச்சிளம் குழந்தைகள் ஏங்குவதைக்கண்டதாய் உள்ளம் மேலும் பொறுத்திருக்க முடியாது தவித்தது. பெண்டிற்கழகு எதிர்பேசாமை என்ற வாக்கையும் தாய் வீட்டில் கற்று வளர்ந்தவள் தான். இறைவனைப்பற்றிய ஞானம், பக்தியும் வாய்க்கப்பெற்றவள்தான். ஆனாலும் வறுமையின் கொடுமையால் தன் கஷ்டத்தை

விடக் குழந்தைகள் பசிநோயால் தவிப்பதைக் கண்ட அந்த அம்மையார் கணவனைக் கடுஞ் சொல்லால் கேட்கலானாள்: "போதும் போதும் உங்கள் பகவத் கீதை உபதேசமும் பிரசார மும். குழந்தைகள் பட்டினியால் வாடிக்கொண் டிருப்பதைப் பார்த்தும், எங்காவது சென்று ஏதாவது வேலைதேடிச் சிறிது ஊதியம் கொண்டுவந்து குடும்பத்தைக் காப்பாற்ற முடி யாத நீங்கள் ஒரு மனிதர்தானா? கடவுளை வழிபடவேண்டியதுதான். அதற்காகவேண்டி பைத்தியக்காரத்தனமாக அவர் கொடுப்பார்! கொடுப்பார்! என்று உட்கார்ந்துகொண்டிருந் தால் நாம் எல்லாரும் சாவதைத் தவிர வேறு வழியில்லை. கௌரவம் பார்க்காமல் கீதையைத் தூக்கி எறிந்துவிட்டு வெளியே எங்காவது சென்று குழந்தைகள் உண்பதற்கு ஏதாவது வாங்கி வந்து கொடுங்கள்" என்று உள்ளத்தில் அடக்கி வைத்திருந்த ஆத்திரத்தைக் கொட்டித் தள்ளினாள். நம்பிக்கைக்கும், அவநம்பிக்கைக்கு மிடையே ஊசலாடிக் கொண்டிருந்தது பக் தரின் உள்ளம். எல்லாவற்றிற்கும் பரம னையே சார்ந்திருந்து, அவர் வாய்மொழி யாகிய கீதையை மக்களுக்குப் புகட்டுபவன் நலிவடைவதில்லை என்று கீதா வாக்கியம் புகட்டுகிறதே! அவரையே சதா நம்பும் பக்த னுடைய குடும்பத்தேவையைப்பூர்த்திபண்ணுவ தாக அவரே கீதையில் சத்திய உரை உரைத்த தும் வெறும் ஏமாற்று வித்தையா? இதுநாள் வரை நான் பண்ணிய ஸத்கைங்கரியங்களனைத் தும் விழலுக்கு இறைத்த நீர் போன்றதுதானா? கடவுள் நம்பிக்கையில்லாதவர்களும், பொய் பித்தலாட்டங்கள், மக்களை ஏமாற்றுதல் முத லிய இழிவான காரியங்களில் ஈடுபடுபவர்களும் தற்போது பிறர் மதிக்கும்படி ராஜபோகத்தில் வாழவும்; பகவான் கூறியபடி வாழ்ந்து பரமனுக்கென்றே என் வாழ்க்கையை அர்ப் பணித்த நானும் என் குடும்பத்தாரும் உண்ண உணவின்றி பிச்சைக்கார கோலத்துடன் இருக்க வேண்டியதவசியமென்ன? உண்மை யில் நான் பிழைபோய் விட்டேனா! இத்த கைய எண்ண அலைகள், சலிப்படைந்த அவர் மனத்தை ஒருபுறம் தாக்கியது. மறுப்க்கம் மனைவி இடித்துரைத்த இழிசொற்கள் தாக்கின. சலிப்படைந்த மனதோடு என்ன செய்வது என்று திரும்பியபோது பகவத்கீதை யின் ஏட்டுச்சுவடிகள் அழகாகக் கட்டப்பட்டுச் சுவரில் மாட்டப்பட்ட கண்ணனின் படத்துக் கருகில் வைக்கப்பட்டிருந்ததைப் பார்த்தார். வேதனையும் சினமும் கொண்ட மனதோடு விரைந்து சென்று அச்சுவடிகளை எடுத்தன பக்தரின் கரங்கள். துன்பம் வாய்த்த பொழு தெல்லாம் அவருக்கு அடைக்கலம் கொடுத்து உதவியது கீதையின் ஏட்டுச் சுவடிகள். திடீ ரென ஏதாவது பக்கம் ஒன்றைக் கண்ணனை நினைத்தே திறப்பார். உடனே அகப்படுகிற அந்தப்பகுதியில் வருகிற சுலோகம் அவருக்கு ஆறுதல் ஊட்டுவதாக இருக்கும். இது அவ ருக்குக் கீதையிலிருந்த நம்பிக்கையைக் காட்டு கிறது. ஆனால் இன்றோ எடுத்த கரத்தோடு கண்ணனை நிந்தித்துக்கொண்டே, ஏட்டைத் திடீரெனப் பிரித்தார். என்ன ஆச்சரியம்! அவர் எதை இவ்வளவு நேரமும் மறுத்தாரோ அதை மறுக்கிற நிலையில் உறுதியாகச் சொல்வது போல் அமைந்தது அந்தச் சுலோகம். அது என்ன? "எனக்கு அன்னியரல்லாராய், என் னையே நினைந்து யாண்டும் என்னையே உபா சிக்கும் நித்திய யோகிகளுக்கு யோக க்ஷேமத்தை நான் வழங்குகிறேன்."

இந்தச் சுலோகத்தை எத்தனை தடவை அவர் பார்த்திருக்கக்கூடும்! ஆனால் அவருடைய நிலை யோடு ஒப்பிடுகையில் இது வெறும் மிகைப் படுத்திய கூற்று என்று எண்ணிய அவர் சினத்தோடு எழுத்தாணியை எடுத்து ஏட்டில் காணப்பட்ட அந்தக் குறிப்பிட்ட சுலோகத் தைக் குத்திக் கிழித்துத் தூக்கி எறிந்துவிட்டு ஆவேசம் வந்தவர் போல் விரைவாக வெளியே நடந்தார்.

அதே அக்ரஹாரம். காலை வேளை. காற்று குளுமையாக வீசிக்கொண்டிருந்தது. அன்றைய தினம் கோகுலாஷ்டமி. கண்ணன் பிறந்த நாள். ஆஸ்திகப் பெருமக்களின் வீட்டில் எல் லாம் கண்ணனின் பெருமை பாடப்பெற்றது. குழந்தைகளுக்கு அன்றைய தினம் நிறையப் பட்சணங்கள் வந்து சேரும். இத்தகைய ஒரு புனித நாளன்று தலை விரிகோலமாக, குழந்தை கள் புழுப்போல நெளிந்துகொண்டு தாயை வந்து உபத்திரவப்படுத்தின. சமாதானம் சொல்லிச் சொல்லி அவளும் ஓய்ந்துவிட்டாள்.

துரதிருஷ்டமாகத் தனக்கு இங்ஙனம் அமைந்து விட்ட நிலையை எண்ணி அவள் பெருமூச்சுவிட்டுக்கொண்டிருந்தபொழுது “அம்மா, அம்மா” என்ற மழலைச் சொல்லின் குரல் கேட்டுக் கண் விழித்தாள். சுற்றும் முற்றும் பார்த்தாள். குரல் வீட்டு வாசற் பகுதியிலிருந்து வருவதாக உணர்ந்தாள். மடியில் படுத்திருந்த குழந்தைகளைச் சற்று அகற்றிக் கீழே படுக்க வைத்துவிட்டு எழுவதற்குள் “அம்மா, அம்மா” என்று இடையறாது ஓங்காரத் தொனி போன்று வந்த அக்குரல் கேட்டு ஒரு கணம் தன்வயமிழந்தாள். வீட்டு வாசல் வரைதான் சென்றாள். அதற்குள் ஒரு சியாமள வடிவம், நீல நிறத்தோடு காட்சி கொடுத்தது. காதில் விழுந்த அம்மா என்ற ஓசை மறைவதற்குள்கண்ணில் விழுந்த வடிவம் கண்டு அவள் தன்னை முற்றும் மறந்தாள். பிறகு விழித்தாள். யார் அது? என்றாள். என்னே மாயையின் வல்லமை! கட்டுப்படாத பரம்பொருள் கட்டுப்பட்டவர் போன்று காட்டிக்கொள்கிறார். இதுதான் அவருடைய மாயாகாரியம் போலும்! உலக ஆசைக்கு வசப்பட்ட அம்மாதுவுக்கு ஞானக்கண்ணில்லையாதலால் ஊனக்கண் கொண்டே உருவத்தைக் கண்டுகளித்தாள். “பச்சை மாமலை போல் மேனியல்லவா! பவளவாய் கமலச் செங் கண்ணல்லவா! அழகின் இருப்பிடமான அக்குழந்தை இங்கு வந்தது என்ன காரணம் கொண்டோ?” என்று எண்ணியவளாய் சிறுவனிடம் நெருங்கி வந்து ‘யார்? வந்த விபரம் என்ன?’ என வினவினாள். சொல்லற்கரியபொருள்சொற்சுவையோடு பேசியது. தன்னுடன் கொண்டுவந்த ஒரு சிறிய வண்டியைச் சுட்டிக்காட்டி “அம்மா, இந்த வண்டியிலுள்ள பொருள்களை எடுத்து உள்ளே வையுங்கள். இவற்றையெல்லாம் அப்பா என்னிடம் கொடுத்து வீட்டில் வைக்கும்படி கூறினார். என் வார்த்தையில் நம்பிக்கை வைக்காது என் நாவைக் கிழித்துவிட்டார் பாருங்கள்” என்று கண்ணீர் மல்கிய முகத்துடன் வாயைத் திறந்தான் பாலகன். நாவில் ஒரு கீறல் ஏற்பட்டு அதிலிருந்து ரத்தம் கசிந்து வடிந்தது. பார்ப்பதற்கே அக்காட்சி மிகப் பரிதாபமாக இருந்தது. இதைக் கண்ட தாயுள்ளம் பொறுக்கவில்லை. “கண்ணே, இங்கே நில். இதோ வந்துவிடுகிறேன்” என்று பரபரப்போடு ஓடிச் சிறிது பச்சிலையோடு வந்தாள். என்ன ஆச்சரியம்! அங்கே அந்தக் குழந்தை காணப்படவில்லை. பலதடவை குரலிட்டும் சுற்றுப்புறங்களில் தேடியும் அகப்படவில்லை. அதற்கு மாறாக அச்சிறுவனின் இரத்தம் சொட்டிய இடங்களில் துளசி தளங்கள் சிதறிக் கிடந்தன. இப்பொழுது அவள் அகக்கண் திறந்தது. பகவான் அல்லவோ நம் வீடு தேடிவந்துள்ளார். அவரை உள்ளபடி உணராது போனேமே! என்னே என் சிறுமதி! என்று தன்னை நொந்து கொண்டாள். வண்டியில் கொண்டு வந்த உணவுப் பொருள்களை வீட்டில் எடுத்துவைத்தாள். தானும் குழந்தைகளும் நீராடிப் புத்தாடை உடுத்தி வீட்டைச் சுத்தப்படுத்தியபின் குழந்தைகள் உணவும், பழமும் அருந்தி இன்புற்றுத் தந்தையை எதிர்நோக்கிய வண்ணம் வீட்டு வாயிலில் நின்றுகொண்டிருந்தன.

ஏட்டுச் சுவடியை எறிந்துவிட்டு விரக்தியோடு சென்ற பக்தர் மாறுபட்ட மனநிலையோடு மனையை நோக்கித் திரும்பிவந்துகொண்டிருந்தார். குழந்தைகளின் பூரிப்பு, வீட்டில் ஏற்பட்டிருந்தமாறுதல் அவரைத் திகைக்கச் செய்தன. நடந்ததை வினவினார். விபரங்களையெல்லாம் மனைவி தெளிவாகக் கூறினாள். “ஐயோ உண்மையை உணராது, ஐயத்திற்கு இடங்கொடுத்து என் ஐயனை நிந்தித்தேன், அவருடைய நாமொழியாகிய கீதையைக் கிழித்ததன் மூலம் பகவானின் நாவை அல்லவோ கிழித்தேன். மகாபாபி நான். நீ பாக்யசாலி. அவர் தரிசனம்உனக்குக்கிட்டியது. படகில் சிறியஓட்டையிருந்தாலும் நீர் உள்ளேபோய் அது மூழ்கிவிடும் அன்றோ? ஒருவன் உள்ளத்தில் சந்தேகம் புகுந்துவிட்டால் அவன்நிலை பரிதாபத்துக்குரியது ஆகிறது. நானே அதற்குச் சான்று. கிருஷ்ணா, முகுந்தா, என்னை மன்னித்துவிடு என்று சுவரில் முட்டி முட்டி அழுதார், புலம்பினார். இறுதியில் ஒருவாறு தேறுதல் அடைந்து முன்னைக்காட்டிலும் பக்தியும், விசுவாசமும் வாய்க்கப்பெற்றவராக ஆனார். மனைவியும் பக்திமதி ஆனாள். அவர்கள் இருவரும் இறைப்பணியில் ஆழ்ந்து மூழ்கினர். காக்கும் கடவுள் கண்ணன் என்று அவரிடம் தங்களை ஒப்படைத்து அவரருளைப்பெற்று உய்வடைந்தனர்.

ஸ்ரீ ஸாரதா ஸமிதி

தீவிரமாகக் கடவுள் நாட்டம் கொள்வது மானுடப் பிறவியின் சீரிய குறிக்கோள் ஆகும். ஆண்பாலர் பெண்பாலர் ஆகிய இரு பாலர்க்கும் இது ஒப்ப முடிந்த லட்சியமாகும். கடவுள் நாட்டம் அதிகரிப்பதற்கு ஏற்ப உலக ஆசைகள் தாமாக மறைந்துபட்டுப் போகின்றன. உலக ஆசைகளை அறவே ஒழித்தவர் துறவியர் ஆகின்றனர். பெண்பாலர்க்கிடையில் இக்காலத்தில் தீவிரமான துறவியாகத் திகழ்ந்தவர் அன்னை ஸ்ரீ ஸாரதா தேவியார் என்பது உலகு அறிந்த விஷயமாகும். அவரைத் துறவறத்துக்கென்றே ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் ஆயத்தப்படுத்தினர். அன்னையாரின் பாரமார்த்திகப் பெருவாழ்வு உலக மக்களுக்கு ஓர் ஒப்பற்ற அருள்விருந்து ஆகிறது. அருள் கனிந்த இந்த ஞானத் தாயின் பெயரில் சேலம் ஸ்ரீ ஸாரதா ஸமிதி நிறுவப் பெற்றுள்ளது. ஸமிதி என்னும் சொல் திருக்கூட்டம் எனப் பொருள்படுகிறது.

பழங்காலத்தில் பாரமார்த்திக வாழ்வு வாழ விரும்பிய பெண்பாலர்க்குக் கன்னிமாடம் என்னும் ஸ்தாபனம் அமைத்துவந்தனர். அக்காலத்தில் பண்பட்டிருந்த பெற்றோர்கள் அதற்கு முற்றிலும் சம்மதம் கொடுத்து வந்தனர். ஆனால் இடைக்காலத்தில் சமுதாயத்தின் சூழ்நிலை கன்னிமாடத்துக்குப் பிரதிகூலமாயிருந்தது. ஆதலால் அந்த ஸ்தாபனம் மறைந்துபட்டுப் போயிற்று. மகளிர் மணம் புரிந்தே ஆகவேண்டும் என்னும் கட்டுப்பாடு வந்தது. ஆனால் திருவருளின் சகாயத்தால் பழைய அனுகூலமான நிலைமை மீண்டும் வந்து கொண்டிருக்கிறது. அதைப் பயன்படுத்துவது மக்களின் கடமையாகும்.

இக்காலத்தில் கத்தோலிக்க கிறிஸ்தவர்களுக்கிடையில் துறவு பூண்டுள்ள மகளிர் ஸ்தாபனம் (nunnery) உலகெங்கும் நன்கு நடைபெற்று வருகிறது. அம்மதத்தைச் சேர்ந்த தாய் தந்தையர் மனமுவந்து தங்கள் புதல்வியர்களுள் ஒருத்தியைக் கன்னிமாடத்துக்குச் சீதனம் கொடுத்து ஒப்படைக்கின்றனர். கல்வித்துறையிலும் மருத்துவத் துறையிலும் அம் மகளிர் கூட்டம் அரும்பணியாற்றி வருகிறது. ஹிந்து சமுதாயத்திலும் அத்தகைய ஸ்தாபனம் விரைவில் வருவது இன்றைக்கு அவசியமாகிறது.

பாரமார்த்திகப் பெருவாழ்வு வாழ விரும்புகிற ஆடவர்களுக்குத் திருப்பராய்த்துறையில் ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம் வசதியளிக்கிறது. அதேபாங்கில் மகளிர்களுக்குச் சேலம் ஸ்ரீ ஸாரதா ஸமிதி வசதியளிக்கிறது. இந்த ஸமிதியைத் தாய்மார்கள் சிலர் நிர்வகித்து வருகிறார்கள். அவர்கள் உலக பந்தபாசங்களிலிருந்து முற்றும் விடுபட்டவர்கள் ஆகிறார்கள். சேலம் ஸ்ரீ ஸாரதா மகளிர் கல்லூரி, ஸ்ரீ ஸாரதா ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, ஸ்ரீ ஸாரதா பெண்கள் உயர்நிலைப்பள்ளிக்கூடம், ஸ்ரீ ஸாரதா பாலமந்திர் ஆகிய கல்விச்சாலைகளின் நிர்வாகங்கள் அவர்கள் ஆதிக்கத்தில் இருந்து வருகின்றன.

ஸ்ரீ ஸாரதா ஸமிதியில் எத்தகைய மாதர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள் என்பதன் விளக்கம் வருமாறு :—

(1) விவாகம் செய்துகொள்ள விருப்பமில்லாத வனிதைகள் இதில் சேர்த்துக்கொள்ளப் படுவார்கள். அதற்கு அவர்கள் தங்கள் பெற்றோரின் அனுமதி பெறவேண்டும்.

(2) குழந்தைகள் இல்லாத கைம்பெண்கள் தங்கள் வசத்தில் இருக்கிற செல்வத்தை ஸமிதியில் சேர்த்துவிட்டு அதில் சேர்ந்துகொள்ளலாம்.

(3) கணவன்மார்களால் கைவிடப்பட்ட பெண்கள் ஸமிதியில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

ஸமிதியில் சேர்ந்துகொள்ள விரும்புபவர்கள்

தங்கள் வரலாறுகளைப் பற்றிக் கடிதம் எழுத வேண்டும். அம்முறையில் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் மாத்திரமே ஸமிதியில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

ஸ்ரீ ஸாரதா ஸமிதியில் சேர்ந்துகொண்டவர் களுக்கிடையில் ஜாதி மத வேற்றுமை கிடை யாது.

ஸமிதியில் அங்கத்தினராகச் சேர்ந்து கொண்டவர்களுக்குப் பாரமார்த்திக வாழ்வு, கல்வி ஸ்தாபன நிர்வாகம் ஆகியவைகளில் தக்க பயிற்சியளிக்கப்படும்.

அங்கத்தினர்களை ஆயுட்காலம் முழுவதிலும் நன்கு பரிபாலித்துவர ஸமிதி கடமைப்பட் டிருக்கிறது.

சேலம் ஸ்ரீ ஸாரதா ஸமிதியானது திருப் பராய்த்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனத் தின் லட்சியத்தைக் கடைப்பிடித்து வருகிறது. அதாவது ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர், அருள் அன்னை ஸ்ரீ ஸாரதாமணி தேவியார், சுவாமி விவேகானந்தர் ஆகிய பெருமக்கள் புகட்டிய பெருநெறியை வாழ்க்கையில் நடைமுறையில் கொண்டுவருவது இந்த இரண்டு ஸ்தாபனங் களின் லட்சியமாகும்.

ஸ்ரீ ஸாரதா ஸமிதியைப் பற்றி மேலும் அறிந்துகொள்ள விரும்பும் தாய்மார்கள் கீழே கண்டுள்ள விலாசங்களுக்கு எழுதலாம்.

1. யதீஸ்வரி சாரதாப்ரியா
தலைவி, ஸ்ரீ ஸாரதா ஸமிதி,
அளகாபுரம், சேலம்-4

2. சுவாமி சித்பவானந்தர்
ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்,
திருப்பராய்த்துறை-639 115, திருச்சி ஜில்லா.

செய்திகள்

நிகழ்ந்தவை

மதுரை ஜில்லா திருவேடகத்தில் ஜூலை மாதம் 4 ஆம் தேதி மேல்நிலைப்பள்ளி ஆரம்ப மாகி நடந்து வருகிறது. பதினொன்றும் வகுப்பு மாணவர்கள் விடுதியில் தங்கி குருகுலப் பயிற்சிபெற்று வருகிறார்கள். ஆறும் வகுப்பி லிருந்து பத்தாம் வகுப்பு வரையிலும் உள்ள வகுப்புக்களில் வீட்டிலிருந்து வந்து (Day scholar) சேர்ந்து கல்வி பயின்றுவருகின்றனர். ஆறும் வகுப்பிலிருந்து பத்தாம் வகுப்புவரை யிலும் வீட்டிலிருந்து வந்து அப்பள்ளியில் சேர்ந்து படிக்க இடம் இருக்கிறது.

நிகழ்பவை

குற்றாலம் ஐந்தருவி ஸ்ரீ ராமகிருஷ்ண ஆச்ர மத்தில் ஜூன் மாதம் 15 ஆம் தேதி ஆரம் பித்த பருவ அந்தர்யோகம் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. ஆகஸ்டு மாதம் 15 ஆம் தேதியோடு அந்தர்யோகம் முடிவடையும். அது சம்பந்தமான விவரங்கள் தர்ம சக்கரம் வைகாசி மாத இதழில் அட்டை இரண்டாம் பக்கத்தில் வெளிவந்துள்ளன.

ஜூலை மாதம் 21 ஆம் தேதி சனிக்கிழமை, 22 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரண்டு தினங்களில் திருவரங்குளத்தில் இரண்டு நாள் அந்தர்யோகம் ஆனி மாதத் தர்ம சக்கரத்தில் அட்டையின் நான்காம் பக் கத்தில் குறிப்பிட்டிருந்ததுபோல் நிகழும். திரு வரங்குளம் அந்தர்யோக விவரத்தில் ஆவண் குடி போஸ்ட் என்று பிழையாகப் பிரசுரமாகி விட்டது. ஆலங்குடி போஸ்ட் என்பதுதான் சரி யானது.

ஆண்டுதோறும் குருகுலமாணவர்கள் தமிழ் நாட்டிலுள்ள முக்கிய கோவில்களுக்கு ஐக்கிய வணக்கத்துக்குச் செல்வார்கள். இவ்வாண்டு சிதம்பரத்துக்குத் திருப்பராய்த்துறை ஸ்ரீவிவே கானந்த வித்யாவன குருகுல மாணவர்கள் ஐக்கிய வணக்கத்துக்காக ஆகஸ்டு மாதம் 4, 5 தேதிகளில் செல்வார்கள்.

ஸ்ரீ விவேகானந்த வித்யாவன குருகுல மாண வர்கள் ஆடி விடுமுறைக்காக ஆகஸ்டு மாதம் 9 ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 3 மணிக்கு மேல் அவரவர் ஊர்களுக்குப் புறப்படுவார்கள்.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்

இயற்றிய நூல்கள்

திருவாசகம் - பிரசார விலை		ரூ. 14-00
ஸ்ரீமத் பகவத்கீதை - பிரசார விலை		... 12-00
ஞானயோக விளக்கம்		... 8-00
ராஜயோக விளக்கம்		... 8-00
பக்தியோக விளக்கம்		... 6-00
பரமஹம்சரின் பெருமை		... 6-00
விவேகானந்த விவரணம்		... 4-00
ஸ்ரீ விவேகானந்தர் ஜீவிதம்		... 4-00
விவேகானந்த உபநிஷதம்		... 4-00
கடவுளின் வடிவங்கள்		... 4-00
சந்தேகம் தெளிதல் பாகம்-I		... 3-50
சந்தேகம் தெளிதல் பாகம்-II		... 3-50
தினசரி தியானம் - பிரசார விலை		... 3-25
ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேச மஞ்ஜரீ ஏழாம் பதிப்பு-பிரசார விலை		... 3-00
அனுஷ்டான வேதாந்தம்		... 3-00
எதிர்கால இந்தியா		... 3-00
ஸ்ரீ ராமகிருஷ்ணர் சரிதம்		... 2-00
தேவரகசியம் (முதலிய கதைகள்)		... 2-00
ஸ்ரீ சாரதா தேவியாரது சரிதம்		... 2-00
கண்ணன் என்னும் கடவுள்		... 2-00
தாயுமானவர் இயற்றிய		
பரிபூரணானந்தம்	விரிவுரை	... 3-00
சின்மயானந்த குரு	ஷை	... 3-00
ஆனந்தமானபரம்	ஷை	... 3-00
சுகவாரி	ஷை	... 3-00
மௌனகுரு வணக்கம்	ஷை	... 3-00
எங்குநிறைகின்றபொருள்	ஷை	... 2-50
பரசிவ வணக்கம்	ஷை	... 1-00
விரதவீரர் பீஷ்மர்	(நாடகம்)	... 1-50
பஜனைப் பாடல்கள்		... 1-50
சந்நியாசி		... 1-25
குழந்தைகளின் களிக்கூடம்		... 1-00
இராவண தத்துவம்		... 1-00
சகோதரி நிவேதிதை		... 1-00
காயத்ரீ		... 1-00
வாலிமோக்ஷம்	(நாடகம்)	... 1-00
தவப்புதல்வர்கள்	(நாடகம்)	... 1-00
ஏகலைவ்யனின் குருபக்தி	(நாடகம்)	... 1-00
தானவீரன் கர்ணன்		... 1-00
பார்வதி, லக்ஷ்மி, சரஸ்வதி கர்வபங்கம்		... 1-00
நோய்க்கு இடம் கொடேல்		... 0-80
நன்மக்களைப் பெறுதல்		... 0-80
பாண்டவ கௌரவ பெருமை	(நாடகம்)	... 0-80

ஆத்ம சக்தி		ரூ. 0-75
பாதுகா பட்டாபிஷேகம்	(நாடகம்)	... 0-75
இறைவணக்கம்		... 0-75
செத்தவர்கள் நம்மோடு பேசுகிறார்களா?		... 0-75
*மனிதனது நிஜசொரூபம்		... 0-70
*சக்தி தத்துவம்		... 0-70
*சிவ தத்துவம்		... 0-70
பிரஹ்லாதன்	(நாடகம்)	... 0-65
*ஈசன் எங்கும் நிறைந்துள்ளான்		... 0-60
இந்து மதமும் கிறிஸ்துவ மதமும்		... 0-60
*ஆலய வழிபாடு		... 0-60
*சூரிய நாராயணன்		... 0-50
*முருகக் கடவுள்		... 0-50
*விஷ்ணு தத்துவம்		... 0-50
தெய்வீக மகிமைகள்		... 0-50
சைவன் யார்?		... 0-50
கர்மகாண்டம் எது? ஞானகாண்டம் எது?		.. 0-50
மார்க்கண்டேயன்	(நாடகம்)	... 0-40
தபோபலன்	(நாடகம்)	... 0-40
*கணபதி		... 0-40
வர்ணாச்ரம தர்மம்		... 0-30
அருள்விருந்து 1 to 25 ஒவ்வொன்றும்		... 0-30
The Bhagavad Gita (9th Imp.)		... 15-00
The Indian National Education		... 8-00
Sri Lalithambika Sahasranama Stotram		... 8-00
Ramakrishna Lives Vedanta		... 8-00
Facets of Brahman or The Hindu Gods		... 5-00
Daily Divine Digest (DELUXE)		... 4-50
Daily Divine Digest (Ordinary)		... 2-50
Mahabharata (with plastic cover)		... 4-50
Ramayana	(do)	... 4-00
The Man Making Message of Vivekananda (with plastic cover)		... 4-00
Sri Vishnu Sahasranama Stotram		... 4-00
Siva Sahasranama Stotram		... 3-50
The Bhagavad Gita (Small Size)		... 3-00
Hinduism Hosts Christianity		... 3-00
Holy Bible—In the Light of Vedanta		... 1-50
*Introducing the Gita		... 1-50
TAT TVAM ASI (*That Thou Art*) IN Tayumana Swami		... 1-00
*Key to Higher Life		... 0-75
*The Teacher		... 0-60
*The Student		... 0-45

தேவையான புத்தகங்களுக்கு உரிய விலையுடன் தபால் கட்டணத்திற்காக ஸ்ரீமத் பகவத்கீதைக்கு ரூ. 3-25ம் தினசரி தியானத்திற்கு ரூ. 2-40ம் மற்ற வெளியீடுகளுக்கு ரூ. 2-50 முதல் 3-50 வரை சேர்த்து அனுப்புங்கள். *இக்குறியிட்ட புத்தகங்கள் ஏனைய பெரிய புத்தகங்களில் அடங்கியுள்ளன.

திருநெல்வேலி ஜில்லா

பாபநாசத்தில் அந்தர்யோகம் - 16

11, 12 & 13—8—79

பொதியமலை அடிவாரத்தில் இருக்கும் பாபநாசம் க்ஷேத்திரத்தில் 1979ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 11ஆம் தேதி சனி, 12ஆம் தேதி ஞாயிறு, 13ஆம் தேதி திங்கள் ஆகிய மூன்று நாட்களிலும் கீழ்க்கண்ட வாழ்க்கை முறைப்படி திருப்பராய்த்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம் ஸ்ரீமத் **சுவாமி நித்தியானந்தர் அவர்கள்** தலைமையில் அந்தர்யோகம் நடைபெறும். அம்பா சமுத்திரம் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து ஆறுமைல் தூரத்தில் பாபநாசம் என்னும் இந்த க்ஷேத்திரம் இருக்கிறது.

அந்தர்யோகத்தில் கலந்துகொள்ள விரும்பும் அன்பர்கள், நபர் ஒன்றுக்கு ரூ. 18-00 விதம், திருநெல்வேலி ஜில்லா, அம்பாசமுத்திரம், நூல் ஜவுளி வியாபாரம், திரு. **Sv. Rm. A. நடராஜ முதலியார்** அவர்களுக்கு மணியார்டர் மூலமோ, நேரிலோ செலுத்திப் பெயர்களைப் பதிவு செய்து, அனுமதி கார்டு பெற்றுக்கொள்ள வேண்டும். பதிவு பெற்ற முதல் 200 பேர்கள் மட்டுமே எடுத்துக் கொள்ளப்படுவார்கள். கலந்துகொள்ளாத அன்பர்களுக்குத் தொகை வாபஸ் செய்ய இயலாது. பதிவு செய்யப் பெற்றவர்களுக்குப் பதிலாக வேறு ஒருவர் எடுத்துக் கொள்ளப்படமாட்டார். பதிவு செய்துகொண்டவர்கள் அனைவரும் ஆகஸ்டு மாதம் 10ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலையே பாபநாசத்திற்கு வந்துசேரவேண்டும்.

தாய்மார்களும் இதில் கலந்துகொள்ளலாம். பன்னிரண்டு வயதுக்குக் கீழ்ப்பட்ட சிறுவர்களும், கைக்குழந்தைகளுடன் வரும் தாய்மார்களும், நடைமுறையைப் பின்பற்ற இயலாதவர்களும் இதில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டார்கள். தங்கள் சௌகரியத்திற்குத் தேவையான படுக்கை முதலியவற்றைத் தாங்களே கொண்டுவரவேண்டும்.

திருநெல்வேலி, நாகர்கோவில், திருக்குற்றாலம், தென்காசி, சங்கரன்கோவில் முதலிய இடங்களிலிருந்து பாபநாசத்திற்குப் போக பஸ்கள் கிடைக்கும். அம்பா சமுத்திரத்திலிருந்து பாபநாசத்திற்கு அடிக்கடி பஸ்கள் கிடைக்கும்.

சாதனை முறை

காலை	மணிமுதல்	மணிவரை
துயில் எழுந்திருத்தல்	5-00	
எல்லாரும் ஒன்றுகூடி நாமஜபம்	5-30	6-00
நீராடல் முதலியன	6-00	7-30
காலை தியானம்	7-30	8-00
சிற்றுண்டி	8-00	9-00
காலை உபந்யாசம்	9-00	10-00
மௌனம், உழவாரப்பணி	10-00	11-00
பஜனை	11-00	11-45
கோவில் வழிபாடு	11-45	12-30

மாலை	மணிமுதல்	மணிவரை
போஜனம், ஓய்வு	12-30	3-00
மாலை உபந்யாசம்	3-00	4-00
தனியாக வாசித்தல்	4-00	4-30
பானம், உலாவல், நீராடல் முதலியன	4-30	6-30
நாம ஜபம்	6-30	7-00
தியானம்	7-00	7-30
இரவு போஜனம்	7-30	8-30
ஸத் ஸம்பாஷணை	8-30	9-30

குறிப்பு:—மூன்றுவது நாள் திங்கள் மாலை 5 மணியுடன் அந்தர்யோகம் முடிவுபெறும்.

காரியதரிசி
Sv. Rm. A. நடராஜ முதலியார், அம்பாசமுத்திரம்.

சாந்தானந்த
ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

பாபநாசம் அந்தர்யோகத்தில் தபோவன வெளியீடுகள் விலைக்குக் கிடைக்கும்.

Edited by SWAMI NITHYANANDA,
Printed & Published by Swami Sankarananda at Tapovanam Printing School, Tirupparaitturai, Tiruchi Dt.